# கபிலித்தை கந்தசுவாமி கோயில் வரலாறும் மரபுகளும்

என்.கே.எஸ்.திருச்செல்வம்



ஆதாரம் அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

Oct 12, 2021

Subramania Swamy
( B.J.P Senior Leader)

**கபிலித்தை கந்தசுவாமிக் கோயில்**

**வரலாறும், மரபுகளும்**

என்.கே.எஸ்.திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிலித்தை கந்தசுவாமிக் கோயில்

## வரலாறும், மரபுகளும்

**என்.கே.எஸ்.திருச்செல்வம் B.A**
வரலாற்றுத்துறை, சென்னை பல்கலைக்கழகம்

வெளியீடு

ஆதாரம்

**ஆதாரம் அறக்கட்டளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கபிலித்தை கந்தசுவாமிக் கோயில்**
**வரலாறும், மரபுகளும்**
ஆசிரியர்: என்.கே.எஸ்.திருச்செல்வம்

உரிமை: என்.கே.எஸ்.திருச்செல்வம் ©

வெளியீடு: ஆதாரம் அறக்கட்டளை
கொழும்பு
1 ஆம் பதிப்பு: வைகாசி 2021
பக்கங்கள்: xiv+126=140
அச்சுப் பதிப்பு: குமரன் அச்சகம்
39, 36 வது ஒழுங்கை, கொழும்பு-06
தொ.பே.இல: 011-2364550

**Kabiliththai Kandasuwaami Koyil**
**Varalaarum, Marabugalum**
Author: N.K.S.Thiruchelvam

Copyright: N.K.S.Thiruchelvam ©

Publisher: Aathaaram Arakkattalai
Colombo
1st Edition: May 2021
Pages: xiv+126=140
Printed by: Kumaran Printers
39, 36th Lane, Colombo-06
Tel. 011-2364550

**ISBN NO: 978-955-3726-11-7**
**Price.Rs: 390.00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் எழுதிய நூல்கள்

1. தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்
2. பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும், கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்
3. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும், முனிவர்களும்
4. தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
5. இலங்கையில் இராவணன் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்
6. இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்
7. புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்
8. யார் இந்த இராவணன்?
9. போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்
10. தென்னிலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் இந்து சமயமும், தமிழும்
11. முன்னேஸ்வரம்-தொன்மையும் வரலாறும்
12. கன்னியா-பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்
13. கந்தன் கவசங்கள்
14. பண்டைய தமிழ் நூல்களில் சிவன்
15. கபிலித்தை கந்தசுவாமிக் கோயில்-வரலாறும், மரபுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

தென்னாடுடைய சிவன் மற்றும் எந்நாட்டவர்க்கும் இறைவர் ஆகிய ஆதி பரம்பொருள் ஆண்ட சிவபூமியில் சைவம் தழைத்த சுவடுகள் காலத்தால் புழுதி மூடி மறைக்கப்பட்டிருக்கும் இக்கால கட்டத்தில், அச்சுவடுகளை தூசுதட்டி மிளிரவைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நூலாசிரியர் திரு.திருச்செல்வம் அவர்கள், தந்தை இருந்த இடத்தில் தனையனுக்கும் சுவடுகள் இல்லாமலா போகும் என்பதனை நிரூபிக்க, இலங்கையில் முருக வழிபாட்டின் தொன்மை களை சான்று பகரும் கோயில்களை மையமாக வைத்து நூல் ஒன்றை எழுத முனைந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதும் பாராட்டப்பட வேண்டியதொன்றுமாகும்.

அவ்வகையில் முருக வழிபாட்டு தொன்மைகள் செறிந்து காணப் படுகின்ற இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கபி லித்தை முருகன் ஆலயத்தை மையமாக வைத்து எழுதப்பட்டிருக்கும் இந்த "கபிலித்தை கந்தசுவாமிக் கோயில்- வரலாறும், மரபுகளும்" எனும் நூலை வெளியிடும் சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு ஆதாரம் அறக்கட்டளை பெருமிதம் கொள்வதோடு, இடர்காலத்தை பொருட் படுத்தாது இந்த நூலை எழுதி முடித்த நூலாசிரியருக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கையில் சிவன், முருகன் உறவை உறுதிப்படுத்துவதாக யாழ்ப்பாணத்தில் ஆட்சியில் இருந்த நல்லூர் மன்னன் 13 மற்றும் 17 ஆம் நூற்றாண்டில் வெளியிட்ட நாணயங்கள் சான்று பகர்கின்றன. முன்புறம் மன்னனின் தலையும், பின்புறத்தில் சிவனுடைய வாகனமான நந்தியும் அதை நோக்கி அமர்ந்து உள்ள மயிலும், சேது என்ற வார்த் தையும் காணப்படுகின்றது. மயில் என்பது முருகனின் வாகனம். நந்தி அவருடைய தந்தையான சிவபெருமானின் வாகனம். ஆகவே இது தந்தைக்கும், மகனுக்கும் (சிவன்-முருகன்) இருந்த உறவை எடுத்துக் காட்டுவது போல அமைந்துள்ளது. மேலும் சங்க காலத்து சான்று களைப் பார்த்தோமேயானால் தமிழ்ச் சங்கங்களில் மூத்த சங்கமாகிய தலைச்சங்கம் சிவன் (திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்), அகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியன் (திண் திறல் புலமைக் குண்டிகைக் குறுமுனி) மற்றும் முருகன் (குன்று எறி இளஞ்சேய்) ஆல் இயக்கப்பட்டது என்றும், அங்கு முருகனை இளஞ்சேய் என குறிப்பிட்டிருப்பது ஒரே காலத்தில் தந்தை மகனாக இருந்த சிவன், முருகனுடைய உறவை பிரதிபலிக்கின்றதாக கொள்ளப்படுகின்றது. சில நூல்கள் இடைச் சங்கத்தை முருகனே தலைமை தாங்கியதாகவும் சொல்லுகின்றன. இது தந்தைக்குப்பின் தனையன் தமிழுக்கு ஆற்றிய சேவையாகக் கொள்ளப்படுகின்றது.

முருகனுடைய இரண்டாவது மனைவி வள்ளியின் பூர்வீகம் இலங்கை எனவும், முருகன் வேடனாக வந்து மாணிக்க கங்கையின் கரையோரத்தில் வள்ளியை மணம் புரிந்தாரெனவும் கதைகளில் படித்திருக்கிறோம். வேடுவர்கள் வாழும் காடுகள் சூழ்ந்த இடங்களில் பிரசித்தி வாய்ந்த முருகன் கோவில்கள் இருப்பதை வைத்து அக் கதைகளின் உண்மைத்தன்மையை சான்று பகர முடிகிறது. முருகன் வள்ளியை மணம் புரிந்தது "வள்ளிமலை" தலத்தில் என்கிறது கந்த புராணம். கதிர்காமத்தை அண்டியுள்ள வீரபாகு மலை, வள்ளியம்மன் மலை, தெய்வானை மலை குன்றுகள் வள்ளியை கதிர்காமத்தில் திருமணம் செய்ததாக கூறும் ஐதிகத்தை நம்ப வைப்பதாக உள்ளது.

சூரசம்காரம் இலங்கையின் தென்பகுதியில் கதிர்காமத்தை மையமாக வைத்து தான் நடந்தது என்றும் கூறப்படுகிறது. இந்த நூலில் குறிப்பிடப்படுகின்ற கபிலித்தை எனும் தலம் மொனராகல மாவட்டத்திலுள்ள யாள சரணாலயத்தின் மத்தியில் அமைந்துள்ள ஒரு முருகன் கோயிலாகும். இங்குதான் முருகப்பெருமான், ஆதியில் தவமியற்றி சக்திகளை பெற்றதாகவும், பின்னர் கதிர்காமத்தில் சூர சம்ஹாரத்தை முடித்துவிட்டு தனது தங்க வேலை எறிந்ததாகவும், அந்த வேல் ஓர் புளியமரத்தில் வீழ்ந்ததாகவும், அப்புளியமரத்தின் கீழ் வேடுவர்கள் முருகனின் வேலை வைத்து வழிபட்டு வந்ததாகவும் ஐதீகம் நிலவுகிறது.

ஆகவே இலங்கையில் தமிழின் தொன்மையை, சிவன் மற்றும் முருகன் வழிபாட்டின் தொன்மையூடாகவே அறிந்து கொள்ள முடியும் என்ற உண்மைய உணர்ந்து அத்தகைய செயற்பாட்டை எடுத்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியரை ஊக்குவிக்கும் பொறுப்பு ஆதாரம் அறக்கட்டளையாகிய எமக்கும் மற்றும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் உள்ளது என கூறிக்கொள்வதோடு, இந்த நூலை இலங்கை மற்றும் உலகம் வாழ் தமிழ் மக்களின் கைகளுக்கு கொண்டு போய் சேர்ப்பதில் ஆதாரம் அறக்கட்டளை அயராது உழைக்கும் என்பதையும் கூறி இச்சேவை மென்மேலும் தொடர்வதற்கு நூலாசிரியரை மீண்டுமொரு முறை வாழ்த்தி நூலை வெளியிட்டு வைக்கின்றோம்.

"ஆதாரத்தில் நின்று இனி தமிழ் உயரும், ஈழமும் உய்யும்"

**வரதராஜா கஜமுகன்**
**செயலாளர்**
**ஆதாரம் அறக்கட்டளை**
http://www.aathaaram.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**முருகா போற்றி, முருகா போற்றி, முருகா போற்றி. குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.**

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதி சுடரான இறைவனைப் பணிந்து இந்த வாழ்த்துரையை எழுதுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிவபூமி என்றால் அது இலங்கை தான் என்று பலரும் கருத்துக்கள் கூறலாம். ஆனால் வரலாற்று ரீதியாக நிரூபிப்பது சற்று கடினமான ஒன்று. இந்தக் கடினமான பணியை தனது வாழ்க்கையாகவே மாற்றி, தனி மனிதனாக ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று, அங்கு புதைந்து கிடக்கும் சிவபூமியின் சுவடுகளை ஆராய்ந்து, அதை மக்களுக்குப் புரியும்படி ஆதாரத்தோடு வழங்கி, நாம் வாழ்வது சிவபூமியே என நிரூபணம் செய்துள்ளார் இந்த நூலாசிரியரான திரு.திருச்செல்வம் ஐயா அவர்கள். இந்தப் அரிய பணியைச் செய்வதற்காகவே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட புனிதர் இவரே எனவும் கூறலாம்.

“கபிலித்தை கந்தசுவாமிக் கோயில்-வரலாறும், மரபுகளும்” எனும் இந்தப் புத்தகத்தைப் பற்றிக்கூற வேண்டுமானால், நம்மைப் பொறுத்த வரை இது முருகப் பெருமானின் ஏற்பாடே என்று கூற வேண்டும். நாம் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் கபிலவனத்திற்குச் சென்று முருகப் பெருமானைத் தரிசிப்பது வழக்கம். ஆனாலும் எமது மனதில் ஒரு பெரிய குறை ஒன்று இருந்தது. அதுதான் தமிழ்க் கடவுளான முருகனை தரிசனம் செய்ய தமிழர்கள் மிக மிகக் குறைவாகவே இங்கு வருகின்றனர் என்பதாகும். இதை எப்படி மக்களுக்குத் தெரியப்படுத்துவது என நாம் யோசித்தபோது முருகன் அருளால் எமக்கு திருச்செல்வம் ஐயா அவர்களின் தொடர்பு ஏற்பட்டது.

2020 ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி கபிலித்தையில் நாம் முதன் முதலாக அவரை சந்தித்தோம். அன்று அவரோடு நாம் பேசும் போது அவருக்கும் இதே ஆதங்கம் இருப்பது தெரிய வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எல்லோரினதும் மனக்குறையைத் தீர்க்கும் வண்ணம் முதன் முதலாக தமிழ் மொழியில் கபிலவனம் பற்றிய ஒரு நூல் வெளி வருவது மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அதேபோல் இப்பணியைச் செய்ய முருகப்பெருமான் திருச்செல்வம் ஐயா அவர்களைத் தேர்ந் தெடுத்துள்ளமை இரட்டிப்பு மகிழ்ச்சியைக் தருகிறது. நிச்சயமாக இலங்கை வாழ் தமிழர்கள் மட்டுமல்லாது, உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கு கபிலவனம் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இந்நூல் மிகமுக்கிய பங்கு வகிக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இலங்கையில் ஆன்மீகத் தேடல் உள்ளவர்களுக்கு நன்கு பரீட்ச யமான இராவணனின் உண்மை வரலாற்றை நமக்கு ஆதாரங்களோடு தந்தவர் திருச்செல்வம் ஐயா. மேலும் கதிர்காம பாத யாத்திரை, ஈழத்தில் அழிந்து புதைந்து போன கோயில்கள் என்று பல அரிய நூல்களை அவர் நம் மக்களுக்குத் தந்துள்ளார்.

நமது சித்தர் பீடம் சார்பாக ஐயா அவர்களை வாழ்த்துவதில் நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். ஐயா அவர்கள் நீண்ட ஆயுளு டனும், ஆரோக்கியத்துடனும்,வாழ்வில் அனைத்து வளங்களும் பெற்று, தங்கு தடையின்றி அவரது பணிகளை முன்னெடுத்துச் செல்ல எல் லாம் வல்ல பரபிரம்மத்தையும், சித்தர்களையும், கபிலவனக் கந்த னையும், கபிலேஷ்வரரையும் பிரார்த்திக்கின்றோம்.

**"ஓம் ஜெய் குருவே துணை."**

**நரசிங்க நவநீதன் சுவாமிகள்,**
**யோகி காக்கபுஜண்டர் கோபிநாத்,**
**சித்தர் பீட சித்த வித்தியார்த்திகள்,**
**சித்தர் பீடம் இலங்கை.**
சம்புகேஸ்வரர் சிவன் கோயில்,
சாம்பில்துறை, மாதகல், கீரிமலை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கதிர்காமத்தைப் போன்று சக்திமிக்க ஓர் முருகன் கோயில் யாள காட்டுக்குள் இருப்பதாக 10 வருடங்களுக்கு முன்பு அறியக் கிடைத்தது. அக்கோயில் பற்றிய விபரங்களைத் தேடிய போது அங்கு அடிக்கடி சென்று வரும் ஓர் சிங்கள இளைஞர் அறிமுகமானார். அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இரண்டு மூன்று தடவைகள் பேசியபின் அவர் எனது நண்பரானார். அவர் பெயர் தேசாந்த.

முருகப் பெருமான் மீது மிகுந்த பக்தி கொண்ட தேசாந்த ஒரு வருடத்தில் குறைந்தது மூன்று தடவைகள் இக்காட்டுக் கோயிலுக்கு சென்று வந்து தனது அனுபவங்களை வலைத்தளத்தில் பதிவிடும் வழக்கம் கொண்டவர். அக்கோயில் தான் யாள காட்டின் மத்தியில், கும்புக்கன் ஆற்றங்கரையில் "கபிலித்தை" என்னும் இடத்தில் அமைந்துள்ள முருகன் கோயில்.

அக்கோயிலுக்கு நானும் செல்ல வேண்டும் எனும் எனது விருப்பத்தைக் நண்பரிடம் கூறியபோது, என்னையும் தன்னோடு கூட்டிச் செல்வதாகக் கூறினார். நண்பர் தேசாந்த இக்கோயில் பற்றிய பல விபரங்களைத் கூறினார். அன்று முதல் கபிலித்தை முருகன் கோயில் பற்றி ஆராயத் தொடங்கினேன்.

இக்கோயில் கூமுனை அருகில் ஓடும் கும்புக்கன் ஆற்றின் கரையில் உள்ள மடத்துறை அம்மன் கோயிலில் இருந்து வடமேற்குப் பக்கத்தில் 24 கி.மீ தூரத்தில் கும்புக்கன் ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது. இக்கோயில் இவ்விடத்தில் அமையப்பெற்ற வரலாறு பற்றி ஆராய்ந்த போது இதுவரை நான் அறிந்திராத ஆச்சரியமான பல தகவல்கள் கிடைத்தன.

அதன் பின் இக்கோயிலுக்குச் செல்ல வேண்டும் எனும் ஆர்வம் அதிகரித்தது. பல தடவைகள் முயன்றும் செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. கடைசியில் 2014 ஆம் ஆண்டு அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. கபிலித்தைக் கோயிலுக்குச் சென்று முருகனைத் தரிசித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த அந்த முதல் பயணமானது விபரிக்க முடியாத ஓர் அனுப வத்தைக் கொடுத்தது.

அதன் பின்பு கபிலித்தை பற்றி மேலும் ஆராய்ந்தேன். அப்போது இன்னும் பல தகவல்கள் கிடைத்தன. அதன் பின்பு பல தடவைகள் இப்புனித தலத்திற்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது என் னோடு பல நண்பர்களையும் கூட்டிக் கொண்டு செல்லக் கூடியதாக இருந்தது. மேலும் இக்கோயிலுக்குச் செல்ல விரும்பிய பல நண்பர் களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்து, அவர்களும் கபிலித்தைக் கந்தனை தரிசிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

ஏராளமான நண்பர்கள் இக்கோயிலைத் தரிசிக்கவும், இது பற்றித் தெரிந்து கொள்ளவும் ஆவலுடன் இருந்தனர். எனவே இக்கோயில் பற்றி நான் ஆராய்ந்த விடயங்கள் எல்லாவற்றையும் ஒரு புத்தகமாக எழுதி வெளியிட வேண்டும் எனும் எண்ணம் ஏற்பட்டது. அவ் எண் ணத்தின் பயனாக இந்நூல் வெளிவருகிறது. கபிலித்தைக் கந்தசுவாமி கோயில் பற்றி தமிழில் ஒரு நூல் இல்லையே எனும் குறையை இந்நூல் தீர்த்து வைக்கும் என நம்புகிறேன்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய இலங்கை சித்தர் பீடத்தின் சுவாமி களான நரசிங்க நவநீதன் சுவாமிகள் மற்றும் யோகி காக்க புஜண்டர் கோபிநாத் சுவாமிகள் ஆகியோருக்கும், இந்நூலை வெளியிட முன் வந்த “ஆதாரம் அறக் கட்டளை” அமைப்பிற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**என்.கே.எஸ்.திருச்செல்வம்**
B.A - வரலாற்றுத்துறை
மார்கழி 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


**அறிமுகமும், அமைவிடமும்** ........ 1

**கபிலித்தை கோயில் அமைந்திருக்கும் கதிர்காம கந்தனின் புனித வனம்** ........ 1

**புனித வனத்தில் இராவணன் கால ஐதிகங்களும், அவை தொடர்பான சுவடுகளும்** ........ 6

**புனித வனப் பகுதியை ஆட்சி செய்த பாண்டிய சத்திரிய மன்னர்கள்** ........ 15

**கபிலித்தை கோயில் உருவான வரலாறு** ........ 19

**பெயர் வரக் காரணம்** ........ 19

**அபூர்வமான ஆலய அமைப்பு** ........ 20

**சூட்சுமமாக உலவும் சித்தர்கள்** ........ 20

**வேடர்கள் பயபக்தியுடன் வணங்கிய முருகன்** ........ 21

**வேடர் கால சம்பிரதாயங்கள்** ........ 23

**யாள காட்டில் சித்தர்கள் மற்றும் முனிவர்களின் சுவடுகள்** ........ 24

- கபில முனிவர் ........ *24*
- அகத்திய முனிவர் ........ *26*
- தன்வந்திரி முனிவர் ........ *27*
- புலத்திய முனிவர் ........ *28*
- விஷ்ரவசு முனிவர் ........ *29*
- சட்டைமுனி சித்தர் ........ *29*
- காசியப்ப முனிவர் ........ *30*
- காக்கை வண்ண சித்தர் ........ *30*
- போகர் ........ *31*
- பாபாஜி ........ *32*
- பதஞ்சலி முனிவர் ........ *32*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரக்க முனிவர் ........ *33*

**ஒல்லாந்தர் காலத்தில் கபிலித்தை முருகன் கோயில்** ........ 33

**ஆங்கிலேயர் காலத்தில் கபிலித்தை பற்றிய குறிப்பு** ........ 35

**கபிலித்தை கோயிலுக்குச் செல்வதற்கான வழிகள்** ........ 36

**கோயிலுக்குச் செல்வதற்கு முன் கடைப்பிடிக்க வேண்டிய விரத முறைகள்** ........ 38

**கபிலித்தை கந்தனின் சக்தியும், அற்புதங்களும்** ........ 39

**கபிலித்தை புனித யாத்திரை** ........ 51

**கபிலித்தையில் மீண்டும் எழுந்த கபிலேஸ்வர சிவலிங்கம்** ........ 100

**கொட்டியாகலையில் இருந்து கபிலித்தைக்கு செல்லும் மேற்குப்பக்கப் பாதை** ........ 102

**கபிலித்தை முருகன் கோயில் மூலமூர்த்திக்கு கும்புக்கன் ஆற்றில் நடைபெற்ற சிறப்புமிக்க அபிஷேகம்** ........ 110

**புதுப்பொலிவு பெற்ற சிவலிங்கம்** ........ 122

**உசாத்துணை நூல்கள்** ........ 124



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகமும், அமைவிடமும்

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அடர்ந்த காட்டுப்பகுதி யாள எனும் பெயரில் அழைக்கப்படுகிறது. இக்காட்டின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லையில் ஓடும் கும்புக்கன் ஆற்றின் கரையில் கபிலித்தை முருகன் கோயில் அமைந்துள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முருகப்பெருமான் இக்கோயிலில் குடிகொண்டதாகவும், அக்காலப்பகுதி முதல் கடந்த நூற்றாண்டு வரை இப் பகுதியில் வாழ்ந்து வந்த வேடர்களால் இக்கோயில் வழிபடப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.


இக்கோயில் கூமுனை அருகில் ஓடும் கும்புக்கன் ஆற்றின் கரையில் உள்ள மடத்துறை அம்மன் கோயிலில் இருந்து வடமேற்குப் பக்கத்தில் 24 கி.மீ தூரத்தில் கும்புக்கன் ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது.

# கபிலித்தை கோயில் அமைந்திருக்கும் கதிர்காம கந்தனின் புனித வனம்

கபிலித்தை கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள யாள காடு கிழக்கு மேற்காக 85 கி.மீ நீளமும், வடக்கு தெற்காக 46 கி.மீ அகலமும் கொண்ட பரந்த வனமாகும். சுமார் 1000 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்ட இப்பெரிய வனம் கதிர்காமம், கபிலித்தை, உகந்தை, மடத்துறை, தலைகுரு மலை, அகத்தியர் மலை, சித்தர் மலை ஆகிய இடங்களில் சக்திமிக்க வழிபாட்டுத் தலங்களை தன்னகத்தே கொண்ட புனித வனமாகும். கதிர்காமக் கந்தனின் அருளாட்சி மிக்க இடமானதால் இது சிங்கள மொழியில் "கத்தரகம தெவியன்கே அடவிய" என அழைக்கப்பட்டது. இது "கதிர்காமக் கந்தனின் வனம்" எனப் பொருள்படும். இன்றும் இக்காடு இப்பெயரில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையில் யாள வனத்தைக் குறிக்கும் தேசப்படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமக் கந்தன் சிங்கள மக்களால் போற்றி வணங்கப்படும் தெய்வமாகும். எனவே தான் கதிர்காமத்தை ஒட்டி அமைந்திருக்கும் இம் மிகப்பெரிய காடும் "கதிர்காமக் கந்தனின் காடு" என அழைக்கப் படுகிறது. யாள காட்டை இப்பெயர் கொண்டு அழைப்பதற்கு முக்கிய காரணம் ஒன்றும் உள்ளது.


முருகப் பெருமான் இந்தியாவில் இருந்து தங்கத் தோணியில் வந்து உகந்தையில் இறங்கி, அங்கிருந்து கால் நடையாக இக்காட்டின் ஊடாக கபிலித்தைக்குச் சென்று தங்கி, அங்கிருந்து கதிர்காமத்திற்குச் சென்று அங்குள்ள ஏழு மலையில் குடி கொண்டதாகவும், இதனால் முருகனின் பாதம் பட்ட இக்காட்டில் அவரின் அடிச்சுவட்டைப் பின் பற்றி அகத்திய மாமுனிவர் முதற்கொண்டு பல சித்தர்களும், முனிவர் களும் இக்காட்டின் ஊடாக பாத யாத்திரை சென்று கதிர்காமக் கந்த னையும், கபிலித்தைக் கந்தனையும் தரிசித்து வந்ததினால் இப்பெரிய வனம் "கதிர்காமக் கந்தனின் காடு" என அழைக்கப்பட்டது.

யாள வனம் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள் ளது. இதன் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகள் அம்பாறை, மொனரா கலை ஆகிய மாவட்டங்களிலும், தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகள் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அமைந்துள்ளன. மனித குடியிருப்பு கள் எதுவும் இல்லாத இவ்வனத்தில் அடர்ந்த காடும், மலைக் குன்று களும், வில்லுக் குளங்களும், நீர்க் களப்புகளும், காட்டறுகளும், சிற் றோடைகளும், பரந்த வெளிகளும் காணப்படுகின்றன. 45 வகையான மிருகங்களும், 255 வகையான பறவை இனங்களும், ஆயிரக் கணக் கான பூச்சி வகைகளும் இக்காட்டில் வாழ்கின்றன. இக்காடு அரிய பல வகையான மூலிகை மரங்களை தன்னகத்தே கொண்டது.

இவ்வனம் மொத்தமாக 979 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்ட தாகும். பொத்துவில்-சியம்பலாண்டுவ வீதியில் உள்ள லாகுகல பகுதி யில் ஆரம்பித்து, தென்மேற்குப் பக்கமாகப் பரந்து, விரிந்து திஸ்ஸமக ராமை-வெல்லவாயா வீதியில் உள்ள லுனுகம்வெஹெர குளம் வரை, கும்புக்கன் ஆறு மற்றும் மாணிக்க கங்கை ஆகிய இரு நதிகளையும் உள்ளடக்கி இவ்வனம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*யாள வனவிலங்குகள் சரணாலயத்தின் பிரிவுகளைக் குறிக்கும் தேசப்படம்*

இவ்வனம் 5 வலயங்களாகவும்,இவற்றின் அருகில் உள்ள மேலும் 6 வனங்களையும் சேர்த்து 11 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை யாள தெற்கு, கிழக்கு, வடக்கு, கல்கே வடக்கு, மேற்கு, (புளொக் 1, 2, 3, 4, 5) மற்றும் காட்டின் தென் கிழக்குப் பகுதியில் "கட்டாய மாக ஒதுக்கப்பட்ட இயற்கை வனம்" எனும் பெயரில் ஒரு பிரிவும், காட்டின் கிழக்கில் குமன வனம், குடும்பிகல வனம் எனும் 2 பிரிவு களும், காட்டின் மேற்கில் கட்டகமுவ வனம், கதிர்காமம் வனம் எனும் 2 பிரிவுகளும் அமைந்துள்ளன. இவற்றுடன் காட்டின் மேற்குப் பக்க த்தில் லுனுகம்வெஹெர வனம் எனும் புதிய பிரிவும் சேர்க்கப்பட்டு ள்ளது.


இவ்வனத்திற்குள் நுழைவதற்கு மொத்தமாக மூன்று நுழை வாயில்கள் உள்ளன. வடக்குப் பக்கத்தில் கல்கே நுழைவாயிலும், மேற் குப் பக்கம் கட்டகமுவ நுழைவாயிலும், தெற்குப் பக்கம் பலட்டுப்பான நுழை வாயிலும் அமைந்துள்ளன. இவ்வனத்தின் வடக்கு மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் பக்கம் ஓடும் கும்புக்கன் ஆறு இவ்வனத்தின் எல்லையாக அமைந்துள்ளது. இவ்வாற்றைக் கடக்கப் பாலங்கள் எதுவும் அமைக்கப் படவில்லை என்பதால் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நுழை வாயில்கள் அமைக்கப்படவில்லை.

கும்புக்கன் ஆற்றின் கிழக்குப் பக்கம் குமன பறவைகள் சரணா லயம் அமைந்துள்ளது. குமன காடு, யாள புனித வனத்தை ஒட்டி அமைந்துள்ளது. எனவே இவ்வனமும் கந்தசுவாமிக் கடவுளின் புனித வனமாகவே விளங்குகிறது. இக்காட்டின் வடக்குப் பகுதியில் உகந்தை முருகன் ஆலயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




*யாள வனவிலங்குகள் சரணாலயத்தின் புதிய பிரிவுகளைக் குறிக்கும் தேசப்படம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வனத்தில் இராவணன் கால ஐதிகங்களும், அவை தொடர்பான சுவடுகளும்

கந்தசுவாமிக் கடவுளின் புனித வனமான யாள வனப்பகுதியில் இராவணனுடன் நெருங்கிய தொடர்புள்ள பல இடங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். பண்டைய காலம் முதல் இவ்வனம் "இராவணனின் சக்தி மிக்க வனம்" என அழைக்கப்பட்டது. இது சிங்கள மொழியில் "ராவணா ராஜூகே சக்தி கலாபய" என வழங் கப்பட்டது. தெற்கில் கிரிந்த, திஸ்ஸமகராமை முதல் வடக்கில் கொட்டியாகல மற்றும் கிழக்கில் பானமை வரை இப்பெயரிலேயே அழைக்கப்பட்டதாக பானமைப் பகுதி மக்கள் கர்ண பரம்பரையாகக் கூறி வருகின்றனர். புத்த பகவான் இலங்கைக்கு வருவதற்கு முன்பு கதிர்காம பகுதியை ஆட்சி செய்து வந்த மகாசேனன் எனும் தெய்வம் தான் இராவணன் என பானமை மற்றும் கதிர்காமம் பகுதிகளில் உள்ள மக்கள் நம்புகின்றனர். அதே சமயம் மகாசேனன் என்பது முருகப் பெருமானின் இன்னுமோர் பெயர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இராவணனின் உப இராஜதானி


இராவணனின் உப இராஜதானி ஒன்று யாள வனத்தின் கிழக்கில் உள்ள குமன வனப்பகுதியில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இது உகந்தைமலை, அதன் மேற்கில் அமைந்துள்ள பம்பரகஸ்தலாவ என்று அழைக்கப்படும் நாகபார்வதமலை மற்றும் வடக்கில் அமைந்துள்ள குடு ம்பிமலை ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும். இதுவே இராவணனின் உப இராச்சியம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கு முக்கிய சான்றாக விளங்குவது இங்குள்ள ஒரு கல்வெட் டாகும். இதில் இராவணனின் பெயர் காணப்படுகிறது.

## இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டு


பம்பரகஸ்தலாவ என்று அழைக்கப்படும் நாகபார்வத மலைப் பகுதியில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட 19 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பம்பரகஸ்தலாவ என்று அழைக்கப்படும் நாகபர்வதமலை



குடும்பி மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பம்பரகஸ்தலாவ கல்வெட்டு*

இவற்றில் ஒரு கல்வெட்டில் இராவணன் எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் "பருமக ராவண ஜிதி சோகிலி லேனே ஸகஸ" என எழுதப்பட்டுள்ளது. இது "பெருமகன் இராவணனின் மகள் சோகிலியின் குகை சங்கத்திற்கு" எனப் பொருள்படும்.

இராவணனுடன் தொடர்புடைய இக்குகையை வழிவழியாகப் பயன்படுத்தி வந்த அவனின் பரம்பரையினர் இக்கல்வெட்டைப் பொறித்திருக்க வேண்டும். இங்குள்ள கல்வெட்டுக்களில் சிவன், நாகன் ஆகிய பெயர்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இராவணனால் அமைக்கப்பட்டு, வழிபடப்பட்ட சிவாலயம்**

உகந்தையில் அமைந்துள்ள முருகன் ஆலயம் ஆதி நாக இன மக்களால் தோற்றுவிக்கப்பட்டு வழிபடப்பட்டதாகவும், அதன் பின்பு இராவணனின் சகோதரனான குபேரன் நாக இனத்தவரை தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த காலகட்டத்தில் தானும் அவ்வாலயத்தை வழிபட்டதாகவும் நூற்குறிப்புகள் மூலம் தெரிய வருகிறது.


குபேரனுக்குப் பின் இலங்கையை ஆட்சி செய்த இராவணன் தேவஸ்திரீகளை சிறை வைத்திருந்த பாவம் நீங்க தட்சணாகிரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்தைகிரி ஆகிய மலைகளில் சிவாலயம் அமைத்து பூஜை வழிபாடுகள் செய்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

பொ.ஆ.பி 268ல் கிழக்கில் உன்னரசுகிரி இராச்சியத்தை சிங்க குமாரன் எனும் மன்னன் ஆட்சி செய்து வந்தபோது உகந்தைகிரி சிவாலயத்தை பெரிதாகக் கட்டினான். இவ்வாலயம் முன்பு இராவணனால் அமைக்கப்பட்டதால் ஆடி மாதமும், அமாவாசையிலும் இராவணனின் நினைவாக இங்கு தீபம் ஏற்றி வழிபடப்பட்டதாகவும் நூல்களில் கூறப்பட்டுள்ளது.



*உகந்தை மலை*

## இராவணன் ஆறு, கும்பகர்ணன் ஆறு மற்றும் வயல் வெளிகள்

பண்டைய காலத்தில் இராவணனின் தம்பியான கும்பகர்ணனின் ஆட்சியின் கீழ் இவ்வனப்பகுதி இருந்ததாகவும், இதன் காரணமாக இவ்வனத்தின் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதியில் ஓடும் ஆறு கும்பகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணன் ஆறு எனவும், மேற்குப் பகுதியில் ஓடும் ஆறு இராவணன் ஆறு எனவும் பெயர் பெற்றிருந்ததாகவும் இப்பகுதியில் வாழும் சிங்கள மக்கள் கூறுகின்றனர்.

கும்பகர்ணன் ஆறு பின்பு கும்புக்கன் ஆறு எனவும், இராவணன் ஆறு பிற்காலத்தில் மாணிக்க கங்கை எனவும் அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கும்பகர்ணன் காலத்தில் வற்றாத ஜீவ நதிகளாக விளங்கிய இவ்விரு ஆறுகள் மூலம் குளங்கள் கட்டி, கால்வாய்கள் வெட்டி இப்பகுதியில் பரந்த அளவில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் பட்டதாகவும், இராவணனின் ஆட்சியின் பின் இப்பகுதி கைவிடப்பட்ட நிலையில் சிதைவுற்று அடர்ந்த காடாக மாறியதாகவும் கூறப்படுகிறது.


பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் கதிர்காம சத்திரியர்களின் ஆட்சியின் போது இப்பெரிய வனப்பகுதி அவர்களின் முக்கிய ஆட்சிப் பகுதியாக விளங்கியது. அப்போது இங்கு மீண்டும் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. இன்றும் இக்காட்டில் இடையிடையே காணப்படும் வெளிகள் கும்பகர்ணனின் பராமரிப்பில் இருந்த வயல் நிலங்கள் எனவும் கூறப்படுகிறது.



*மாணிக்க கங்கை என்றழைக்கப்படும் இராவணன் ஆறு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*கும்புக்கன் ஓயா என்றழைக்கப்படும் கும்பகர்ணன் ஆறு*

**கும்பகர்ணன் கட்டிய கல்லணை**

யாள வனத்தின் கிழக்குப் பக்கம் ஓடும் கும்புக்கன் ஆற்றை மறித்துக் கட்டப்பட்டுள்ள ஒரு அணை இராவணனின் இராட்சத மனிதர்களால் கட்டப்பதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். குமன காட்டில் கும்புக்கன் ஆற்றின் அக்கரையில் அமைந்துள்ள மடத்துறை அம்மன் கோயிலில் இருந்து வடக்குப் பக்கமாக சுமார் 5 கி.மீ. தூரத்தில் "மகா கல் அமுன" என்னுமிடம் அமைந்துள்ளது. இது பெரிய கல் அணை எனப் பொருள்படும். இவ்விடத்தில் கும்புக்கன் ஆற்றின் குறுக்கே பாரிய கற்பாளங்களைப் போட்டு ஆற்று நீரை மறித்து, அவ் விடத்தில் கால்வாய் வெட்டி, நீரைக் கிழக்குப் பக்கம் திருப்பி நீர்ப் பாசனம் செய்யப்பட்டுள்ளது.

மனிதர்களால் தூக்க முடியாத மிகப்பெரிய கற்பாளங்களால் இக் கல்லணை அமைக்கப்பட்டுள்ளதால், இக்கல்லணை இராவணனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரனான கும்பகர்ணனால் இராட்சதப் படைகளைக் கொண்டு கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இலங்கையில் கட்டப்பட்ட கல்லணை களில் இதுவே மிகப் பழமையானதாகும். இவ்வணைதான் உலக வரலாற்றில் முதன் முதலாகக் கட்டப்பட்ட கல்லணை எனவும், உலகி லேயே முதன் முதலில் கல்லணை கட்டியவன் கும்பகர்ணன் எனவும் பேராசிரியர் சூரிய குணசேகர தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கும்பகர்ணன் இவ்வாற்றின் மூலம் சிறந்த நீர்ப்பாசனக் கால் வாய்களை உருவாக்கி, இப்பகுதியில் சுமார் 21,000 ஏக்கர் நிலப் பரப்பில் விவசாயத்தை மேற்கொண்டு நாட்டின் உணவு உற்பத்தியை மேம்படுத்தினான் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.



*இராட்சதர்கள் கட்டிய மகா கல் அமுன அணை*


ஆங்கிலேயர் காலம் வரை இப்பகுதியில் நீர்ப்பாசனம் வழங்கி வந்த இக்கல்லணை 1818 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெல்லஸ்ஸ கலக த்தின் போது,அக்காலகட்டத்தில் இப்பகுதியின் ஆட்சியாளராக இருந்த பிறவுன்ரிக் என்பவனால் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு மாணிக்க கங்கைக்கும், கும்புக்கன் ஆற்றுக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் ஆங்காங்கே சிறிய குடியிருப்புகளில் வாழ்ந்து வந்த விவசாய மக்கள் இங்கிருந்து அகற்றப்பட்டு, ஊவா பகுதியின் தெற்குப் பக்கம் குடியமர்த்தப்பட்டனர்.

அதுவரை சக்தியின் பிரதேசமாகவும், சிறந்த விவசாய நிலமா கவும், பொன் விளையும் பூமியாகவும் இருந்த இப்பகுதி அன்று முதல் வெள்ளையர்களால் யாள வனவிலங்குகள் சரணாலயமாக மாற்றப் பட்டது. விவசாய நிலங்கள் எல்லாம் அன்று முதல் அடர்ந்த காடாக மாறின. ஆங்கிலேய அதிகாரிகள் காட்டு விலங்குகளை பொழுது போக்கிற்காக வேட்டையாடுவதற்கு உகந்த இடமாக இக்காட்டைப் பயன்படுத்தி வந்தனர். பிரவுன்ரிக், என்கல் பிரேக், லெனார்ட் வூல்ப் போன்ற ஆங்கிலேய அதிகாரிகள் இக்காட்டுப் பகுதியைப் பராமரித்து வந்தனர்.



*கதிர்காமத்தில் உள்ள இராவணனின் சிலை அமைந்துள்ள கோயில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணனின் தாயின் வசிப்பிடம்

கதிர்காமத்துக்கும், கபிலித்தைக்கும் இடையில் உள்ள காட்டில் இராவணனின் தாய் கைகேசியின் வசிப்பிடம் ஒன்று இருந்ததாக இப் பகுதியில் வாழும் மக்கள் கர்ணபரம்பரையாகக் கூறி வருகின்றனர். இது "நில் மல் பெலஸ்ஸ" அல்லது "நில் மானெல் பெலஸ்ஸ" என அழைக்கப்படுகிறது. இவ்விடத்திலேயே கைகேசி வாழ்ந்து வந்ததாகவும் நம்பப்படுகிறது. மிகவும் சக்தி வாய்ந்த, அமானுஷ்ய மர்மங்கள் நிறை ந்த இவ்விடம் புதையல் திருடர்களின் கண்களுக்குக் கூட புலப்படுவ தில்லையாம். இதன் காரணமாகவே கதிர்காமத்தில் இராவணனின் சிலை ஒன்று அமைக்கப்பட்டு, சிங்கள மக்களால் வழிபடப்படுகிறது.

## இராவணன் கோட்டையின் எச்சங்கள்

யாள புனித வனத்தின் தென்பகுதியில் உள்ள கடலில் இராவண னின் கோட்டையின் எச்சங்கள் எனக் கருதப்படும் இரண்டு இடங்கள் உள்ளன. இவை சிறிய இராவணன் கோட்டை, பெரிய இராவணன் கோட்டை என அழைக்கப்படுகின்றன. இவை தென்பகுதிக் கடற் கரையில் இருந்து சுமார் 30 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளன.



*பெரிய இராவணன் கோட்டை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*சிறிய இராவணன் கோட்டை*

## புனித வனப் பகுதியை ஆட்சி செய்த பாண்டிய சத்திரிய மன்னர்கள்


யாள புனித வனம் சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன்பு கதிர் காம சத்திரிய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். பாண் டிய வம்சத்தைச் சேர்ந்த இம்மன்னர்களால் மீன் மற்றும் சுவாஸ்திகா சின்னத்துடன் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் பல இப்பகுதி யில் உள்ள கொட்டதாமுஹெல, போவத்தகல ஆகிய மலைகளில் உள்ள கற்குகைகளில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு ஆதாரங்க ளின் படி பாண்டிய சத்திரிய மன்னர்களின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக இம்மலைகள் விளங்கியிருக்கலாம் என எண்ணக் கூடியதாக உள்ளது. கந்தசுவாமிக் கடவுளின் காட்டுக் கோயில் அமை ந்துள்ள கபிலித்தையின் தெற்குப்பக்கத்தில் சில மைல் தூரத்தில் இவ் விடங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போவத்தகல மலை



கொட்டதாமுஹெல மலையில் பாண்டிய சத்திரிய மன்னர்கள் பொறித்த மீன் சின்னமும், சுவஸ்திகா குறியீடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*ஹெனன்னேகல மலைக்குகையில் காணப்படும் கல்வெட்டின் விபரங்கள் பற்றி அங்கு வைக்கப்பட்டுள்ள கற்பலகை*

கதிர்காமத்தை தலைநகராகக் கொண்டு இவர்களின் ஆட்சி நிலவியமையால் இவர்கள் "கஜரகம சத்திரிய" என அழைக்கப்பட்டனர். இவர்கள் ஒருவர் பின் ஒருவராக பத்து மன்னர்கள் ருகுனு பகுதியை ஆட்சி செய்து வந்தனர்.

கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களின் ஆட்சி கதிர்காமம் முதல் வடக்கில் சுமார் 150 கி.மீ தூரத்தில் உள்ள மாதுரு ஓயா பகுதி வரை நிலவியது. இதற்கு சான்றாக மாதுரு ஓயாவின் அருகில் உள்ள ஹெனன்னேகல என்னும் மலைக்குகையிலும், அங்கிருந்து தெற்குப் பக்கத்தில் உள்ள மாதனகந்த என்னும் இடத்தில் உள்ள மலைக் குகையிலும், யாள காட்டில் உள்ள இரண்டு மலைகளில் கதிர்காம சத்திரிய மன்னர்கள் பொறித்த சுவஸ்திகா மற்றும் மீன் சின்னத்துடன் கூடிய பிராமிக் கல்வெட்டுக்கள் போன்ற இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருக வழிபாட்டை மேற்கொண்ட கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்கள்

கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்கள் முருக வழிபாடு செய்த தாகவும், இவர்களால் இப்பகுதியில் பழைய முருக வழிபாட்டு அம்ச ங்கள் பேணப்பட்டதாகவும் அறிஞர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டு ள்ளனர். இவர்களை தேவநம்பிய தீசன் அனுராதபுரத்தில் நடைபெற்ற வெள்ளரசு மரக்கிளை நடும் வைபவத்திற்கு வரவழைத்தான் என மகா வம்சம் கூறுகிறது. இம்மன்னர்கள் அனுராதபுரத்தில் மரம் நடும் வைப வம் முடிந்து கதிர்காமத்துக்கு திரும்பும் போது வெள்ளரசு மரக்கிளை ஒன்றைக் கொண்டு வந்து கதிர்காம முருகன் கோயிலின் கருவறை யின் பின்பக்கம் நட்டனர். அதுவே இன்று நாம் முருகன் கோயிலின் பின் பக்கம் காணும் அரச மரமாகும்.

தேவநம்பிய தீசனின் தம்பியான மகாநாகனின் பேரனே கோதா பயன் என்பனாவான். இவன் கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்கள் பத்துப் பேரில் கடைசியாக கஜரகம இராச்சியத்தை ஆட்சி செய்தவர் களை அழித்து கஜரகம இராச்சியத்தைக் கைப்பற்றி ருகுனு பகுதி முழுவதையும் ஆட்சி செய்து வந்தான். சுமார் 50 முதல் 100 ஆண்டு காலம் கஜரகம இராச்சியம் பாண்டிய சத்திரிய மன்னர்களின் ஆட்சியின் கீழ் சிறப்புற்று விளங்கிய காலப்பகுதியில் கதிர்காமம் மட்டுமல்லாது கபிலித்தை போன்ற வழிபாட்டுத் தலங்களும் இவர் களால் சிறப்புடன் வழிபடப்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் கந்தசுவாமிக் கடவுளின் புனித வனத்தில் இவர்களின் மீன் சின்ன கல்வெட்டுக்கள் காணப்படும் முக்கிய நிலையங்களான கொட்டதாமுஹெல எனும் மலை கபிலித்தையின் தென்கிழக்கில் 5 கி.மீ தூரத்திலும், போவத்தகல எனும் மலை கபிலித்தையின் கிழக்கில் 17 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிலித்தை கோயில் உருவான வரலாறு

உகந்தையில் வீரபாகுத் தேவருடன் கரையிறங்கிய முருகப் பெருமான் உகந்தையில் இருந்து மடத்துறைக்கு வந்து தங்கியிருந்து, அங்கிருந்து கபிலித்தைக்குச் சென்று தங்கியிருந்து, அதன் பின்பு அங்கிருந்து கதிரமலைக்குச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

முருகன் கதிர்காமத்தில் சூரனை வதம் செய்த பின்பு மீண்டும் கபிலித்தைக்கு வந்து இங்கிருந்த புளியமரத்தின் கீழ் நிஷ்டையில் அமர்ந்ததாகவும், இப்புளியமரத்தின் அருகில் தான் முதன் முதலில் வள்ளியம்மனை முருகன் சந்தித்ததாகவும் கர்ணபரம்பரையாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக கதிர்காமத்தைப் போன்று கபிலித்தையும் ஓர் புனிதத் தலமாகக் கருதப்பட்டு வருகிறது.

## பெயர் வரக் காரணம்

கபிலித்தை எனும் பெயர் இவ்விடத்திற்கு எப்படி வந்தது என ஆராய்ந்தபோது இது பற்றிய மூன்று விடயங்கள் கிடைத்தன. கதிரமலைக்கு தீர்த்த யாத்திரை வந்த கபிலமுனிவர் இங்கிருந்த இத்திமரக் காட்டில் தங்கிச் சென்றதால் இவ்விடம் கபிலர் இத்திக்காடு எனப் பெயர் பெற்று அதுவே பின்பு கபிலித்தைக் காடு என மருவியதாகத் தெரிய வருகிறது.

மேலும் கபிலை என்பது தென் கீழ்த்திசை பெண்யானை என்பதைக் குறிப்பதாகும். இப்பிரதேசம் தென்கீழ் திசையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே கபிலை எனும் பெண் யானைகள் அதிகமாகக் காணப்படும் இத்திக்காடு எனும் அர்த்தத்தில் கபிலை இத்திக்காடு என அழைக்கப்பட்டு பின்பு கபிலித்தை எனும் பெயரைப் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

அடுத்ததாக கபிலச் சிலந்தி எனும் சிலந்தி இனங்கள் காணப்படும் இத்திக்காடு என்பதால் கபிலித்தை எனப் பெயர் பெற்றது எனவும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபூர்வமான ஆலய அமைப்பு

கபிலித்தை முருகன் கோயிலில் ஏனைய கோயில்களைப் போல கட்டிடங்கள் எதுவும் இல்லை. ஐயர் மற்றும் பூசாரிகள் யாரும் இல்லை. பழமை வாய்ந்த ஒரு புளிய மரமும், அதன் கீழே ஓர் சிறிய கல் மேடையுமே உள்ளன. இம்மேடையின் அருகில் வேல், சூலம், சிறிய முருகன் சிலைகள் போன்றவையே காணப்படுகின்றன. இப்புளிய மரமும், கல்லும், வேல், சூலம், முருகன் சிலை ஆகியவையுமே இவ்வாலயத்தின் அபார சக்தி மிக்க புனித சின்னங்களாகும். இப்புளிய மரத்தின் கீழேயே முருகப் பெருமான் என்றும் உறைந்திருப்பதாக நம் பப்படுகிறது. எனவே இவ்விடத்தை சிங்கள மொழியில் "சியம்பலாவே தேவாலய" என அழைக்கின்றனர்.

## சூட்சுமமாக உலவும் சித்தர்கள்

இப்புனித புளிய மரத்தைச் சுற்றி 30 அடி சுற்றளவுக்கு ஒரு புல், பூண்டு கூட வளராமல் சுத்தமாகக் காணப்படுகிறது. அடர்ந்த காட்டின் மத்தியில் இருக்கும் இவ்விடத்தில் மட்டும் புல்பூண்டு, செடிகள் முளை க்காமல் இருப்பது ஆச்சரியமாக உள்ளது. மரத்தில் இருந்து விழும் இலை, குலைகள் கூட இவ்விடத்தில் காணப்படுவதில்லையாம். எப் பொழுது பார்த்தாலும் இவ்விடம் கூட்டித் துப்பரவு செய்யப்பட்டது போல் இருக்குமாம். இங்கு சென்று வந்தவர்கள் எல்லோரும், இவ் விடம் எப்பொழுதும் சுத்தமாகவே இருப்பது ஆச்சரியமாக உள்ளது எனக் கூறுகின்றனர். மனித சஞ்சாரம் இல்லாத இக்காட்டில், மரங்கள் வளர்ந்து, அடர்ந்து காணப்படும் வனத்தில் ஆலயவளவு மட்டும் இலை குலைகள் கூட இல்லாமல் புல் பூண்டு வளராமல் இருப்பது எப்படி? கந்தக் கடவுளின் அற்புதங்கள் நிறைந்த இப்புனித வனத்தில் முருகப் பெருமானைத் தரிசிக்க வந்து, கபிலித்தைப் பகுதியிலேயே தங்கியிருந்து அங்கேயே சமாதியான சித்தர்களும், முனிவர்களுமே இங்கு சூட்சுமமாக உலாவுவதாகவும், அவர்களே காட்டின் மத்தியில் உள்ள இத்திறந்தவெளி மரக்கோயிலைப் பராமரித்து வருவதாகவும், இவ்வாலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு பாதுகாப்பாகவும், துணையா கவும் இருப்பதாகவும் நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்த்த ஜாமத்தில் சித்தர்கள் நடத்தும் பூசையும், மணி ஓசையும்

கபிலித்தை கந்தனின் புனித புளியமரக் கோயிலில் நடு இரவில், அர்த்த ஜாமத்தில் இங்கு சூட்சுமமாக உலவும் சித்தர்களும், முனிவர்களும் முருகப்பெருமானுக்கு பூஜை செய்வதாகவும், முன்பு இப்பூசையின் போது யானை வந்து மணி அடிப்பதாகவும், தாம் இம்மணிச் சத்தத்தைக் கேட்டுள்ளதாகவும் இங்கு அடிக்கடி வந்து செல்லும் கப்புறாளைகள் கூறுகின்றனர். சில வருடங்களுக்கு முன்பு அக்கரையில் கோயில்களில் இருந்த மணிகள் எல்லாம் அகற்றப்பட்டு விட்டதாகவும், தற்போது நடுஇரவில் அப்பகுதியில் இருந்து மந்திர ஒலி போன்ற விசித்திரமான ஓசைகளும், இரைச்சல்களும் மட்டுமே கேட்பதாகவும் கூறுகின்றனர்.

அண்மையில் நடு இரவில் ஒரு பூசை செய்வதற்காக இராணுவத்தினர் பலர் புனித புளிய மரத்தடிக்குச் சென்றபோது ஏராளமான கரடிகள் புனித மரத்தைச் சுற்றிப் படுத்திருந்ததாகவும், கரடிகளுக்கு எந்த வித தொந்தரவும் செய்யாமல், பூஜையைக் கைவிட்டு விட்டு இராணுவத்தினர் திரும்பி வந்ததாகவும் கூறுகின்றனர்.

அவ்விடத்தின் புனிதத் தன்மையை காப்பதற்காகவே இங்கு சூட்சுமமாக உலவும் சித்தர்களும், முனிவர்களும் இரவில் கரடிகள் மற்றும் நாகங்கள் உருவத்திலும், பகலில் யானைகள் உருவத்திலும் இங்கு நடமாடுவதாகவும் கூறப்படுகிறது.

## வேடர்கள் பயபக்தியுடன் வணங்கிய முருகன்

மிகப்பண்டைய காலத்தில் யாள காட்டில் வாழ்ந்த வேடர்களாலேயே கபிலித்தையில் முருகன் கோயில் உருவாக்கப்பட்டது. வேடர்களால் வழிபாடு செய்யப்பட்டதோடு, தவறு செய்பவர்களுக்கு தண்டனை வழங்கும் இடமாகவும், ஒருவருக்கொருவர் ஏற்படும் பிரச்சினைகளின் போது சத்தியம் செய்யும் இடமாகவும், பரிகாரம் தேடும் இடமாகவும் மிகவும் பயபக்தியுடன் வேடர்களால் வணங்கப்பட்ட புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தலமாக இது விளங்கியது. வேடர் காலத்தில் இருவருக்கிடையில் பிரச்சினைகள் உண்டாகும்போது எல்லோரும் ஒன்று சேர்ந்து சம்பந்தப் பட்ட இருவரையும் முருகன் சந்நிதிக்கு கூட்டிக் கொண்டு வருவார்க ளாம். பிரச்சினை உள்ள இருவரும் முருகப்பெருமானுக்கு பிரசாதங்கள் படைத்து, மண்டியிட்டு தத்தமது மனக்குறைகளையும், பிரச்சினைகளை யும், தமது பக்கத்தில் உள்ள நியாயங்களையும் கூறி இங்கிருக்கும் இரண்டு பாறைகள் மீது சத்தியம் செய்து, அவற்றை இறக்கி வைத்து விட்டுச் செல்வார்களாம். இவ்வாறு செய்த பின் அன்றிரவு இருவரில் தவறு செய்தவருக்கு அம்மனின் சிறுத்தை வந்து தண்டனை வழங்கு வதாகவும் வேடர்கள் நம்பினார்கள்.

கபிலித்தையின் கிழக்குப் பகுதியில் உள்ள பானமை, சலவை, வாகூரை, வதகம, கூமுனை, மியான்கொடை ஆகிய ஊர்களில் வாழ் ந்த வேடர்களே கபிலித்தையில் இருக்கும் முருகனை தமது குலதெய்வ மாக வழிபட்டு வந்தனர்.

கபிலித்தைப் பகுதியின் வடக்கு, வடமேற்கு பகுதிகளில் உள்ள ஒக்கம்பிட்டிய, மொனறாகலை, கொட்டியாகல, சியம்பலாண்டுவ, ஆகிய இடங்களில் வாழும் மக்களும் பண்டைய காலம் முதல் இவ் வாலயத்தை பயபக்தியுடன் போற்றி வணங்குகின்றனர். இவர்களே இன்றும் இவ்வாலயத்திற்கு அடிக்கடி வருவதோடு தங்கள் மனக் குறை கள், பிரச்சினைகள், வேண்டுதல்கள் போன்றவற்றை இச்சந்நிதியில் உள்ள கந்தசுவாமிக் கடவுளின் முன் வைக்கின்றனர்.

தமது விளை நிலங்களில் அறுவடை செய்யும் நெல் மற்றும் தானியங்களை பூசாரிகளுடன் வந்து முதன் முதலில் இம்முருகன் சந் நிதியில் படைத்து, பூஜை மற்றும் விழாக்களை நடத்துகின்றனர். இவர் களுக்கும், பண்டைய வேடர் சமூகத்திற்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. கபிலித்தைக் கந்த சுவாமிக் கோயிலின் புனிதத்தன்மை இங்கு உல்லாசமாக வரும் மக்களால் எந்த சந்தர்ப்பத்திலும் கெட்டுப் போய் விடக்கூடாது என்பதில் கண்ணும், கருத்துமாக விளங்குபவர் களும் இம்மக்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடர் கால சம்பிரதாயங்கள்

கபிலித்தையில் வேடர்கால சம்பிரதாயங்கள் பல உள்ளன. கும்புக்கன் ஆற்றைக் கடந்து அக்கரையில் உள்ள கோயிலுக்குப் போகும் முன்பு இக்கரையில் தங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்த பின்பே ஆற்றைக் கடந்து முருகன் கோயிலுக்குச் செல்கின்றனர். ஏனெனில் கோயில் அமைந்திருக்கும் இடத்தில் யாரும் தங்குவதில்லை.

கோயிலுக்குச் செல்வதற்கு முன்பு கும்புக்கன் ஆற்று மணலில் ஏழு பூவல்கள் தோண்டி, அதில் மஞ்சள் தூள் இட்டு கலக்கி, அதில் ஏழு பூக்களைப் போட்டு, ஒவ்வொரு பூவலில் இருந்தும் ஏழு தடவைகள் நீரை எடுத்துக் குளிக்க வேண்டும். பின்பு ஏழு தானியங்கள், ஏழு பழங்கள், ஏழு பூக்களுடன் ஈரத்துணியுடன் அக்கறையில் உள்ள கோயிலுக்குச் சென்று வணங்க வேண்டும்.

கோயிலுக்குக் கொண்டு செல்லும் பாத்திரங்கள், விளக்குகள், பழங்கள், பூக்கள் எல்லாவற்றையும் மணலில் தோண்டிய பூவலில் மஞ்சள் தூள் இட்டு கலக்கிய அந்நீரில் கழுவிய பின்பே கொண்டு செல்ல வேண்டும். வேடர்கள் கடைப்பிடித்து வந்த இப்பழமையான வழமை தற்போது சற்று மாற்றமடைந்து விட்டது. தற்போது கும்புக்கன் ஆற்றில் குளித்து விட்டு வெள்ளை உடுப்பு உடுத்தி, இக்கரையில் இருக்கும் அரச மரத்தையும், அதன் அருகில் உள்ள பத்தினி அம்மனையும், வணங்கி விட்டே ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் சென்று முருகனை வணங்குகின்றனர்.

பண்டைய காலத்தில் புனிதமான புளியமரத்தடியில் வேடர்கள் கடைப்பிடித்து வந்த சத்தியம் செய்யும் வழக்கத்தை இப்போது கபிலித்தையில் யாரும் செய்வதில்லை. அன்று வேடர்களால் கடைப்பிடிக்கப் பட்டு வந்த சம்பிரதாயங்கள் பலவற்றில் தற்போது மாற்றங்கள் ஏற் பட்டு விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாள காட்டில் சித்தர்கள் மற்றும் முனிவர்களின் சுவடுகள்

கபிலித்தை கந்தசுவாமி கோயில் அமைந்திருக்கும் யாள காட்டில் சித்தர்கள் மற்றும் முனிவர்கள் தாங்கிச் சென்றமைக்கான சுவடுகள் பல காணப்படுகின்றன.

## கபில முனிவர்

கபில முனிவர் கபிலித்தை எனும் இத்திருத்தலத்துடன் நெருங்கிய தொடர்புடையவராவார். இவரே கபிலித்தை எனும் இப்பெயர் வரக் காரணமானவர் ஆவார். இது பற்றிய விபரங்கள் ஏற்கனவே கூறப் பட்டுள்ளன.

கதிரமலைக்கு தீர்த்த யாத்திரை சென்றவர்களில் கபில முனிவர் முக்கியமானவர். இவர் வேதகால முனிவர்களில் ஒருவராவார். மகா விஷ்ணுவின் 24 அவதாரங்களில் ஒரு அவதாரமாகக் கருதப்படும் கர்தாம முனிவருக்கும், தேவ யுவதிக்கும் மகனாகப் பிறந்தவரே கபில முனிவராவார். சமக்கிய சாஸ்திரத்தை உருவாக்கியவரும், பக்தியோக மார்க்கத்தை கற்பித்தவரும் இவரே.

பௌத்த மரபின்படி சிறந்த தத்துவஞானியாக விளங்கிய கபிலரின் சீடர்களால் உருவாக்கப்பட்ட நகரமே கபிலவஸ்து எனத் தெரியவரு கிறது. புத்தபகவான் 29 வருடங்கள் கபிலவஸ்துவில் வாழ்ந்தார். புத்தர் இங்கு கபில முனிவரிடம் பல்வேறு கருத்துக்களை பரிமாறியதோடு வேதகால தெய்வங்கள், தியானத்தின் முக்கியத்துவம், துன்பங்களில் இருந்து விடுபடும் வழிமுறைகள், பிராமண தத்துவத்தின் கோட்பாடுகள் போன்றவற்றையும் தெரிந்து கொண்டார்.

கபில முனிவர் இலங்கையில் இருந்தமைக்கும், கதிரமலைக்கு தீர்த்த யாத்திரை சென்று அங்கு ஓரிடத்தில் தங்கியிருந்தமைக்கும் சில ஆதாரங்கள் உள்ளன. கேகாலை மாவட்டத்திலுள்ள திவேலா என்னு மிடத்தில் உள்ள மலைக்குகையில் கபில முனிவரின் பெயர் பொறிக்கப் பட்ட பிராமிக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்வெட்டில் "ஆச்சார்ய கபில" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. பக்தி யோகமார்க்கம், சமக்கிய தத்துவம் ஆகியவற்றை கற்றுக்கொடுத்த ஞானி எனும் வகையில் கல்வெட்டில் இவர் "அறிஞர் கபிலர்" எனும் அடைமொழியுடன் குறிப்பிடப்பட்டுள்ளார். இம்மலைக்குகையில் கபில முனிவர் தங்கியிருந்து தியானத்தில் ஈடுபட்டுள்ளார். இவருக்குப் பின் வந்த கபில முனிவரின் சீடர்கள் இக்குகையைப் பரம்பரை பரம்பரை யாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலத்தில் கபிலர் பெயரிலையே கல்வெட்டைப் பொறித்துள்ளனர்.

இலங்கையின் வரலாற்றுக்கு பல நூற்றாண்டுகள் முற்பட்ட காலங்களில் இங்கு வந்து சென்ற முனிவர்களும், சித்தர்களும் இங்கு தங்கிச் சென்ற கற்குகைகளை அவர்களின் சீடர்களும், விசுவாசிகளும் பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து பயன்படுத்தி வந்துள்ளதோடு, பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட காலத்தில் தத்தம் குருவின் பெயரிலேயே கல்வெட்டுக்களை எழுதியுள்ளமை இங்கே உற்று நோக்கத் தக்கது.

கபில முனிவர் இலங்கையில் தங்கியிருந்த இன்னும் ஓர் இடம் குருநாகல் மாவட்டத்தில் காணப்படுகிறது. குருநாகலில் இருந்து வாரியப்பொலைக்கு செல்லும் வழியில் சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தில் நாதகனே எனும் மலை அமைந்துள்ளது. இம்மலையில் கபில முனிவர் தங்கியிருந்துள்ளார். இதனால் இம்மலை பண்டைய காலத்தில் கபில மலை என அழைக்கப்பட்டுள்ளது. மலையின் அடிவாரத்தில் காணப்படும் பௌத்த வழிபாட்டு தலம் "கபில விகாரை" எனப் பெயர் பெற்றுள்ளது.

இப்பகுதி பண்டைய காலத்தில் பிராமணர்கள் வாழ்ந்த இடமாகும். கபில மலையின் மேற்குப் பக்கத்தில் 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இடமே பிராமணர் கோட்டை அமைந்திருந்த பகுதியாகும். இவ்விடம் "பமுனு கொட்டுவ" என அழைக்கப்படுகிறது. பமுனு கொட்டுவ என்பதன் பொருள் பிராமணர் கோட்டை என்பதாகும். பிராமணர்கள் இருந்த இவ் இடத்திலேயே கபில முனிவர் தங்கியிருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபில முனிவர் கதிரமலைக்கு தீர்த்த யாத்திரை செல்லும்போது கந்தக் கடவுளின் புனித வனத்தில் உள்ள ஓர் இடத்தில் தங்கி முருகப்பெருமானை தரிசித்துவிட்டு அங்கேயே தியானத்தில் ஈடுபட்டு உள்ளார். உகந்தையில் வந்திறங்கிய முருகப் பெருமான் அங்கிருந்து கதிரமலைக்கு செல்லும் வழியில் கும்புக்கன் நதிக்கரையில் அடர்ந்த காட்டின் நடுவில் ஒரு இடத்திலே இருந்த புளிய மரத்தின் கீழ் முதன் முதலில் குடிகொண்டதாகவும், பின்பு அங்கிருந்து கதிரமலைக்குச் சென்று அங்கே அமர்ந்ததாகவும், பின்பு சூரசம்காரத்தை முடித்தபின் மீண்டும் அவ்விடத்திற்கு வந்து நிஷ்டையில் அமர்ந்ததாகவும் கூறப் படுகிறது.

முருகன் முதல் முதலில் குடிகொண்ட அவ்விடத்தில் இத்தி மரங் கள் நிறைந்து காணப்பட்டன. கபில முனிவர் அங்கு சென்று முருகப் பெருமானை தரிசித்ததோடு அங்கு பல நாட்கள் தங்கியிருந்து சென்ற படியால் அவ்விடம் கபிலர் இத்திகாடு எனப் பெயர் பெற்று அழைக்கப் பட்டது. அதுவே காலப்போக்கில் திரிபடைந்து இன்று கபிலித்தை என அழைக்கப்படுகிறது.

## அகத்திய முனிவர்

சித்தர்களுக்கெல்லாம் மகா சித்தர் எனப் போற்றப்படும் அகத்திய மாமுனிவர் இவ்வனத்தில் தங்கிச் சென்றமை தொடர்பான சில இடங் களும், பிராமிக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றது. இவ்வனத்தில், கபிலித்தையின் தெற்கில் 28 கி.மீ. தூரத்தில் காணப்படும் மிகப்பெரிய மலையொன்று யானை மலை எனவும், இம்மலையின் உச்சி "ஆகாச சைத்திய" எனவும் அழைக்கப்படுகிறது. இது "அகஸ்திய" என்பதன் திரிபாகும். இம்மலையில் அகஸ்திய முனிவர் தங்கிச் சென்றுள்ளார் எனவும் யூகிக்கக் கூடியதாக உள்ளது. இம்மலையில் உள்ள ஓர் குகை யில் உள்ள கல்வெட்டில் சிவனின் குகை என பிராமி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே இக்குகையில் இருந்த சிவனை அகத் தியர் வழிபட்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிருந்து வடமேற்கில் 4 கி.மீ தூரத்தில் சித்தர் மலை அமைந்துள்ளது. கபிலித்தையின் தென்மேற்கில் 28 கி.மீ தூரத்தில் உள்ள இம்மலை சித்துள்பவ்வ என அழைக்கப்படுகிறது. சித்தர் மலை யின் அருகில் தெகுந்தரவெவ எனும் மலைப்பகுதி அமைந்துள்ளது. இங்குள்ள மலைக்குகையில் அகத்தியரின் சீடர்கள் பொறித்த பிராமிக் கல்வெட்டில்“சுவாமி அக்கிதேவனின் குகை” எனப் பொறிக்கப்பட்டுள் ளது. அக்கிட, அகித்த, அக்கி ஆகிய பெயர்கள் அகத்தியரைக் குறிப் பதாகும். அபித்த ஜாதக எனும் பாளி மொழி நூலில் அகத்தியரை “பிராமண முனிவர் அகித்த” எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை இக் கூற் றுக்கு சான்றாக அமைகிறது. எனவே இக்குகை அகத்திய முனிவர் பயன்படுத்திய குகையாக இருக்க வேண்டும்.

கபிலித்தையின் தென்மேற்கில் 6 கி.மீ தொலைவில் “தலகுரு ஹெல” எனும் மலை அமைந்துள்ளது. இது தலைக்குரு மலை என்பதன் திரிபாகும். குருவிற்கெல்லாம் தலைமை குருவாக விளங்கிய அகத்திய மாமுனிவர் தங்கிச் சென்ற மலை என்பதால் இம்மலை “தலை குரு மலை” எனப் பெயர் பெற்றிருந்தது. கதிரமலைக்குச் சென்று முருகனைத் தரிசித்த பின் கபிலித்தைக்கு வந்த அகத்திய முனிவர் அங்கு நிஷ்டையில் அமர்திருக்கும் முருகனை தரிசித்துச் சென்றபோது இம்மலையில் தங்கிச் சென்றுள்ளார் என நம்பப்படுகிறது. 250 மீற்றர் உயரமான இம்மலையின் சிகரம் சிவலிங்கத்தைப் போன்ற வடிவமைப்பைக் கொண்டுள்ளதால் அகத்தியர் இம்மலையில் சிவலிங்க த்தை ஸ்தாபித்து சிவனை வழிபட்டுச் சென்றிருப்பார் எனக் கருதலாம்.

## தன்வந்திரி முனிவர்

ஆயுர்வேத மருத்துவத்தின் அதிபதி எனப் போற்றப்படும் தன்வந் திரி முனிவர் கந்தக் கடவுளின் புனித வனத்தில் தங்கிச் சென்று கதிர் காமக் கந்தனை வழிபட்டுள்ளார். இதற்கு ஆதாரமாக இவ்வனத்தில் ஓர் இடம் அமைந்துள்ளது.

இவ்வனத்தில் ஓடும் மாணிக்க கங்கையைக் கடப்பதற்கு கங்கை யின் குறுக்கே காட்டில் ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இது வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹன பாலம் என அழைக்கப்படுகிறது. இவ்விடத்தின் அருகில் பிரா மணர் துறை என்னுமிடம் அமைந்துள்ளது. பிராமணர் துறையின் மேற் குப்பக்கம் உள்ள ஓர் வெளி "வந்திரிகே எலிய" எனப் பெயர் பெற்று ள்ளது. இது "தன்வந்திரி வெளி" என்பதன் திரிபாகும். இவ்வெளி வேல்கண்ட மலையின் வடமேற்கில் 4 கி.மீ தூரத்தில் காணப்படுகிறது.

இவ்விடம் கபிலித்தையின் தென்மேற்கில் 23 கி.மீ தூரத்தில் காணப்படுகிறது. தன்வந்திரி முனிவர் கதிரமலையில் முருகனைத் தரி சித்தபின், இவ்விடத்திற்கு வந்து தாங்கிச் சென்றுள்ளார். அவர் இங்கி ருந்து கபிலித்தைக்குச் சென்று முருகனை வழிபட்டிருப்பார் எனவும் கூறப்படுகிறது.

## புலத்திய முனிவர்

இராவணனின் தந்தை வழிப் பாட்டனாரான புலத்திய முனிவர், புலத்தி நகரைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த தாகத் தெரிய வருகிறது. இதுவே இன்றைய பொலநறுவையாகும்.

புலத்தியர் இங்கிருந்து கதிரமலைக்குச் சென்று முருகனைத் தரிசி த்து வரும் வழியில் கந்தக்கடவுளின் புனித வனத்தின் வடமேற் கெல்லையில் அமைந்திருக்கும் கோமாரிக்காகல என்னுமிடத்தில் உள்ள மலைப் பகுதியில் உள்ள கற்குகையொன்றில் தங்கிச் சென்றுள்ளார். அக்குகையில் அவரின் சீடர்களால் பிராமி எழுத்தில் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில் "பருமக புலய" என புலத்தியரின் பெயர் எழுதப்பட்டுள்ளது. பருமக என்பது தலைவன், அரசன் எனப் பொருள்படும். புலத்தி நகரை ஆட்சி செய்த அரசன் என்ற வகையில் பருமக எனக் குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

கந்தக்கடவுளின் புனித வனத்தின் வடஎல்லையில் உள்ள மாளி காவில என்னுமிடத்தில் புலத்தியர் ஒரு மூலிகை வனத்தை அமைத் திருந்தார் என சில குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது. கபிலித்தையின் மேற்கில் 39 கி.மீ தூரத்தில் கோமாரிக்காகல மலைக்குகையும், வட மேற்கில் 23 கி.மீ தூரத்தில் மாளிகாவிலயும் அமைந்துள்ளன. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலத்திய முனிவரும் கபிலித்தைக்கு வந்து முருகனைத் தரிசித்து சென் றுள்ளார் எனக் கூறப்படுகிறது.

## விஷ்ரவசு முனிவர்

விஷ்ரவசு முனிவர் இராவணனின் தந்தையார் ஆவார். இவர் கந்தக்கடவுளின் புனித வனத்திற்கு சென்று வந்துள்ளமைக்கான ஆதா ரங்கள் சில இவ்வனத்தில் காணப்படுகின்றன.

கபிலித்தையின் கிழக்கில் 21 கி.மீ தூரத்தில் உள்ள பம்பரகஸ்த லாவ என்னுமிடத்தில் உள்ள மலைக் குகையிலும், கிழக்கில் 17 கி.மீ தூரத்தில் உள்ள கோன்கல்லு என்னுமிடத்தில் உள்ள மலைக்குகை யிலும் விஷ்ரவசு முனிவரின் பெயர் பொறிக்கப்பட்ட இரண்டு பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஒன்றில் "பத்த வெசஹ லேனே" (சுவாமி வெசகனின் குகை) எனவும், அடுத்த கல்வெட்டில் "பத்த வசஹ லேனே" (சுவாமி வசகனின் குகை) எனவும் பொறிக்கப்பட்டு ள்ளது. வெசஹ, வசஹ எனும் பெயர்கள் விஷ்ரவசு எனும் பெயரின் சுருக்கமாகும். இவர் ஒரு முனிவர் என்பதால் சுவாமி எனும் அடை மொழி கல்வெட்டில் பயன்படுத்தப் பட்டுள்ளது எனக் கருதலாம்.

மேலும் ஒரு பிராமிக் கல்வெட்டு கபிலித்தையின் நேர்வடக்கில் 47 கி.மீ தூரத்தில் உள்ள கோவிந்த மலையில் உள்ள கற்குகையில் காணப்படுகிறது. அக்கல்வெட்டில் "அச்சரிய விஷவ தேவ" என இவ ரின் பெயர் எழுதப்பட்டுள்ளது. அச்சரிய என்பதன் பொருள் வைத்திய கலாநிதி அல்லது அறிஞர் என்பதாகும். இக்கல்வெட்டு சான்றுகள் மூலம் கதிரமலைக்குச் சென்ற விஷ்ரவசு முனிவர் கபிலித்தைக்கும் வந்து முருகனைத் தரிசித்திருக்கலாம் என கருதக்கூடியதாக உள்ளது.

## சட்டைமுனி சித்தர்

சட்டைமுனி சித்தர் இலங்கையில் பிறந்தவர் எனக் கூறப் படுகிறது. இவர் போகருடன் சில காலம் இருந்தபடியால் போகரின் சீடர் எனவும் அழைக்கப்படுகிறார். முருகப் பெருமான் மீது மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி கொண்டவர் சித்தர் போகர். அவரின் அழைப்பின் பேரில் கதிர் காமக் கந்தனைத் தரிசிக்க சட்டைமுனி சித்தர் இலங்கைக்கு வந்ததா கவும் கூறப்படுகிறது. கதிர்காமக் கந்தனை தரிசித்த பின் இவர் கபிலித் தைக்கு வந்து முருகனை தரிசித்து சென்றதாக நம்பப்படுகிறது.

சட்டைமுனி சித்தர் கந்தக்கடவுளின் புனித வனத்தில் இருந்து சென்று சிவனொளிபாதம்,முன்னேஸ்வரம் ஆகிய தலங்களைத் தரிசித்த பின் மாந்தைத் துறைமுகம் வழியாக தமிழகத்துக்குச் சென்றதாகவும் தெரிய வருகிறது.

## காசியப்ப முனிவர்

சப்த ரிஷிகளில் ஒருவரான காசியப்ப முனிவர் இலங்கைக்கு வந்து பல இடங்களில் தங்கிச் சென்றுள்ளார். அவற்றில் கந்தசுவாமிக் கடவுளின் புனித வனத்தில் இவர் தங்கிச் சென்றுள்ளமைக்கான ஆதா ரம் ஒன்றும் உள்ளது.

கபிலித்தையின் தெற்கில் 34 கி.மீ தூரத்தில் உள்ள கோனகல என்னுமிடத்தில் உள்ள மலைக்குகையில் இவரின் பெயர் பொறிக்கப் பட்ட பிராமிக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக் கல்வெட்டில் "... பத்த கஸ்ஸபச லேனே" என எழுதப்பட்டுள்ளது. இது சுவாமி காசியப்பரின் குகை எனப் பொருள்படும். இதன் மூலம் காசியப்ப முனிவர் கந்தக் கடவுளின் வனத்திற்கு வந்து கதிர்காமக் கந்தனையும், கபிலித்தை முருகனையும் வணங்கிச் சென்றதாகக் கூராபாபடுகிறது.

## காக்கை வண்ண சித்தர்

கதிர்காமத்துக்கு தீர்த்த யாத்திரை வந்த சித்தர்களில் காக்கை வண்ண சித்தரும் ஒருவராவார். இவர் பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றா ண்டில் பொதிகை மலையில் இருந்து தென்னிலங்கைக்கு வந்து இங்கு "கடியா" என்னுமிடத்தில் தங்கியிருந்ததாக இவரின் வரலாற்றுக் குறிப் பில் கூறப்பட்டுள்ளது. இக் கடியா என்னுமிடம் கதிர்காமத்தைக் குறிப் பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் காக்கை வண்ண சித்தர் கதிர்காமத்துக்கு வந்து முருகனைத் தரிசித்து விட்டு, அங்கேயே சிலகாலம் தாங்கிச் சென்றுள் ளார் எனக் கருதலாம். இக் காலகட்டத்தில் அவர் கபிலித்தைக்குச் சென்று அங்கு நிஷ்டையில் அமர்ந்திருக்கும் முருகப் பெருமானையும் வணங்கிச் சென்றார் எனக் கூறப்படுகிறது.

## போகர்

கதிர்காமத்துக்கு தீர்த்த யாத்திரை சென்ற சித்தர்களில் போகர் முக்கியமானவராவார். இவர் கதிர்காமத்துக்கு வந்து அங்குள்ள முருகன் கோயிலில் சத்கோண யந்திரத்தையும், முருகனின் சிலை ஒன் றையும் ஸ்தாபித்ததாகக் கூறப்படுகிறது.

போகநாதர் கிழக்குக் கரையோரமாக வந்து கந்தசுவாமிக் கடவு ளின் புனித வனத்தில் தங்கிச் சென்றமைக்கான இரண்டு ஆதாரங்கள் இப்பகுதியில் உள்ளன. பானமையின் அருகில் உள்ள சாஸ்திராவெளி என்னுமிடத்தில் உள்ள மலைப்பகுதியில் இவர் தங்கிச் சென்றுள்ளார். இவர் தங்கிச் சென்ற மலை இங்குள்ள கல்வெட்டில் "போககிரி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது போகர் மலை எனப் பொருள்படும்.

அடுத்த இடம் கந்தக் கடவுளின் புனித வனத்தின் கிழக்குப் பக்கம் உள்ள போகர் மலை எனும் இடமாகும். இங்கும் போகர் தங் கிச் சென்றுள்ளார். இதன் காரணமாக இது போகசித்தர் மலை எனப் பெயர் பெற்றுள்ளது. இதுவே காலப்போக்கில் போசித்தகல என சிங் கள மொழியில் அழைக்கப்பட்டு பின்பு போவத்தகல எனத் திரி படைந்துள்ளது. கூமுனைக் குளத்தின் அருகில் உள்ள இம்மலை கபிலித்தையின் கிழக்கில் 18 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. எனவே போகரும் கபிலித்தைக் கந்தனை வழிபட்டுச் சென்றிருப்பார் எனக் கருதலாம். பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டில் கஜரகம இராச்சியத்தை ஆட்சி செய்த பாண்டிய சத்திரிய மன்னர்களின் கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடங்களில் ஒன்றாக இம்மலை விளங்கியுள்ளது. இங்கு ள்ள மலைக் குகைகளில் அவர்களால் மீன் சின்னத்துடன் பொறிக்கப் பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் இக்கூற்றை உறுதி செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாபாஜி

பாபாஜி எனும் சித்தர் சிறு வயதிலேயே போகரை காண்பதற்காக இந்தியாவில் இருந்து கதிர்காமத்திற்கு வந்து முருகப் பெருமானை தரி சித்து, அங்கு போகரை சந்தித்து அவரிடம் ஆசிபெற்று அங்கேயே சில காலம் தங்கி இருந்ததாக சித்தர் பாபாஜி பற்றிய குறிப்புகளில் கூறப் பட்டுள்ளது.

பாபாஜி பொ.ஆ.214 ஆம் ஆண்டு கதிர்காமத்துக்கு சென்றதாக மார்ஷல் கோவிந்தன் எனும் ஆய்வாளர் தனது நூலில் குறிப்பிட்டுள் ளார். கதிர்காமத்தில் இருந்த ஓர் ஆலமரத்தின் கீழ் பாபாஜி தியானத் தில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. முருகப் பெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்த பாபாஜி கபிலித்தைக்குச் சென்று அங்கும் முரு கனைத் தரிசித்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

## பதஞ்சலி முனிவர்

பதஞ்சலி முனிவர் கதிர்காமத்துக்கு தீர்த்த யாத்திரை சென்றது தொடர்பான ஒரு ஆதாரம் கந்தக் கடவுளின் புனித வனத்தில் காணப் படுகிறது. இப்புனித வனத்தின் ஊடாக கதிர்காமத்துக்கு பாத யாத் திரை செல்லும் போது பக்தர்கள் கடந்து செல்லும் ஒரு இடம் வேல் கண்ட மலை என அழைக்கப்படுகிறது.

இவ்விடத்தின் வடமேற்கில் 3 கி.மீ தூரத்தில் உள்ள மாணிக்க கங்கைக் கரையில் உள்ள ஒரு துறை "பதஞ்சி கஸ்தொட்ட" என அழைக்கப்படுகிறது. இதன் பெயர் "பதஞ்சலி துறை" எனவும், பதஞ் சலி முனிவர் கதிர்காமத்துக்கு வந்த போது அவர் இத்துறையைப் பயன் படுத்தியதால் இப்பெயர் உண்டானது எனவும் கூறப்படுகிறது. பதஞ்சலி துறை என்பது திரிபடைந்து சிங்கள மொழியில் பதஞ்சி கஸ்தொட்ட என அழைக்கப்படுகிறது. தொட்ட என்பது துறையடி எனப் பொருள்படும். இத்துறையடி கபிலித்தையின் தென்மேற்கில் 23 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. பதஞ்சலி முனிவர் இங்கிருந்து கபிலித்தைக்குச் சென்று முருகனைத் தரிசித்ததாக நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோரக்க முனிவர்

சித்தார்கள் 18 பேரில் ஒருவரான கோரக்க முனிவர் போகரின் நண்பராகி, அவரையே குருவாக ஏற்றுக் கொண்டவர். இவர் கதிர் காமக் கந்தனை தரிசிக்க தீர்த்த யாத்திரை வந்து, கந்தக் கடவுளின் புனித வனத்தில் தங்கி சென்றமை தொடர்பான மூன்று ஆதாரங்கள் இவ்வனத்தில் காணப்படுகின்றன.

முன்பு குறிப்பிட்ட வேல் கண்ட மலை என்னும் இடத்தின் தெற்கில் 2 கி.மீ தூரத்தில் கோரக்கர் மலை எனும் சிறிய மலைக் குன்றும், மேற்கில் 2 கி.மீ தூரத்தில் கோரக்கர் குளம் எனும் சிறிய குளமும், வடக்கில் 3 கி.மீ தூரத்தில் மாணிக்க கங்கையில் கோரக்கர் துறையும் அமைந்துள்ளன. இவை கோரக்கர் பயன்படுத்திய இடங்கள் எனக் கூறப்படுகிறது. தற்போது இவை சிங்கள மொழியில் திரிபடைந்து விட்டன. கோரக்கர் மலை கொரவக்க கல எனவும், கோரக்கர் குளம் கொரவக்க வெவ எனவும், கோரக்கர் துறை கொரவக்க தொட்ட எனவும் அழைக்கப்படுகின்றன. கோரக்க முனிவர் கபிலித்தைக்குச் சென்று முருகப்பெருமானைத் தரிசித்து சென்றதாக நம்பப்படுகிறது.

## ஒல்லாந்தர் காலத்தில் கபிலித்தை முருகன் கோயில்

கந்தன் படையெடுப்பு காலம், இராவணன் காலம், பாண்டிய சத்திரிய மன்னர்கள் காலம், முனிவர்கள் வருகை தந்த காலம் என வெவ்வேறு காலப்பகுதியில் பிரசித்தி பெற்று விளங்கிய கபிலித்தை முருகன் கோயில் அதன் பின்பு வேடர் குலத்தவர்களால் மட்டுமே வணங்கப்பட்டு வந்தது. இக்காலப்பகுதிக்குப் பின் ஐரோப்பியர் இலங்கையை ஆக்கிரமித்த காலத்திலேயே கபிலித்தை பற்றி அறியும் வகையில் சில முக்கிய சம்பவங்கள் அங்கு நிகழ்ந்தன.

ஒல்லாந்தர் இலங்கையை போர்த்துக்கேயரிடம் இருந்து கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் ருகுனு பகுதியில் பிரசித்தி பெற்று விளங்கிய விகாரைகளிலும், கோயில்களிலும் இருந்த பெறுமதி மிக்க செல்வங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கொள்ளையடித்து, கோயில்களை அழித்து வந்தனர். 1602 ஆம் ஆண்டு கதிர்காம முருகன் கோயிலையும் கொள்ளையடித்து அழிக்க ஒல்லாந்த சிப்பாய்கள் வந்தபோது கோயிலில் பாரம்பரியமாகப் பூசை செய்து கொண்டிருந்த வேடர்குல பூசாரிகள் கோயிலில் இருந்த விலை மதிக்க முடியாத முருகனின் ஆபரணங்களையும், திரவியங்க ளையும் எடுத்துக் கொண்டு போய் கபிலித்தை முருகன் கோயிலைப் பூஜித்து வந்த அவர்களின் குலத்தவரான கபிலித்தே ராலா எனும் நண்பரிடம் ஒப்படைத்ததாகக் கூறப்படுகிறது. அவர் முருகப்பெருமா னின் புனித ஆபரணங்களையும், திரவியங்களையும் அங்கிருந்த புளிய மரத்தடியின் கீழ் மறைத்து வைத்து அவற்றிற்கு தினமும் பூஜைகள் செய்து, சில மாதங்களாக அவற்றைப் பாதுகாத்து வந்ததாகவும் குறிப் புகள் கூறுகின்றன.

இக்கால கட்டத்தில் பானமை பகுதிக்கு வந்த ஒல்லாந்த சிப்பாய் கள் காட்டின் மத்தியில் கும்புக்கன் ஆற்றங்கரையில் உள்ள கோயிலில் திரவியங்கள் இருப்பதை எப்படியோ அறிந்து 10 சிப்பாய்கள் கபிலித் தைக்கு வந்ததாகவும், வாட்டசாட்டமான துணிச்சல் மிக்க வீரரான கபி லித்தே ராலா இந்த சிப்பாய்களுடன் கடுமையாக சண்டையிட்டு இவர் கள் அனைவரையும் கொன்றதாகவும், இறுதியில் பலத்த காயங்களு டன் தானும் இவ்விடத்திலேயே இறந்ததாகவும் கூறப்படுகிறது.

சில நாட்களின் பின் கபிலித்தே ராலா இறந்த செய்தி அறிந்த கதிர்காமம் முருகன் கோயிலின் பரம்பரை பூசாரிகள் கபிலித்தைக்கு வந்து ஆபரணங்களையும், திரவியங்களையும் எடுத்துக்கொண்டு போய் மீண்டும் கதிர்காமத்தில் மறைத்து வைத்ததாகவும் தற்போதைய கதிர் காம முருகன் கோயில் கப்புராளையான சோமாபால ரத்நாயக்க தெரி வித்தார். இந்த சம்பவங்களின் பின் கபிலித்தை வரலாற்று சிறப்புமிக்க இடமாக போற்றப்பட்டது. இங்கு கண்ணுக்குத் தெரியாத முருகன் கோயில் ஒன்று இருப்பதாகவும், இதன் அருகில் தலகுலு விகாரையும், நில் மானெல் மாளிகையும் இருப்பதாகவும், இவை மனிதர்களின் கண் ணுக்கும் தெரியாமல் கபிலித்தை காட்டில் மறைந்துள்ளதாகவும் முன் னோர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலேயர் காலத்தில் கபிலித்தை பற்றிய குறிப்பு

ஆங்கிலேயர் காலத்தில் ஊவா வெல்லஸ்ஸ கலகம் பெரும் தீவிர மடைந்திருந்தது. இக்காலகட்டத்தில், கண்டி மன்னன் ஸ்ரீவிக்ரம இராஜ சிங்கனின் அரசசபையின் முக்கிய பிரதானியாக இருந்து, பின்பு ஆங் கிலேயரின் முக்கிய அதிகாரியாகவும் பணிபுரிந்து, பின்பு ஊவா வெல் லஸ்ஸ புரட்சியாளர்களின் தலைவனாகவும் விளங்கிய வீர கெப்பிட்டிப் பொல 1818 ஆம் ஆண்டு கபிலித்தை முருகன் கோயிலுக்கு வந்து முருகப்பெருமானுக்கு விசேட பூசைகள் செய்து முருகனை வழிபட்டு ஆசியைப் பெற்றுச் சென்றதாகவும், அன்று முதல் கபிலித்தை முரு கன் கோயில் பற்றி மக்கள் அறிந்து கொண்டதாகவும் முதியோர் கூறு கின்றனர்.

இருப்பினும் அடர்ந்த காட்டுப் பகுதியில் இக்கோயில் அமைந்தி ருப்பதாலும், இங்கு செல்வதற்கு சரியான போக்குவரத்துப் பாதைகள் இல்லாததாலும் செல்வந்தர்கள் மற்றும் பெரிய அரசியல் தலைவர்கள் மட்டுமே காலத்துக்குக் காலம் இங்கு வந்து விசேட பூசைகள் மற்றும் வழிபாடுகள் செய்து வந்துள்ளனர். இந்நிலையில் 1983 ஆம் ஆண்டு காலம் முதல் இலங்கையில் யுத்த சூழ்நிலை உருவான பின்பு கபி லித்தை முருகனைத் தரிசிக்க யாரும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

பின்பு 30 வருடங்களின் பின் நாட்டில் யுத்தம் முடிவுற்ற பின்பே கபிலித்தைக்கு மீண்டும் அரசியல் தலைவர்கள் வரத் தொடங்கினர். அவர்களைத் தொடர்ந்து சாதாரண மக்கள் குழுவாக வந்து முருக னைத் தரிசித்து சென்றனர். அதன் பின்பே கபிலித்தை முருகன் கோயில் நாட்டில் மிகப்பிரசித்தி பெற்ற புனிதத் தலமாக மக்கள் மத் தியில் போற்றி வழிபடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிலித்தை கோயிலுக்குச் செல்வதற்கான வழிகள்

இத்தனை சிறப்புமிக்க கபிலித்தை முருகன் கோயிலுக்குச் செல்வதற்கு மொத்தமாக நான்கு வழிகள் உள்ளன.

**முதலாவது வழி**

உகந்தை முருகன் கோயிலின் அருகில் உள்ள குமண சரணாலய வாசல் வழியாக கும்புக்கன் ஆற்றங்கரைக்கு வந்து, அங்குள்ள மடத்துறை அம்மன் கோயிலில் இருந்து வடமேற்குப்பக்கத்தில் கும்புக்கன் ஆற்றின் வலது கரை வழியாக செல்லும் பாதை வழியாக கபிலித்தை முருகன் கோயிலுக்குச் செல்லலாம்.

எனினும் இது சீரான பாதை அல்ல. கோயிலுக்குச் செல்லும் வழியில் மூன்று ஆறுகளைக் கடக்க வேண்டியுள்ளது. இவ்வாறுகளைக் கடக்க பாலங்கள் எதுவும் இல்லை. மடத்துறை அம்மன் கோயிலில் இருந்து போகும் வழியில் ஒன்றரை கி.மீ தூரத்தில் எத கும்புக்க என்னுமிடத்தில் வனத்துறை விடுதி உள்ளது. இவ்விடத்தில் இருந்து 3 கி.மீ தூரத்தில் மகா கல்அமுன எனும் பெரிய கல்லணை அமைந்துள்ளது. பாரிய கற்பாலங்களை ஆற்றின் குறுக்கே போட்டு நீரைத் தேக்கி இங்கிருந்து கால்வாய் மூலம் குமண குளத்துக்கு நீர் அனுப்பப்படுகிறது. இவ்வணை இராவணன் காலத்தில் அசுரர்களால் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதை அடுத்து குடா கல்அமுன எனும் சிறிய கல்லணையும், அதைத் தொடர்ந்து பதங்கி கஸ்தொட்ட, மண்டா கஸ்தொட்ட, பக்மீ தொட்ட ஆகிய இடங்களும் அமைந்துள்ளன. பக்மீதொட்ட என்னுமிடம் மகா கல் அமுனவில் இருந்து 6 கி.மீ தூரத்தில் உள்ளது. இதை அடுத்து கல் குறிஞ்சான் ஆறு ஓடுகிறது. இவ்வாற்றை வாகனத்தில் கடக்கலாம்.

இங்கிருந்து 5 கி.மீ தூரத்தில் கல்வங்கெடி பொல என்னுமிடம் உள்ளது. இவ்விடத்தை அடுத்து அலகொல ஆறு ஓடுகிறது. எப்பொழுதும் நீர் அதிகளவில் காணப்படும் இவ்வாற்றை கோடை காலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் கூட ஒரு சில மாதங்கள் மட்டுமே வாகனங்களில் கடந்து செல்ல முடியும். அனேகமாக இவ்விடம் வரையுமே வாகனத்தில் செல்லலாம். இங்கிருந்து ஆற்றைக் கடந்து நடந்தே கபிலித்தைக்குச் செல்ல வேண்டும். ஆனால் தற்போது ஆற்றைக் வாகனத்தில் கடந்து செல்வதற்கான ஓர் மாற்று வழி பயன்படுத்தப்படுகிறது.

அலகொல ஆற்றில் இருந்து 9 கி.மீ தூரத்தில் கபிலித்தை அமைந்துள்ளது. அலகொல ஆற்றைக் அடுத்து மகாவெல தொட்ட என்னுமிடம் அமைந்துள்ளது. இவ்விடம் அலகொல ஆற்றில் இருந்து 3 கி.மீ தூரத்தில் உள்ளது. இங்கிருந்து 6 கி.மீ தூரத்தில் கபிலித்தை அமைந்துள்ளது. இங்கு "தொட்ட" எனக் குறிப்பிடப்படும் அத்தனை இடங்களும் கும்புக்கன் ஆற்றைக் கடக்கும் துறைகளாகும்.

**இரண்டாவது வழி**

இரண்டாவது பாதை கதிர்காமத்தில் இருந்து கட்டகாமம் ஊடாக வந்து, வரஹன பாலம் வழியாக மாணிக்க கங்கையைக் கடந்து, அங்கிருந்து நாவலடி ஊடாக கும்புக்கன் ஆற்றங்கரைக்கு வந்து ஆற்றைக் கடந்து, முன்பு சொன்ன மடத்துறை அம்மன் கோயிலில் இருந்து வரும் பாதையை அடைந்து அங்கிருந்து கபிலித்தைக்குச் செல்லலாம்.

**மூன்றாவது வழி**

மூன்றாவது பாதை மொனறாகலையை அடுத்து உள்ள புத்தல சந்தியில் இருந்து கதிர்காமத்துக்கு செல்லும் வழியில் உள்ள கல்கே என்னுமிடத்தில் இருந்து கிழக்குப்பக்கமாகச் செல்லும் காட்டுப் பாதை. இப்பாதையில் 35 கி.மீ தூரம் பயணம் செய்து கும்புக்கன் ஆற்றைக் கடந்து கபிலித்தையை அடையலாம். இந்த மூன்று வழிகளிலும் கபிலித்தைக்குச் செல்வதற்கு வனத்துறையின் அனுமதியோடு அவர்களின் ஜீப் வண்டியிலேயே செல்ல முடியும்.

**நான்காவது வழி**

நான்காவது பாதை கொட்டியாகல ஊடாக செல்லும் பாதை. சியம்பலாண்டுவை-மொனறாகலை வீதியில் உள்ள களுஒப்ப சந்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து தெற்கு நோக்கி 5 ஆம் கட்டை, அத்திமலை, வத்தேகம ஊடாக 19 கி.மீ தூரத்தில் உள்ள கொட்டியாகல எனும் கிராமத்துக்கு சென்று, அங்கிருந்து 22 கி.மீ பயணம் செய்து கபிலித்தையை அடையலாம். கொட்டியாகல ஊடாக செல்லும் இந்தப் பாதையிலேயே அதிகமான யாத்திரீகர்கள் கபிலித்தைக்குச் செல்கின்றனர். ஏனைய மூன்று வழிகளை விட இவ்வழியே கபிலித்தை முருகன் கோயிலுக்கு செல்வதற்கான இலகுவான வழியாகும். ஏனெனில் இப்பாதை ஊடாக கபிலித்தைக்குச் செல்வதற்கு வனத்துறையின் அனுமதி தேவையில்லை.

## கோயிலுக்குச் செல்வதற்கு முன் கடைப்பிடிக்க வேண்டிய விரத முறைகள்

கபிலித்தை முருகன் கோயில் பற்றிய இத்தனை விபரங்களையும் ஆராய்ந்து அறிந்த பின் நண்பர் தேசாந்தவை தொடர்பு கொண்டு கபிலித்தை முருகனைத் தரிசிக்கும் முன்பு கடைப்பிடிக்க வேண்டிய பாரம்பரிய விரத முறைகள் ஏதாவது உள்ளதா எனக் கேட்டேன். அவர் கூறிய விரதமுறைகளும், கபிலித்தை தொடர்பான வேடர்கால சம்பிரதாயங்களும் பெரும் ஆச்சரியத்தை உண்டாக்கின.

கபிலித்தை முருகன் கோயிலுக்குச் செல்லும் முன்பு பல பாரம்பரிய விரத முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். முதலில் 21 நாட்கள் பூரண விரதம் இருக்க வேண்டும். இவ்விரதத்தின் போது புலால் உண்ணாமை, துர்வார்த்தை பேசாமை, தீய செயல்கள் செய் யாமை, கோபம் கொள்ளாமை, பிறருக்கு தீங்கு நினையாமை, பிரமச்ச ரியம், எளிமையான வாழ்க்கை முறை ஆகியவற்றையும், தீட்டு தொட க்கு ஆகியவற்றில் விலகி இருத்தல், சுத்தமாக இருத்தல், அமைதி, தெய்வத்தின் மீது பூரண நம்பிக்கை போன்றவற்றையும் கட்டாயமாகக் கடைப் பிடித்தல் வேண்டும்.

இவ்விபரங்களோடு கபிலித்தை பற்றி ஆராய்ந்த போது மேலும் பல விடயங்கள் கிடைத்தன. கபிலித்தைப் பகுதி குடியிருப்புக்கள் எது வும் இல்லாத அடர்ந்த காடு. கரை புரண்டோடும் காட்டாறுகள், சேற்றுப் புதை குழிகள், திடீரெனப் பெய்யும் அடைமழை போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையான ஆபத்துக்கள் இக்காட்டில் உள்ளன. இவற்றைத் தவிர கொடிய காட்டு விலங்குகள், விஷப்பூச்சிகள் மூலம் ஏற்படும் ஆபத்துக்களும் உள்ளன. மேலும் இரவில் கடும் குளிர், காரிருள் போன்றவையும் எமக்கு சவாலாக அமைகின்றன. எனவே இத்தனை ஆபத்துக்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் மேற்சொன்ன விரதக் கட்டுப்பாடுகளும், தெய்வத்தின் மீதான அதீத பக்தியுமே இக்கோயிலை நாம் சென்றடைவதற்கு அனுகூலமாகவும், சாத்தியமானதுமாக அமைகின்றன. இவ்விடயங்களை சட்டை செய்யாமல் கபிலித்தைக்குச் சென்றவர்கள் பல ஆபத்துக்களை சந்தித்து,வழிதவறி, ஆலயத்துக்குச் செல்ல முடியாமல் திரும்பி வந்த சம்பவங்கள் பல உண்டு.

## கபிலித்தை கந்தனின் சக்தியும், அற்புதங்களும்

கபிலித்தை கந்தனின் சக்தியினாலும், மகிமையினாலும் இப்புனித வனத்தில் பல அற்புதங்கள் நிகழ்வதாக இவ்வனத்தைச் சுற்றி வாழும் மக்களும், வனத்துறை அதிகாரிகளும், இங்கு வந்து செல்லும் யாத்திரீகர்களும் கூறுகின்றனர். அப்படிப்பட்ட சம்பவங்கள் பலவற்றை கபிலித்தைக் கந்தசுவாமி கோயில் பற்றி ஆராயும் போது அறியக் கூடியதாக இருந்தது.

### *கபிலித்தை கந்தனை நம்பாததால் வழிகாட்டிக்கு ஏற்பட்ட விபரீதம்*

உகந்தை முருகன் கோயில் அருகில் உள்ள குமன சரணாலய வாயிலில் இருந்து ஜீப் வண்டி மூலம் கபிலித்தை முருகனை தரிசிக்க ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், உல்லாசப் பிரயாணிகளும் செல்வதுண்டு. அப்படி ஒரு தடவை கபிலித்தைக் கோயிலுக்கு சிலரைக் கூட்டிக் கொண்டு சென்றபோது வழிகாட்டியாக வந்த ஒரு இளைஞன் "கபிலித்தை கோயிலில் அப்படி பெரிய சக்தி என்று எதுவும் இல்லை, எல்லாம் நமது நம்பிக்கை மட்டுமே" என தான் கூட்டிக் கொண்டு வந்த உல்லாசப் பயணிகளிடம் கூறியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் ஜீப் வண்டி கும்புக்கன் ஆற்றங்கரையில் இருக்கும் மடத்துறை அம்மன் கோயிலைக் கடந்தவுடன், வழிகாட்டியாக வந்த அந்த இளைஞனுக்கு திடீரென கடுமையான வயிற்றுவலி உண்டாகி, பின்பு தொடர்ந்து வயிற்றோட்டம் ஏற்பட்டதாகவும், அதனால் இடையில் வண்டியை நிறுத்தி நிறுத்தி சென்றதாகவும், பின்பு இன்னும் கடுமையாக வயிற்றோட்டம் ஏற்பட்டு அவனின் ஆடைகள் அனைத்தும் நனைந்ததாகவும், தன்னால் மேற்கொண்டு பயணம் செய்ய முடியாது என அவன் கூறியபடியால் கபிலித்தை கோயிலுக்குச் செல்லாமல் ஜீப் வண்டியை திருப்பிக் கொண்டு வந்து, மடத்துறை அம்மன் கோயிலுக்கு வந்து அங்கு முருகப் பெருமானுக்கு காணிக்கை கட்டி வணங்கிய பின் வயிற்றுவலி குணமாகியதாகவும் பானமையில் வசிக்கும் முதியவர்கள் கூறுகின்றனர்.

## கபிலித்தையில் காட்டுக் கோழிக்கறி சாப்பிட்ட வன இலாகா அதிகாரிக்கு வந்த சோதனை

கூமுனை கிராமத்தில் முன்பு வசித்து வந்த பாபாசிங்கோ என்பவர் தனது மகன் குணசிங்க என்பவருக்கு சொன்ன ஒரு உண்மைச் சம்பவத்தை அண்மையில் குணசிங்க கூறியுள்ளார். குணசிங்க வன இலாகாவில் தொழில் புரிபவர். இச்சம்பவம் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு கபிலித்தையில் நடந்துள்ளது.

1950 ஆம் ஆண்டளவில் வன இலாகாவில் உதவி உயர் அதிகாரியாக பக்கீர் எனும் இஸ்லாமிய அதிகாரி கடமை புரிந்துள்ளார். ஒரு தடவை அவர் தனது சக உதவியாளர்களுடன் கபிலித்தை முருகன் கோயிலுக்குச் சென்றுள்ளார். அங்கு செல்பவர்கள் பொங்கல் வைத்து சுவாமிக்குப் படைத்து பூஜை செய்துவிட்டு, அப்பிரசாதத்தை எல்லோரும் பகிர்ந்து உண்பது வழக்கம்.

அன்றும் அதிகாரி பக்கீருடன் வந்தவர்கள் பொங்கல் வைத்து பூஜை செய்து அப்பிரசாதத்தை தமது உயர் அதிகாரிக்கு வழங்கியுள்ளனர்.அவர் அதை ஏற்க மறுத்துவிட்டு தனக்கு காட்டுக் கோழி ஒன்றை அடித்து சமைத்துத் தரும்படி கேட்டுள்ளார். கபிலித்தையில் யாரும் காட்டு உயிர்களைக் கொல்வதுமில்லை, மாமிச உணவு சாப்பிடுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை. இருப்பினும் தமது உயர் அதிகாரியின் பணிப்புரையை தட்ட முடியாமல் சக உதவியாளர்கள் ஒரு காட்டுக் கோழியை அடித்துக் கறி சமைத்துக் கொடுத்துள்ளனர். அதிகாரி பக்கீர் அம்மாமிசத்தை ரசித்து, ருசித்து சாப்பிட்டுள்ளார். ஆனால் ஏனைய யாரும் அக்கறியை சாப்பிடவில்லை.

காட்டுக் கோழிக்கறி சாப்பிட்டு சிறிது நேரத்தில் அதிகாரிக்கு கடுமையான வயிற்று வலி உண்டாகி, இரத்த வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. இப்போது இருப்பது போல் அன்று வாகனத்தில் கபிலித்தைக் கோயிலுக்குச் செல்ல முடியாது. நடந்தே செல்ல வேண்டும். எனவே உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாது. இதை உணர்ந்த சக உதவியாளர்கள் தவறை உணர்ந்து சுவாமியிடம் மன்னிப்பு கேட்டால் இந்த நோயில் இருந்து நிவாரணம் பெறலாம் என தமது அதிகாரியிடம் வேண்டிக் கேட்டுள்ளனர். அவரும் தன் தவறை உணர்ந்து கும்புக்கன் ஆற்றில் குளித்து, புதிய ஆடை உடுத்தி, பயபக்தியுடன் முருகப்பெருமானின் சந்நிதிக்குச் சென்று, மனமுருகி வேண்டியதன் பின் உடனே இரத்த வயிற்றோட்டம் நின்றதாகவும், அதன் பின் அதிகாரி பக்கீர் முருகப் பெருமானை மிகுந்த பக்தியுடன் வணங்கி வந்ததாகவும் பாபாசிங்கோ கூறியுள்ளார்.

## *மரத்தடியில் திடீரெனத் தோன்றிய தேங்காயும், கற்பூரமும்*

கதிர்காமத்தின் மேற்குப் பக்கம் லுனுகம்வெஹெர வனம் அமைந்துள்ளது. இங்குள்ள வனத்துறை அலுவலக உதவிப் பணிப்பாளரான பிரஷாந்த விமலதாச என்பவர் கபிலித்தையில் தனது நண்பர்களுக்கு நடந்த சம்பவம் பற்றிக் கூறினார்.

ஒரு தடவை இவரது நண்பர்கள் சிலர் கபிலித்தைக்குச் சென்றுள்ளனர். அங்கு ஆற்றில் குளித்துவிட்டு கோயிலுக்குச் செல்ல ஆயத்தமாகும் பொழுது தான் சுவாமிக்கு உடைப்பதற்கு தேங்காயும், கற்பூரமும் கொண்டு வரவில்லை என்று தெரிந்தது. மிகவும் மனவேதனையுடன் ஏனைய எல்லா பூசைகளையும் நல்லபடியாக முடித்து விட்டு, தம்மால் கற்பூரம் கொளுத்தி ஒரு தேங்காய் உடைக்க முடியவில்லையே என நினைத்து கந்தனை வேண்டி வணங்கி விட்டு திரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் அருகில் இருந்த ஒரு மரத்தின் கீழ் ஒரு தேங்காயும், அதன் மீது ஒரு கற்பூரமும் இருந்துள்ளது. அதைப் பார்த்தவுடன் அனைவரும் பரவசமடைந்து, ஆச்சரியத்துடன் அதை எடுத்து கற்பூரத்தை ஏற்றி தேங்காயில் வைத்து உடைத்து விட்டு, கந்தனின் மகிமையைப் போற்றி மிகவும் மனமகிழ்ச்சியுடன் வீடு திரும்பியுள்ளனர்.

## ***விரதங்களைக் கடைப்பிடிக்காமல் ஏனோ, தானோ என்று சென்ற முக்கிய பிரமுகரின் துணைவியாருக்குக் கிடைத்த தண்டனை***

கொழும்பில் உள்ள முக்கிய பிரமுகர் ஒருவரின் துணையியார் கபிலித்தை பற்றிக் கேள்வியுற்று, அங்கே அப்படி என்ன இருக்கிறது எனப் பார்க்க வேண்டும் எனும் எண்ணத்தோடு எந்த ஒரு விரதத் தையும் கடைப்பிடிக்காமல் திடீரென தன் உதவியாளர்களுடன் கொழும் பில் இருந்து மூன்று நவீன ரக ஜீப் வண்டிகள் மூலம் கபிலித்தைக்குப் புறப்பட்டுள்ளார்.

அவரது உதவியாளர்கள் கபிலித்தைக் கந்தனின் மகிமை பற்றிக் கூறிய எதையும் கணக்கெடுக்காமல் அவருடைய பயணம் தொடர்ந்தது. காலையில் புறப்பட்ட அவர் கொழும்பில் தனக்கு நிறைய வேலை இருப்பதாகவும், அதனால் கபிலித்தைக்குச் சென்று, அவர்கள் சொல் லும் சம்பிரதாயமிக்க பூசைகள் எதையும் தன்னால் செய்ய முடியாது எனவும், சும்மா பார்த்து விட்டு அன்று மாலையே திரும்பி கொழும்பு க்கு வர வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அவருடன் வந்தவர்கள் அம்மணியின் இந்த உதாசீனப் போக் கைப் பார்த்து சற்று கலவரமடைந்த நிலையில் சென்று கொண்டிருந் தனர். மத்தியானம் 11 மணியளவில் கொட்டியாகல எனும் கடைசி ஊரைக் கடந்து அவர்களின் ஜீப் வண்டிகள் காட்டுக்குள் நுழைந்தன. காட்டுக்குள் நுழைந்து சுமார் அரை மணித்தியாளத்தில் அடர்ந்த காட்டின் மத்திய பகுதியை அடைந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் சோதனை ஆரம்பமானது. திடீரென காட்டில் பெருங்காற்றோடு பலத்த மழை பெய்ய ஆரம்பித்தது. சில நிமிட நேரத்தில் காட்டுப் பாதை எங்கும் வெள்ளத்தில் மூழ்கியது. இன்னும் சற்று நேரத்தில் காடு முழுவதும் வெள்ளம் பரவியது. எது பாதை, எது பள்ளம் என்று கண்டு பிடிக்க முடியாத அளவிற்கு வெள்ளம். ஜீப் வண்டிகள் பாதை தெரியாமல் சென்று ஒரு பள்ளமான பகுதியில் சேற்றில் புதைந்தன. வண்டிகளை நகர்த்த முடியவில்லை. வண்டிகளும் கொஞ்சம் கொஞ்சமாக நீரில் மூழ்க ஆரம்பித்தன. உடனே எல்லோ ரும் வண்டியில் இருந்து இறங்கி நனைந்தபடி எங்கேயாவது ஒதுங்க இடம் உள்ளதா எனப் பார்த்தபோது தூரத்தில் ஒரு மலைப்பாறை தென்பட்டுள்ளது.

கையில் கிடைத்த தேவையான பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு மலைப்பாறையில் ஏறி, கொண்டு வந்த படங்கை சிலர் பிடிக்க அம்மணி நின்று கொண்டிருந்தார். உடனே வெளியில் இருந்து ஏதாவது உதவி கேட்கலாமா எனத் தொலைபேசியில் பேச முயன்ற போது எந்தத் தொலைபேசியும் இயங்கவில்லை. பலத்த காற்று, மழை காரணமாக தொலைபேசி சிக்னல் தூண்டிக்கப்பட்டு விட்டது.

மாலையாகியும் மழை விடவில்லை. இரவு முழுவதும் தொடர்ந்து மழை பெய்துள்ளது. கொண்டு வந்த சிறிதளவு உணவு கூட ஜீப் வண்டிக்குள் முடங்கி விட்டது. அன்றே திரும்ப வேண்டும் என்பதால் எதையும் அவர்கள் மேலாதிகமாகக் கொண்டு வரவில்லை. உண்ண உணவு இல்லை, மாற்ற உடை இல்லை, போர்த்திக் கொள்ள கம்பளி, போர்வை எதுவும் இல்லை. தூக்கமும் இல்லை. அம்மணியும், சகாக் களும் குளிரில் நடுங்கினர்.

அடுத்த நாள் விடிந்தது. ஆனால் மழை ஓயவில்லை. அதே நிலை தொடர்ந்தது. ஒரு பெரிய குளத்துக்குள் மரங்கள் வளர்ந்திரு ப்பது போல காடு காட்சியளித்துள்ளது. இதுவரை இப்படி ஒரு அடை மழை இந்தக் காலத்தில் பெய்ததில்லை எனவும், எல்லாம் அம்மணி யால் வந்த வினை எனவும் சகாக்கள் தங்களுக்குள் ரகசியமாகப் பேசிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது நாள் மாலை நேரம் மழை சற்று குறைந்துள்ளது. ஆனாலும் வெள்ளம் வடியவில்லை. தரை தெரியவில்லை. லேசாக மழை பெய்து கொண்டிருந்தது. இரண்டாம் நாள் இரவு வந்தது. அதே குளிர், பசி, நடுக்கம். நடு இரவில் மழை நின்று விட்டது. ஆனாலும் பாறையை விட்டு இறங்க முடியாது. தூரல் நீடித்தது. விடியும் வரை காத்திருந்தனர்.

மூன்றாம் நாள் விடிந்தது. காலையில் முற்றாக மழை நின்று விட்டது. தொலைபேசிகள் இயங்கின. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களோடு மொனராகலையில் இருந்து நண்பர்கள் வந்தனர். ஆனால் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் அவர்களாலும் வரமுடிய வில்லை. வெள்ளம் முற்றாக வடிய வேண்டும். அன்று மதியமே வெள்ளம் முற்றாக வடிந்துள்ளது. அதன் பின் பாறையில் இருந்து இறங்கிய வந்து பார்த்தபோது பாதை முழுவதும் சேறு. இரண்டு நாட் கள் நீரில் நனைந்ததால் ஜீப் வண்டிகள் இயங்கவில்லை. சாகாக்கள் அனைவரும் ஒரு மணி நேரம் வரை கடும் முயற்சி செய்து வண்டி களை இயங்கச் செய்தனர்.

ஆனால் கபிலித்தைப் பகுதிக்கு முன்னோக்கிச் செல்ல முடியாது. ஏனெனில் மீண்டும் அடை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. மேலும் போகும் வழியில் சிற்றாறுகள் பல உள்ளன. அவற்றில் வெள்ளம் கரை புரண்டோடும். எனவே மீண்டும் வந்த வழியே திரும்பிச் சென்றனர். இடையில் உணவுடன் வந்த நண்பர்களும் ஒன்றிணைந்தனர். அவர்கள் கொண்டு வந்த உணவை அம்மணியும், சகாக்களும் உண்டபின் ஜீப் வண்டிகள் காட்டை விட்டு வெளியேறின.

இந்த சம்பவத்தில் இறுதியில் உணவு கொண்டு வந்தவர்களோடு பங்கு கொண்டிருந்த கொட்டியாகல நண்பர் ஒருவர் இந்தக் கதையை என்னிடம் கூறியபோது உண்மையில் உடல் சிலிர்த்து விட்டது. அதே சமயம் கபிலித்தைக் கந்தசுவாமிக் கடவுள் மீதிருந்த பக்தி மேலும் பல மடங்கு அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித வனத்தில் வாழும் காட்டு மிருகங்களை வேட்டையாடிய கிறிஸ்தவ ஆசிரியருக்கு கிடைத்த தண்டனை

1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பானமை பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்ற தேவதாஸ் எனும் கிறிஸ்தவ ஆசிரியர் வந்தார். இவர் அன்றைய பிரதமரான டட்லி சேனநாயக்காவின் பாடசாலை நண்பர். நீளக் காற்சட்டையும், கோட்டும் அணியும் வழக்கம் கொண்டவர். மிருகங்களை வேட்டையாடுவதில் அலாதிப் பிரியம் கொண்டவர். கந்தக் கடவுளின் புனித பூமியில் வாழும் மிருகங்களை பொழுது போக்கிற்காக வேட்டையாடுபவர்களும் தெய்வத்தின் தண்டனைக்கு ஆளாவார்கள் என்பதற்கு இவர் ஒரு உதாரணமாகும்.

இப்புனித வனத்தில் பானமை, சலாவை, உகந்தை, வகூரவட்டை, கூமுனை ஆகிய இடங்களில் பண்டைய காலம் முதல் மக்கள் வசித்து வந்தனர். இவர்கள் நெல், சேனைப்பயிர் ஆகியவற்றை பயிரிடுவது மட்டுமல்லாமல் மீன்பிடித்தல், தேன் எடுத்தல், வேட்டையாடுதல் ஆகியவற்றையும் தமது ஜீவனோபாய தொழில்களாக செய்து வந்தனர். இக்காட்டில் வாழும் மிருகங்களை இவர்கள் தமது ஜீவனோபாயத்திற்காகவே வேட்டையாடுகின்றனர். எனவே இதற்கு மன்னிப்பு உண்டு.

ஆனால் இப்புனித வனத்தில் பொழுது போக்கிற்காக, வேடிக்கையாக, மிருகங்களைக் கொல்வதில் ஆர்வம் கொண்டவர்களாக வேட்டையாடுபவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. அப்படியான ஒருவராகவே தேவதாஸ் விளங்கினார். ஒரு தடவை பானமையில் இருந்து 40 கி.மீ தூரத்தில் கூமுனைக்கு அப்பால் வேட்டைக்குச் சென்று திரும்பியவர் கடுமையான குளிர் காய்ச்சலுக்கு ஆளானார். வந்தவர் பானமைக்குச் செல்ல முடியாமல் கூமுனை கிராமத்தில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அன்று முதல் சுய நினைவு இழந்த நிலையில் ஆங்கில மொழியில் ஏதேதோ புலம்ப ஆரம்பித்தார். தொடர்ந்து முன்பு நடந்தவற்றை எல்லாம் மறந்து புலம்பிக் கொண்டே இருந்தார். எல்லோரும் அவரை "பிஸ்சு மாத்தையா" என்றே குறிப்பிட்டனர். இப்படியே அவரது காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிந்தது. இறுதியில் 1990 ஆம் ஆண்டளவில் இறந்தார். கூமுனை கிராமத்திலேயே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

## *காட்டுப் பாதையில் இருந்து வழிதவறிய கப்புமாத்தையா காப்பாற்றப்பட்ட அதிசயம்*

கதிர்காமம் சூனியம் தேவாலயவின் கப்புறாளையாக பணியாற்றிய கே.டி. ஜினதாச என்பவருக்கு புனித வனத்தில் ஏற்பட்ட ஒரு அனுபவம் பற்றி அவரது மகனும் தற்போதைய கப்புறாளையுமான தேவப்பிரிய என்பவர் கூறிய சம்பவம் இது. 1974 ஆம் ஆண்டு இச்சம்பவம் நிகழ்ந்தது.

தனது தந்தை கப்புறாளை மட்டுமல்ல சிறந்த மூலிகை வைத்தியரும், புகைப்படக் கலைஞருமாவார். இதனால் இவர் “போட்டோ மாத்தையா” என அழைக்கப்பட்டார். ஒரு தடவை காலையில் சில முக்கிய மூலிகைச் செடிகளைத் தேடி யாள காட்டுப் பகுதிக்கு சென்றுள்ளார். பல மணி நேரம் தேடிக் கொண்டே சென்றவருக்கு பொழுது சாய்ந்தது கூடத் தெரியவில்லை. இருட்டாகப் போகிறது என உணர்ந்து கொண்டவர் திரும்பிச் செல்ல முயன்ற போதுதான் தான் பாதை தவறியதை உணர்ந்துள்ளார். அங்கும் இங்கும் அலைந்தும் இருட்டி விட்டதால் பாதையும் புலப்படவில்லை. அருகில் கரடிக்களின் சத்தம் கேட்டதாம். சற்று தூரத்திலே காட்டு யானைக் கூட்டம் ஒன்று வந்து கொண்டிருந்ததாம். அப்போதுதான் தான் மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருப்பதை உணர்ந்துள்ளார்.

மிகவும் மனம் பயந்த நிலையில் ஒரு மரக்கொப்பை முறித்து வைத்து முருகப் பெருமானை வணங்கி, என்னை யானைகள் மிதித்து கொல்வதில் இருந்து காப்பாற்றி, எனக்கு பாதையைக் காட்டு முருகா என மனமுருக வேண்டினாராம். அதன்பின் தான் வந்த பாதை இதுவாகத் தான் இருக்கும் எனும் அனுமானத்தில் சுமார் ஒரு மணி நேரம் நடந்து சென்றுள்ளார். இருப்பினும் பாதை புலப்படவில்லை. அப்போது தான் தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிந்ததாம். உடனே வெளிச்சம் தெரிந்த பக்கத்திற்கு விரைவாகச் சென்று பார்த்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கதிர்காமத்தில் வசிக்கும் "பள்ளத்தர முதலாளி" எனத் தெரிந்தது. தனது சேனையைப் பார்க்க வந்ததாக அவர் கூறியுள்ளார். அவர் நாற்பது வருடங்களுக்கு முன்பு மாணிக்க வியாபாரம் செய்து முன்னேறிய முதலாளி.

அவரைக் கண்டதும் தான் போன உயிர் வந்துள்ளது. இருட்டாகி விட்டதால் சேனை வாடியில் தங்கி விட்டு காலையில் வீட்டுக்கு போகும்படி முதலாளி கூறியுள்ளார். இல்லை வீட்டில் தேடுவார்கள். போலீசுக்கு கூட போயிருப்பார்கள். எனவே எனக்கு பாதையைக் காட்டுங்கள். நான் போய் விடுவேன் என்று கப்புறாளை கூறினாராம். சரி என்ற முதலாளி சுமார் அரை மணித்தியாலம் வரை நடந்து கூட்டிக் கொண்டு சென்று பாதையைக் காண்பித்து விட்டு திரும்பிச் சென்றாராம். அதன் பின்பு முருகப்பெருமானை மனதில் நினைத்து வணங்கிய வண்ணம் வீடு வந்து சேர்ந்தாராம் கப்புறாளை.

இரண்டு நாட்களின் பின் பள்ளத்தர முதலாளிக்கு நன்றி சொல்ல வேண்டும் என நினைத்த ஜினதாச காப்புறாளை வெற்றிலை, பாக்கு ஆகியவற்றை வாங்கிக் கொண்டு முதலாளியின் வீட்டுக்குச் சென்றாராம். முதலாளியின் வீட்டில் அவருடைய மகன்மாரிடம் தனக்கு நடந்த இக்காட்டான நிலை பற்றியும், முதலாளியால் தான் காப்பாற்றப்பட்ட விடயத்தையும் கூறியுள்ளார்.

அப்போது மகன்மார் அப்படி இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அப்பா கடுமையான சுகவீனமுற்று மூன்று மாதங்களாக படுக்கையில் உள்ளார் என்று சொல்லியுள்ளனர். உடனே அதிர்ச்சி அடைந்த ஜினதாச கப்புறாளை உள்ளே சென்று பார்த்தபோது முதலாளி படுக்கையில் இருந்துள்ளார். அப்போது தான் அவருக்கு ஒரு உண்மை புரிந்துள்ளது. பள்ளத்தர முதலாளி உருவத்தில் வந்து தனக்கு வழி காட்டியவர் முருகப் பெருமான் தான் என உணர்ந்து முருகனை நினைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டார். முதலாளி வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் முருகனின் மகிமை அறிந்து மெய்சிலிர்த்து நின்றார்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தனின் புனித வனத்திற்கு ஆடம்பரமாக வந்த பெண்க ளுக்குக் கிடைத்த தண்டனை

சில வருடங்களுக்கு முன்பு கொழும்புப் பகுதியில் இருந்து ஆடம்பரமாக பொழுதைக் கழிக்க ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் என ஒரு குழு கபிலித்தைக்கு வந்துள்ளது. அவர்கள் கொட்டியா கலையில் தமது வாகனத்தை நிறுத்தி விட்டு, அங்கிருந்து டிராக்டர் ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அங்கேயே கப்புறாளை ஒருவரையும் கூட்டிக் கொண்டு கபிலித்தைக்கு சென்றுள்ளனர்.

இதில் வந்த பெண்கள் ஆண்களைப் போல காடே அதிரும்படி பெரிய சத்தமிட்டு பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் வந்துள்ளனர். கோயிலுக்குப் போகிறோம் என்ற எந்த பயபக்தியும் இவர்களுக்கு இரு க்கவில்லை. வன விலங்குகள் வாழும் காட்டில் இவ்வாறு சத்தமிட்டுக் கொண்டு வந்தால் அது இங்குள்ள விலங்குகளின் சுதந்திரத்துக்குப் பாதகமாக அமையும் அதேவேளை தமக்கும் ஆபத்தை விளைவிக்கும் எனும் அடிப்படை விடயம் கூடப் புரியாமல் உல்லாசமாக கபிலித்தை க்கு வந்து சேர்ந்தனர்.

வந்தவுடன் ஒரு பெண் ஏதோ சக்தியுள்ள கோயில் ஒன்று ஆற் றின் அக்கரையில் இருப்பதாக சொல்கிறார்களே அது என்னவென்று பார்க்க வேண்டும் எனக் கூறியபடி ஆற்றைக் கடந்து சென்றுள்ளார். அந்தப் பெண்ணுக்குப் பின்னே மேலும் சில பெண்கள் சென்றுள்ளனர். ஆற்றின் அக்கரையில் சில அடி தூரம் தான் சென்றிருப்பார்கள். திடீ றென காட்டுக்குள் இருந்து வந்த காட்டு யானை ஒன்று அந்தப் பெண்ணை தன் துதிக்கையால் தட்டி வீசியெறிந்தது. சற்றும் எதிர் பாராத விதத்தில் அப்பெண் தூரத்தில் பொய் விழுந்துள்ளார். பின்னே வந்த பெண்கள் எல்லோரும் தலை தெறிக்க வந்த வழியே ஓடியுள்ள னர். வீசி எறியப்பட்ட பெண் தெய்வாதீனமாக மணலில் விழுந்து எந்தக் காயமும் இல்லாமல் சட்டென்று எழும்பி ஓடித் தப்பியுள்ளார். அதன் பின்பு அந்த யானை ஆற்றைக் கடந்து யாரையும் போக விட வில்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெண்களோடு வந்த அனைவரும் இக்கரையில் உள்ள அரசமரத்தைக் வணங்கி விட்டு கொட்டியாகலைக்குத் திரும்பியுள்ள னர். இந்த சம்பவத்தின் பின் அன்று வந்தவர்கள் யாருக்கும் புனித புளிய மரக்கோயிலுக்கு செல்லக் கிடைக்கவில்லையாம்.

## கபிலித்தையில் தற்பெருமை பேசி முருகப்பெருமானைத் தரிசிக்க முடியாமல் வீடு திரும்பிய அரசியல் வாதியின் சோகக் கதை

சில வருடங்களுக்கு முன்பு கபிலித்தைக் கந்தனை தரிசிக்க கொழும்பில் இருந்து வந்த அரசியல்வாதி ஒருவருக்கு ஏற்பட்ட சோதனை பற்றி வனஜீவி இலாகாத் துறையில் பணியாற்றிய திஸ்ஸ மஹாராம விமல் கொடித்துவக்கு எனும் அதிகாரி குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடுகிறேன்.

ஒரு தடவை கொழும்பில் இருந்து தன் பரிவாரங்களோடு கபிலித் தைக்கு வந்த அரசியல்வாதி ஒருவர் தனது அரசியல் செல்வாக்கு மற்றும் பெருமை பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அவரை அழைத்து வந்த வன இலாகா அதிகாரி அக்கரைக்குச் சென்று முருகப் பெருமானுக்கு பிரசாதம் படைத்து வணங்கி விட்டு வருவோம். நாளை காலை மீண்டும் சென்று வணங்கலாம் எனக் கூறியுள்ளார். ஆனால் அரசியல்வாதி அவரின் பேச்சைக் கணக்கில் எடுக்கவில்லை. இப் போது வேண்டாம். நாளை காலையில் மிகச்சிறப்பான ஒரு பூசையை செய்கிறேன் பாருங்கள் என்று பெருமையாகப் பேசியுள்ளார். அரசியல் வாதி என்பதால் அவர் பேச்சுக்கு மறு பேச்சு பேசாமல் அதிகாரியும் இருந்து விட்டார்.

அன்று இரவு இரண்டு மணியளவில் தூரத்தில் இருந்து ஏதோ வருவது போன்ற இரைச்சல் கேட்டுள்ளது. எல்லோரும் எழுந்து என்ன வென்று பார்த்தபோது ஆற்றில் நீர் பெருக்கெடுத்து வந்து கொண்டிருந் தது. மாலையில் ஆற்றில் ஒரு அடி உயரத்தில் மட்டுமே நீர் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது அது ஐந்து, ஆறு அடியாக உய ர்ந்து விட்டது. கலவரமடைந்த அரசியல்வாதி தன்னை சுதாகரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு "காலையில் நீர் மட்டம் குறைந்து விடும், அதன் பின்பு அக்கறைக்குச் செல்லலாம்" என்று கூறி விட்டு உறங்கினார்.

காலையில் எழுந்து பார்த்தபோது ஆற்றில் ஒன்பது அடிக்கு மேல் நீர் பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் கபிலித்தை பகுதியில் கொஞ்சம் கூட மழை பெய்யவில்லை. இந்நிலையில் நண்பகல் வரை பார்க்கலாம், நீர் குறைந்து விடும் என அரசியல்வாதி கூறிக் கொண்டி ருந்தார். ஆனால் நீர் குறைந்த பாடில்லை.

எனவே இக்கரையில் இருந்த அரசமர புத்தகோயிலில் பூசையை நடத்திவிட்டு, தாம் கொண்டு வந்த ஏராளமான பிரசாதங்கள் அனைத் தையும் ஆற்றங்கரையில் உள்ள ஒரு மரத்தின் கீழ் வைத்து விட்டனர். நீர் குறைந்தவுடன் இங்கு இருப்பவர்கள் இந்த பிரசாதங்களை எடுத்துக்கொண்டு போய் அக்கரையில் உள்ள முருகப் பெருமானுக்குப் படைத்து பூஜை செய்யட்டும் எனக் கூறிவிட்டு கபிலித்தைக் கந்த னைத் தரிசிக்காமலேயே அங்கிருந்து வீடு திரும்பினார் அரசியல்வாதி.

இங்கு நான் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் கபிலி த்தை கந்தனின் வனத்தில் நடந்த உண்மைச் சம்பவங்களாகும். இது போன்ற நூற்றுக்கணக்கான சம்பவங்கள் இவ்வனப் பகுதியில் நிகழ்ந்து ள்ளன. இவற்றின் மூலம் கபிலித்தைக் கந்தனை உதாசீனம் செய்தவர் களுக்கு கந்தன் தன்னைத் தரிசிக்க முடியாத வகையில் பல சோதனை களைக் கொடுத்துள்ளான் என்பது புரிகிறது. அதேசமயம் தன்னை நம்பி வந்தவர்களுக்குக் காட்சி கொடுத்து பல அற்புதங்களைச் செய் துள்ளான் எனவும் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிலித்தை புனித யாத்திரை

பண்டைய சிறப்புக்களைக் கொண்ட கபிலித்தை முருகன் கோயிலுக்கு யாத்திரை செல்ல வேண்டும் எனும் எண்ணம் சில வருடங்களாக என் மனதில் நிலை கொண்டிருந்தது. இதனால் கபிலித்தை பற்றிய பல விபரங்களையும் ஆராய்ந்து அறிந்து கொண்டேன். இருந்த போதும் அங்கு செல்வதற்கான சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இக்கால கட்டத்தில் நான் கதிர்காமத்துக்கு பாதயாத்திரை சென்ற முதலாவது வருடத்தில், பாதயாத்திரையின் போது இரவில் தங்கும் இடங்களில் நடக்கும் பிரசங்கத்தின் போது இவ்வாலயம் பற்றிய விபரங்களை யாத்திரீகர்களுக்குக் விளக்கிக் கூறினேன். அதன்பின் நான் பாத யாத்திரை மேற்கொள்ளும் மாமாங்கப் பிள்ளையார் பாத யாத்திரை சங்கத்தின் குருசுவாமியான விஜயசிங்கம் அப்பாசாமியும் கபிலித்தைக்கு செல்வது பற்றி என்னுடன் பேசினார். பாதயாத்திரை வந்த யாத்திரீகர்கள் பலர் கபிலித்தை முருகன் கோயிலுக்கு தாம் இதுவரை சென்றதில்லை எனவும், அங்கு தம்மைக் கூட்டிக் கொண்டு செல்ல வேண்டும் எனவும் என்னிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு கதிர்காம பாதயாத்திரை சென்று திரும்பிய பின் கபிலித்தைக்கு எல்லோரும் செல்வது என முடிவெடுக்கப்பட்டது. அந்த வருடம் பாதயாத்திரை சென்று வந்த பின் கபிலித்தைக்குச் செல்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன்.

கபிலித்தைக்கு வெவ்வேறு காலங்களில் சுமார் 20 தடவைகள் சென்று வந்த அனுபவம் மிக்க நண்பர் தேசாந்தவைத் தொடர்பு கொண்டு எமது குழுவினர் கபிலித்தை முருகனை தரிசிக்க ஆயத்தமாக உள்ளனர் என்று கூறியபோது உடனே அவர் ஜீப் வண்டி, ட்ராக்டர் வண்டி, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் கபிலித்தைக்குச் சென்ற சில புகைப்படங்களையும், காணொளிகளையும் அனுப்பி வைத்தார். அவற்றைப் பார்த்தவுடன் பிரமிப்பாக இருந்தது. அத்துடன் நாம் அங்கு செல்வதற்கான தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கபிலித்தை பயணம் இவ்வளவு சவால் மிக்கதாக அமையும் என அப்போது நான் நினைத்திருக்கவில்லை.

நண்பர் தேசாந்த கபிலித்தைக்கு சென்று வந்த புகைப்படங்களைப் பார்த்ததும் பிரமிப்பாக இருந்தது. அவருடன் தொடர்பு கொண்டு அது பற்றிக் கேட்டபோது அந்தப் புகைப்படங்கள் அவர் மாரி காலத்தில் சென்ற போது எடுக்கப்பட்டவை எனவும், கோடை காலத்தில் சென்ற 2 படங்களும் அதிலே உள்ளன எனவும், நீங்கள் கோடை காலத்தில் சென்று வாருங்கள் அதுவே இலகுவானது எனவும் கூறினார்.

நண்பர் தேசாந்த மூலமாக கொட்டியாகலயில் வசிக்கும் சந்தன எனும் நண்பர் அறிமுகமானார். கபிலித்தைக்கு சென்று வருவதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் தேசாந்தவுக்கு செய்து கொடுப்பவர் தான் நண்பர் சந்தன.

நாம் கபிலித்தை முருகனை தரிசிக்க இருக்கும் தினத்தை புதிய நண்பர் சந்தனவுக்கு அறிவித்து அதற்குரிய ஏற்பாடுகள் பற்றிக் கேட் டேன். ஒரு ட்ராக்டர் வண்டியில் அதிகப்படியாக 12 பேர் போகலாம் எனவும், அதற்குரிய கட்டணத்தையும் கூறினார். எத்தனை ட்ராக்டர் தேவை எனவும், சமைப்பதற்குரிய பாத்திரங்கள், விறகுகள், காய்கறிகள் மற்றும் பூஜைக்குத் தேவையான பழங்கள், பூக்கள் இப்படி என்ன தேவையோ எல்லாவற்றையும் பெற்றுத் தருவதாக நண்பர் சந்தன கூறி னார். ஒரு வேண்டுகோள் பெண்களைக் கூட்டிக் கொண்டு வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் எனவும் கூறினார். ஏன், என்ன காரணம் என்று கேட்டேன். பல காரணங்கள் உள்ளன என்றார்.

அதன் பின்பு மட்டக்களப்பில் உள்ள எமது குருசுவாமியிடம் விபரங்களைத் தெரிவித்தேன். அவர் ஏற்கனவே கபிலித்தை யாத்திரை க்கு போக விருப்பம் தெரிவித்தவர்களோடு கலந்து பேசி, இரண்டு ட்ராக்டர் வண்டிகளில் செல்வதற்குரிய யாத்திரீகர்கள் தயாராக இருப்ப தாகவும், ஒரு சனிக்கிழமை செல்லலாம் எனவும், ஏற்கனவே எதிர் பார்ப்போடு இருப்பதால் எல்லோரும் விரதத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கி விட்டதாகவும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகப் பயணம் ஆரம்பம்

கொட்டியாகலவில் உள்ள நண்பர் சந்தன மூலம் எல்லா ஏற்பாடு களையும் செய்தபின், திட்டமிட்டபடி வெள்ளிக்கிழமை இரவு கொழும் பில் இருந்து மட்டக்களப்புக்கு பயணமானேன்.

அதிகாலை மாமங்கேஸ்வரத்தை அடைந்தேன். அங்கே கபிலித் தைக்கு செல்வதற்கு வந்த யாத்திரீகர்கள் அனைவரும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். எல்லோரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். நானும் உடனே குளித்து, உடை மாற்றிக் கொண்டேன். எல்லோரும் மாமங்க பிள்ளையாரை வணங்கி, குருசுவாமியிடம் ஆசி பெற்று முடியும் போது திட்டமிட்டபடி பஸ் வண்டி வந்து நின்றது. என்னையும் சேர்த்து மொத் தமாக 23 பேர் காவி உடை அணிந்து, கதிர்காமத்துக்கு பாதயாத்திரை செல்வது போன்ற தோற்றத்துடன் வண்டியில் ஏறினோம். சரியாக காலை 5.30 மணிக்கு மாமங்கேஸ்வரத்தில் இருந்து எமது கபிலித்தை பயணம் ஆரம்பமானது. மட்டக்களப்பில் இருந்து 44 கி.மீ தூரத்தில் உள்ள காரைதீவு சந்தியை சரியாக 7 மணிக்கு அடைந்தோம். அங்கு காலை உணவை உட்கொண்ட பின் மீண்டும் பயணம் தொடர்ந்தது.

சம்மாந்துறை, மல்வத்தை ஊடாக 22 கி.மீ தூரத்தில் உள்ள அம்பாறையை அடைந்தோம். நாம் வந்த பஸ் வண்டிக்கு போக்கு வரத்து அனுமதி பெறுவதற்காக அங்கு சுமார் முக்கால் மணி நேரம் நிற்க வேண்டி வந்தது. அங்கிருந்து மீண்டும் பயணம் ஆரம்பமானது. ஹிங்குரானை, தமனை, வட்டினாகல ஊடாக 58 கி.மீ தூரத்தில் உள்ள சியம்பலாண்டுவ சந்தியை அடையும் போது நேரம் 9.40. அங்கிருந்து மொனராகலைக்குச் செல்லும் வீதியில் 2 கி.மீ தூரத்தில் உள்ள களுஒப்ப சந்தியின் வலதுபக்கமாக எங்கள் வண்டி திரும்பியது.

## கபிலித்தைக்குச் செல்லும் கொட்டியாகல வழி

இச்சந்தியில் இருந்து தெற்குப் பக்கத்தில் 19 கி.மீ தூரத்தில் கொட்டியாகல கிராமம் அமைந்துள்ளது. நண்பர் சந்தனவுடன் கைய டக்க தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாம் களுஒப்ப சந்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து விட்ட செய்தியைத் தெரிவித்தேன். அவர் அங்கிருந்து கொட்டியாகலைக்கு வரவேண்டிய வழியை விளக்கினார். அதன்படி எங்கள் வண்டி சென்று கொண்டிருந்தது.

வண்டியின் முன்பக்க இருக்கையில் அமர்ந்திருந்து சாரதிக்கு வழிகாட்டிக் கொண்டு வந்தேன். இங்கிருந்து 8 கி.மீ தூரத்தில் அத்தி மலை சந்தி காணப்பட்டது. இச்சந்தியின் கிழக்குப் பக்கத்தில் 2 கி.மீ தூரத்தில் அத்திமலை எனும் பழமைவாய்ந்த கிராமம் அமைந்துள்ளது.

இங்கிருந்து தெற்கு நோக்கி கொட்டியாகலைக்கு செல்லும் போது 500 மீற்றர் தூரத்தில் குருகொட மலைக்கு செல்லும் சந்தி காணப் பட்டது. பாதையின் வலது பக்கம் குருகொட மலை தென்பட்டது. இங்கிருந்து ஒரு கி.மீ தூரம் சென்றதும் வலப்பக்கமாக ஓர் பாதை சென்றது. அது அத்திமலைக் குளத்துக்கு செல்லும் பாதை.

## *விலா ஓயா ஆறு*

அவ்விடத்தைக் கடந்து மேலும் ஒரு கி.மீ தூரம் சென்றதும் விலா ஓயா ஆறு ஓடிக்கொண்டிருந்தது. இந்த ஆறு மொனராகலை மலைப்பகுதியில் உற்பத்தியாகி, அத்திமலைக் குளத்திற்கு நீர் வழங்கி கொட்டியாகலைக்குச் செல்லும் பாதையை ஊடறுத்து, மேலும் மூன்று குளங்களுக்கு நீர் வழங்கி, குருப்பன் ஓடை ஆற்றுடன் இணைந்து, பானமைக் கடலில் கலக்கிறது. இவ்வாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. பழைய பாலத்தின் ஊடாக எங்கள் வண்டி சென்றது.

பாலத்தைக் கடந்து சுமார் 700 மீற்றர் தூரத்தில் வத்தேகம என்னுமிடம் அமைந்திருந்தது. அங்கிருந்து சிறிது தூரத்தில் கொட்டியா கல குளம் காணப்பட்டது. குளத்தைக் கடந்து சிறிது நேரத்தில் சரியாக காலை 10.10 க்கு கொட்டியாகல கிராமத்தை அடைந்தோம். அங்கு நண்பர் சந்தனவும், அவரின் மைத்துனரும், சந்தனவின் நண்பரும் எம்மை வரவேற்றனர். சுமார் இரண்டு மாத காலமாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த நண்பர்கள் இருவரும் நேரில் ஒருவரை ஒருவர் பார்த்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன் முதலாக கபிலித்தைக்குச் செல்லும் தமிழர் குழு

நாம் காவி வேட்டிகளோடு அங்கு இறங்கியதும் ஊர் மக்கள் எம்மை உற்றுப் பார்த்தனர். அப்போது நண்பர் சந்தன இந்த ஊருக்கு இப்படி காவி உடைகளோடு தமிழர்கள் யாரும் வந்ததில்லை. நீங்கள் தான் முதன் முதலில் வந்துள்ளீர்கள். எனவே தான் எல்லோரும் அப் படிப் பார்க்கிறார்கள் என்றார். இதுவரை ஓரிரு தமிழர்கள் தான் கபிலி த்தைக் கோயிலுக்கு வந்துள்ளனர். அதிகளவில் ஒரு குழுவாக முதல் தடவையாக வந்தது நீங்கள் மட்டுமே என்றும் நண்பர் கூறினார். எங்களைக் கபிலித்தைக்குக் கூட்டிக் கொண்டு செல்வதை பெருமை யாகக் கருதுவதாக சந்தன கூறினார். சந்தனவின் குடும்பத்தவர்கள் எமக்கு என்ன தேவை எனக்கேட்டு எம்மைக் கவனித்துக் கொண்டி ருந்தனர்.

அப்போது நண்பர் சந்தன "நான் கேட்டுக் கொண்டதன் படி எல்லோரும் ஆண்களே வந்துள்ளீர்கள். மிக நல்லது, ஆனால் எங்கள் ஆட்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டார்கள். பெண்களைக் கூட்டிக் கொண்டு வருவார்கள். வந்து சரியாக தங்கள் வழிபாட்டை செய்ய முடியாமல் திரும்பிச் செல்வார்கள்" எனக் கூறினார். அப்போது ஏன் பெண்களைக் கூட்டிக் கொண்டு வரக் கூடாது என்று கேட்டேன். அப்போது அதற்கான காரணங்களை ஒவ்வொன்றாக விளங்கினார்.

## *பெண்களை கபிலித்தைக் கோயிலுக்கு ஏன் கூட்டிக் கொண்டு வரக் கூடாது?*

கபிலித்தை பிரதேசம் மிகப்பெரிய காடு, மிகவும் கஷ்டப்பட்டுத் தான் செல்ல முடியும், பாதைகள் சீரானவையல்ல, 22 கி.மீ தூரம், 4 அல்லது 5 மணித்தியால பயணம், நீங்கள் பயணம் செய்யும் போது கடினத்தை உணர்வீர்கள், போய்ச் சேரும் போது உடல் பயங்கரமாக வலிக்கும், 5 மணித்தியாலம் வண்டி குலுங்கிக் குலுங்கி ஓடி இடுப்பு முறிந்து விடும். வரும் போதும் இதே வலி, வேதனை. ஆண்கள் எப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியாவது சமாளித்து விடுவார்கள். ஆனால் பெண்கள் பாடு பெரும் பாடுதான்.

சில நேரம் திடீரென மழை பெய்யும் இரண்டு நாட்கள் தொடர்ந்து பெய்யும். காட்டுப் பாதைகள் எல்லாம் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். வாகனங்களில் திரும்பி வர முடியாமல் போகும்.

அடுத்தது காட்டிலே பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆண்கள் எங்கேயாவது, எப்படியாவது படுத்து எழுந்து வழிபாட்டை முடித்து விட்டு வரலாம். ஆனால் பெண்கள் அப்படியல்ல. எனவே ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் அந்தக் கோயிலின் புனிதமே கேட்டுப் போய்விடும். இதுவரை அந்தப் புனிதம் கேட்டு விடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட நிலையில் பெண்களைக் கூட்டிக் கொண்டு வந்தவர்கள் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவரால் நிம்மதியாக வழிபாடு செய்ய முடியாது. எனவே தான் கூட்டிக் கொண்டு வருவதைத் தவிர்த்தால் எல்லாமே நல்ல படியாக நடக்கும் என்று கூறி முடித்தார்.

நண்பர் சந்தன 25 வயது மிக்க ஓர் சிங்கள இளம் வாலிபர். இந்த வயதில் ஓர் முதியவரைப் போல, முருகப் பெருமான் மீது இத்தனை பக்தியாக, இத்தனை பக்குவமாக, இந்த விபரங்களைக் விளக்கிக் கூறியபோது மிகவும் வியப்பாக இருந்தது.

## *கபிலித்தை முருகன் கோயிலை நோக்கிய வரலாற்று சிறப்புமிக்க பயணம்*

சந்தன வீட்டு வாசலில் எமக்காக அவர்களின் இரண்டு ட்ராக்டர் வண்டிகள் காத்திருந்தன. ட்ராக்டர் பெட்டிகளில் படுக்கை மெத்தைகள் விரிக்கப்பட்டு, படங்கினால் மூடப்பட்டிருந்தது.

நாம் கொண்டு வந்த அரிசி, பருப்பு, காய்கறிகள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றை பஸ் வண்டியில் இருந்து இறக்கி, ட்ராக்டர் பெட்டிகளில் ஏற்றினோம். நாம் கொண்டு வந்த புனித முருகவேலோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருசுவாமி முதலாவது பெட்டியில் ஏறினார். அவரைத் தொடர்ந்து ஏனைய யாத்திரீகர்களும் தங்கள் கைப்பைகளுடன் ஏறினார்கள். ஒரு ட்ராக்டர் பெட்டியில் 12 பேரும், அடுத்த பெட்டியில் 11 பேரும் ஏறி னோம். சரியாக காலை 10.25 மணிக்கு ட்ராக்டர் வண்டிகள் கபிலி த்தை நோக்கிப் புறப்பட்டன.

அன்று 2014 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், 2 ஆம் திகதி சனிக்கிழமை. முதன் முதலாக ஒரு தமிழ்ப் பிரதேசத்தில் இருந்து வந்த, தமிழ் பக்தர் குழு, முழுமையான காவி ஆடைகளுடன், கையில் முருக வேலேந்தி, முழுக்க முழுக்க சிங்கள மக்கள் வாழும் பிரதேசத்தை ஊடறுத்து, கபிலித்தை எனும் பெரும் புனித வனத்துக்கு சென்ற இந்தப் புனித பயணம் ஓர் வரலாற்று சிறப்புமிக்க பயணமாகும்.

## *கபிலித்தை யாத்திரையில் முக்கிய பங்கு வகிக்கும் கொட்டியாகல கிராமம்*

நாம் கபிலித்தை பயணத்தை ஆரம்பிக்க இருக்கும் கொட்டியாகல கிராமம் கபிலித்தையின் வடக்கில் 22 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. கபிலித்தை கோயிலுக்கு பூஜை செய்வதற்கென்றே கப்பு மாத்தையா என்றழைக்கப்படும் சிங்கள கிராமத்து பூசாரிகள் பலர் இங்கு இருக்கி ன்றனர். கபிலித்தை கோயிலுக்கு பூஜை செய்ய வருபவர்களை ஏற்றிக் கொண்டு செல்வதற்கு கொட்டியாகலயில் ட்ராக்டர் மற்றும் ஜீப் வண்டி கள் வாடகைக்கு உள்ளன.

இங்கிருந்து ட்ராக்டர் வண்டி, ஜீப் வண்டி அல்லது ட்ரேல் மோட் டார் சைக்கிள் ஆகியவற்றைத் தவிர வேறு வாகனங்களில் கபிலித்தை க்குச் செல்ல முடியாது. எனவே இவ்வாகனங்கள் அனைத்தும் கொட்டி யாகலயில் வாடகைக்கு விடப்படுகின்றன.

கொட்டியாகல கிராமமே இப்பகுதியில் உள்ள கடைசிக் கிராம மாகும். இக்கிராமத்தில் சுமார் 1000 குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு ள்ள கிரவல் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் இலுக்குப் பற்றைகளே காணப்படுகின்றன. இக்கிராமத்தில் உள்ள மக்களின் பிரதான தொழில் சேனைப் பயிற்செய்கையாகும். மிக முக்கியமாக சோளமும், நெல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பயிரிடும் பயிர்களாகும். சுமார் 80 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சோளமும், 3000 ஏக்கர் நிலத்தில் நெல்லும் பயிர் செய்யப்படுகின்றன. இதைத் தவிர இங்குள்ள மக்களுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் இன்னுமோர் முக்கிய தொழிலாக விளங்குவது கபிலித்தை போக்குவரத்து ஆகும். ட்ராக்டர் வண்டி, ஜீப் வண்டி ஆகியவற்றின் மூலம் கபிலித்தைக்கு செல்லும் மக்களை கூட்டிச் செல்வது, ஒரு நாள் அங்கு தங்க வைத்து அடுத்த நாள் கூட்டிக்கொண்டு வந்து விடுவது. இதுவே இங்குள்ள மக்களின் போக்குவரத்து சேவையாகும். இதனால் இங்குள்ள பல வீடுகளில் சொந்தமாக ட்ராக்டர் வண்டிகள் உள்ளன. சற்று வசதியுள்ள சிலரிடம் ஜீப் வண்டிகளும் உள்ளன.

சாதாரணமாக ஒரு காட்டுக் கிராமம் எப்படி இருக்குமோ அப்படித்தான் இந்தக் கிராமமும் இருக்கும். ஆனால் ஏனைய கிராமங்களைப் போல் இல்லாது வருடத்தில் ஆறு மாதங்கள் இந்தக் கிராமம் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும். ஏப்ரல் மாதம் புதுவருடம் முதல் செப்டம்பர் மாத நடுப்பகுதி வரையான ஆறு மாதங்கள் இங்குள்ள வண்டிகளும், அதன் உரிமையாளர்களும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கையில் பணம் அதிகளவில் புரளும் காலம் அதுவாகத்தான் இருக்கும். அந்தக் காலம் தான் கபிலித்தை சீசன் காலமாகும். அந்த சீசன் முடிந்ததும் அவர்கள் தங்கள் வழமையான தொழிலைச் செய்யத் தொடங்கி விடுவார்கள்.

## *கொட்டியாகல எனும் புலிப்பாறை*

இப்படிப்பட்ட கொட்டியாகல கிராமத்திற்கு இப்படி ஒரு பெயர் உண்டாவதற்கும் ஒரு காரணமும் உண்டு. கொட்டியாகல என்றால் தமிழில் "புலிப்பாறை" எனப் பொருள்படும். இக்கிராமத்தின் வடமேற்கில் 4 கி.மீ தூரத்தில் வத்தேகம என்னுமிடத்தில் ஓர் மலைப்பாறை காணப்படுகிறது. கிராமத்தின் வடக்கில் 3 கி.மீ. தூரத்தில் வட்டராம என்னுமிடத்திலும் ஓர் மலைப்பாறை உள்ளது. தெற்கில் 4 கி.மீ தூரத்தில் கோம்பஹெல எனும் மலையும் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*வத்தேகம மலைப்பாறை*

இந்த மூன்று மலைகளும் முன்பு சிறுத்தைப் புலிகளின் கோட்டைகளாக விளங்கியுள்ளன. எந்நேரமும் இம்மலைகளில் புலிகள் அமர்ந்திருக்குமாம். எனவே இம்மலைகளுக்கு நடுவில் அமைந்த கிராமத்துக்கு கொட்டியாகல (புலிப்பாறை) எனும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. புலிகளுக்குப் பெயர்போன இவ்விடத்தில் மக்கள் குடியிருப்புகள் உண்டான பின்பு இங்கிருந்த புலிகள் எல்லாம் காட்டின் மத்திக்குப் போய் விட்டதாம். ஆனால் யானைகள் கோடை காலங்களில் கொட்டியாகல குளம், ஹெவன்பிட்டிய குளம் ஆகியவற்றுக்கு நீர் குடிக்க அடிக்கடி வருவதுண்டு. அச்சமயம் கிராமத்தின் உள்ளேயும் யானைகள் வந்து செல்லுமாம்.

## ஹேவன்பிட்டிய குளம்

இத்தனை சிறப்புமிக்க கொட்டியாகல கிராமத்தில் நண்பர் சந்தன வீட்டில் இருந்து காலை 10.30 மணிக்கு எம்மை சுமந்து கொண்டு இரண்டு ட்ராக்டர் வண்டிகளும் விரைந்தன. சில நிமிட நேரத்தில் போகஸ் ஹந்திய எனும் அரசமரச் சந்தியின் வலது பக்கம் வண்டி திரும்பியது. இச்சந்தியில் இருந்து சற்று தூரத்தில் கப்பரகல எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹேவன்பிட்டிய குளம்

சந்தி காணப்பட்டது. இங்கு சிறிய முருகன் கோயில் ஒன்று உள்ளது. கோயிலை அடுத்து சற்று தூரத்தில் ஹேவன்பிட்டிய குளம் அமைந் துள்ளது. அச்சந்திக்கு அப்பால் வீடுகளைக் காண முடியவில்லை. இலுக்குப் பற்றைக் காடாக இருந்தது.

கடந்து வந்த 10 நிமிட பயணம் சாதாரணமாக இருந்தது. அதன் பின் இங்கிருந்து காட்டுப் பாதை ஆரம்பமானது. பாதை குன்றும் குழியுமாக இருந்ததால் ட்ராக்டர் பெட்டி குலுங்கியது. பெட்டியின் ஓரங்களை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டோம். அதனால் ஓரளவு மேலே தூக்கி அடிக்கப்படுவது குறைவாக இருந்தது.

## குருப்பன் ஓடையும், கோம்பஹெல மலையும்

அங்கிருந்து 5 நிமிட பயணத்தின் பின் ஓர் சிறிய பள்ளத்தைக் கடந்தோம். அதுதான் குருப்பன் ஓடை. ஆனால் ஓடையில் தண் ணீரை மருந்துக்குக் கூடக் காணவில்லை. மணல் மட்டுமே காணப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை மணித்தியால பயணத்தின் பின் காட்டுப் பாதையின் வலது பக்கம் ஓர் மலை தெரிந்தது. அதுதான் சிறுத்தைப் புலிகள் வாழ்ந்த மூன்று மலைகளில் ஒன்றான கோம்பஹெல மலையாகும். மலையைப் பார்த்த 5 நிமிட பயணத்தின் பின் ஓர் முக்கிய இடத்தை அடைந் தோம். அது தான் காட்டின் எல்லை ஆரம்பமாகும் இடம். இங்கிருந்து தான் அடர்ந்த காடு தொடங்குகிறது.


## எல்லை முருகன் கோயில்

இவ்விடம் நுகே ஹந்திய என அழைக்கப்படுகிறது. இங்கு தான் எல்லை முருகன் கோயில் அமைந்துள்ளது. அவ்விடத்தில் வண்டியை நிறுத்தினார் சந்தன. இவ்விடத்தில் 5 அடி உயரமான மேடை ஒன்றின் மீது கையில் வேல் ஏந்திய நிலையில் சுதையினால் செய்யப்பட்ட முரு கப் பெருமானின் சிலை ஒன்று திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந் தது. முருகனின் தலையின் பின்பக்கம் ஒளி வட்டமும், மேல் பகுதி யில் சிறிய கூரையும் அமைக்கப்பட்டிருந்தது. முருகனின் சிலைக்கு நான்கு பட்டுத் துண்டுகள் சாத்தப்பட்டிருந்தன.

மேடையின் கீழ்ப்பக்கம் ஒரு சட்டியில் விபூதியும், அதில் ஊது பத்திக் குச்சிகள் குத்தப்பட்டும், அருகில் சிறிய பித்தளை விளக்கும், சீமெந்தில் செய்யப்பட இரண்டு அடி உயரமான கற்பூரத்தட்டும் காணப் பட்டன. சிலையின் பின்பக்கம் முறித்துப் போடப்பட்ட மரக் கொப்பு களும் நிறைந்து காணப்பட்டன. சிங்கள மக்கள் காடுகளில் பயணம் செல்லும் போது அங்கிருக்கும் காட்டுக் கோயில்களில் உள்ள தெய்வங் கள் தம்மைக் காக்க வேண்டி மரக் கோப்புகளை முறித்து வைத்து வணங்கிச் செல்லும் வழக்கம் உள்ளது. அவ்வாறு வைக்கப்பட்ட கொப் புகளையே நாம் காணக் கூடியதாக இருந்தது. முருகன் சிலையின் பின்பக்கம் உயரமான, நேரான கருங்காலி மரம் ஒன்று வளர்ந் திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லை முருகன் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் வண்டியை விட்டு இறங்கி, கற்பூரம் கொளுத்தி முரு கனை வணங்கினோம். சிலர் அருகில் இருந்த மரங்களில் இருந்த கொப்புகளை முறித்து முருகன் சிலையின் கீழே வைத்து வணங்கினர். விபரிக்க முடியாத ஒருவித பயபக்தியோடு, முதன் முதலாகக் கபிலி த்தைக் காட்டுக்குள் பிரவேசிக்கும் யாத்திரீகர் அனைவருக்கும் காட்டு எல்லையில் முருகனைக் கண்டதால் அனைவரின் முகத்திலும் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

## *வெளிச்சம் நிலத்தில் விழாத அடர்ந்த காடு*

முருகனை வழிபட்டபின் சரியாக 11 மணிக்கு மீண்டும் பயணம் தொடர்ந்தது. அதுவரை இலுக்குப் பற்றைக் காட்டில் பயணம் செய்த நாம் இப்போது அடர்ந்த காட்டுக்குள் பிரவேசித்தோம். இக்காட்டுப் பாதை வாகனத்தின் இரண்டு சில்லுகளின் அடித்தடம் போல நடுவில் மேடாகவும் இரண்டு பக்கமும் பள்ளமாகவும் காணப்பட்டது. உண்மை யில் இது பாதை அல்ல. மாரி காலத்தில் வெள்ளநீர் ஓடிய வழித் தடங்கல்கள். எனவே இப்பாதை சில இடங்களில் மணல் நிறைந்தும், ஒடுங்கி, வளைந்து வளைந்து மரங்களுக்கிடையில் செல்லும் பாதை யாகக் காணப்பட்டது. அடர்ந்த காடு என்பதால் நடுப்பகல் வேளை யாக இருந்தும் சூரிய வெளிச்சம் நிலத்தில் படவில்லை. சற்று இருட் டாகவே தென்பட்டது.

அப்போது சந்தன எம்மிடம் ஓர் வேண்டுகோள் விடுத்தார். தயவு செய்து எல்லோரும் ட்ராக்டர் பெட்டியின் ஓரங்களைப் பிடித்துக் கொண்டு வர வேண்டாம் என்றார். எல்லோரும் அதிர்ச்சியில் என் னைப் பார்த்தனர். ஏன் என்றால் குலுங்கிக் குலுங்கிச் செல்லும் வண்டியின் பெட்டிகளில் இருந்து நாம் மேலே தூக்கி வீசப்படாமல் இருப்பதற்கு உள்ள ஒரே ஒரு பிடிமானம் பெட்டியின் ஓரங்கள் தான். ஆனால் இப்போது அதையும் பிடிக்க வேண்டாம் என்கிறாரே.

நண்பர் சந்தனவிடம் ஏன், என்ன காரணம் என்று கேட்டேன். அடர்த்தியான மரங்களின் ஊடாகவே பாதை உள்ளது. வண்டி செல் லும் போது ட்ராக்டர் பெட்டியின் ஓரங்கள் மரங்களில் உராய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே போகும். கையை வைத்திருந்தால் கை மரங்களில் உராய்ந்து காயத்தை ஏற்படுத்தி விடும். எனவே கைகளை உள்ளே வைத்திருங்கள் என்றார்.

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். இனி நம்பாடு பெரும்பாடுதான் என ஒவ்வொருவரும் மனதில் நினைத்துக் கொண்டதை அந்தப் பார்வையின் மூலம் நான் புரிந்து கொண்டேன். வேறு வழியில்லாமல் இப்போது ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டோம். பாதை சீராக இல்லாதபடியால் குலுங்கல் அதிகரித்தது. சில இடங்களில் எல்லோரும் குண்டுக் கட்டாக ஒரு அடி உயரத்துக்கு மேலே போய் வந்தோம். இடுப்பு எலும்பு முறிந்து விடும் போல் இருந்தது. ட்ராக்டர் பெட்டியில் தும்பு மெத்தைகள் போடப் பட்டிருந்ததால் பாதிப்பு அதிகமாக இருக்கவில்லை.

வண்டி மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. எல்லை முருகன் கோயிலில் இருந்து 45 நிமிட குலுங்கல் பயணத்தின் பின் காடு முடிந்து ஓர் வெளி காணப்பட்டது. எல்லோரின் முகத்திலும் ஓர் சந்தோசம் தெரிந்தது. எல்லோரும் ட்ராக்டர் பெட்டியின் ஓரங்களை மீண்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.

## *சட்டவிரோதமாக சேனைப்பயிர் செய்த இடம்*

அவ்விடம் காட்டின் நடுவில் உள்ள சேனைப்பயிர் செய்யப்பட்ட இடம் போல் தெரிந்தது. சேனையின் நடுவில் இருந்த மரத்தின் மேல் காவற் பரண் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. நண்பரிடம் கேட்டேன். சந்தன, என்ன இது காட்டின் மத்தியில் சேனைப்பயிர் செய்த இடமா? என்று கேட்டேன். ஆம் சேனைப்பயிர் செய்த இடம் தான். ஆனால் சட்டவிரோதமாக சேனைப்பயிர் செய்த இடம். பல தடவை காவல் துறையினரால் சுற்றி வளைக்கப்பட்ட இடம். அதனால் இப்போது யாரும் இங்கு பயிர் செய்வதில்லை என்றார். அது என்ன பயிர் என்பது அப்போது தான் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சட்டவிரோதமான சேனைப்பயிர் செய்த இடத்தில் உள்ள பரண்*

அவ்விடத்தை அடுத்து ட்ராக்டர் வண்டிகள் இரண்டும் மீண்டும் காட்டுக்குள் புகுந்தன. மேலும் கீழும் வீசப்பட்டும், பக்கவாட்டில் வீசப் பட்டும், இருந்த இடத்திலிருந்து அங்கும் இங்கும் சாய்ந்தும் பயணித் துக் கொண்டிருந்தோம். சில இடங்களில் பாதையின் குறுக்கே யானை கள் முறித்துப் போட்ட மரங்கள் விழுந்து கிடந்தன. சில இடங்களில் பாதையில் பெரிய பள்ளங்கள் காணப்பட்டன. இப்படியான இடங்களில் வண்டியை காட்டுக்குள் திருப்பி, மரங்களுக்கிடையில் செலுத்தி, மிக வும் லாவகமாகக் கொண்டு சென்றனர். அவ்விடங்களில் மர வேர்க ளின் மேல் ட்ராக்டர் பெட்டிகள் ஏறி, பள்ளத்தில் வீழ்ந்து, மீண்டும் ஏறி எம்மை அலைக்கழித்தன. அந்த சமயத்தில் நாம் மேலே தூக்கி வீசப்பட்டபோது மரக்கிளைகளில் தொங்கிய இலைகளை எங்கள் தலைகள் தொட்டு வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெலபோகல இடைத்தங்கல்

இப்படியாக 30 நிமிட நேர பயணத்தின் பின் நிழல் தரும் மரங்கள் நிறைந்த ஓர் இடத்தில் வண்டிகளை நிறுத்தினார்கள். நேரம் அப்போது பகல் 12.20. இவ்விடத்தில் ஓர் கற்பாறை அமைந்துள்ளது. இவ்விடம் தெலபோகல என அழைக்கப்படுகிறது. இது கபிலித்தைக் கோயிலுக்குச் செல்பவர்களின் இடைத்தங்கல் இடமாகும். கபிலித்தை க்குச் செல்பவர்கள் வண்டிகளில் இருந்து இறங்கி, உணவு உட் கொண்டு அல்லது தேநீர் அருந்தி, சிறிது நேரம் இவ்விடத்தில் ஓய் வெடுத்து, தமது உடல் களைப்பைப் போக்கிச் செல்வார்கள். அதனால் இது வாடிகல எனப் பெயர் பெற்றுள்ளது.இவ்விடத்தில் ஏற்கனவே ஒரு ட்ராக்டர் வண்டியில் வந்த சிலர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

எமது யத்திரீகர்களும் ட்ராக்டர் பெட்டிகளில் இருந்து மகிழ்ச்சி யாக இறங்கினர். வண்டியில் கட்டைகள் போல சுருண்டு கிடந்த எல்லோரும் இறங்கி கைகால்களை நீட்டியதால் உடல் வலி சற்று குறைந்தது. இவ்விடத்தில் "இது ஒரு தெய்வ வனம். இங்கு ஒழுக் கமாக நடந்து கொள்ளுங்கள்" என சிங்கள மொழியில் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகள் மரத்தில் தொங்க விடப்பட்டிருந்தன.

இவ்விடத்தில் ஏதாவது உணவு உண்டு விட்டு செல்லலாமென குருசுவாமி கூறினார். அதன்படி கொண்டு வந்த பாத்திரங்களில் சில வும், நீர் நிரப்பப்பட்ட பெரிய கேன்களும், அரிசி, தேங்காய்ப் பால்மா ஆகியவையும் இறக்கப்பட்டன. அங்கு ஓர் அவசர சாப்பாடு தயார் செய்ய ஏற்பாடுகள் நடந்தன. சிறிது நேரத்தில் பால்சோறு தயாரானது. குருசுவாமி எல்லோருக்கும் பால்சோறு பரிமாறினார். பயணக் களைப்பு, பசி ஆகியவற்றினால் எல்லோரும் மிகவும் ஆவலுடன் பாற்சோறை உண்டு மகிழ்ந்தனர். அங்கிருந்த கற்பாறையில் சிறிது நேரம் ஓய் வெடுத்தோம்.

## மொறமண்டிய காடும், அளகொல்ல ஆறும்

சுமார் 30 நிமிடங்களில் மீண்டும் பயணம் தொடர்ந்தது. அடர்த் தியான மரங்கள் நிறைந்த குகைக்குள் பயணம் செய்வது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இவ்வடர்த்தியான காடு மொறமண்டிய காடு எனும் பெயரில் அழைக்கப்படுகிறது. இங்கு அதிகளவில் கருங்காலி மரங்கள் காணப் பட்டன. மதிய உணவு உண்டு சுமார் முக்கால் மணி நேர பயணத்தின் பின் மணல் நிறைந்த ஓர் பள்ளத்தில் வண்டி இறங்கியது. அது தான் கொட்டியாகலைக்கும், கும்புக்கன் ஆற்றுக்கும் இடையில் ஓடும் பெரிய ஆறு. இதன் பெயர் அளகொல்ல ஆறு. மழைகாலங்களில் கபிலித் தைக்கு செல்லும் யாத்திரீகர்களின் வாகனங்களை இந்த ஆற்றில் இறக்கி ஏற்றுவது தான் மிகவும் சவாலாக இருக்குமாம். அப்படிப்பட்ட சவால் மிக்க அளகொல்ல ஆறு இப்போது ஒரு சொட்டு நீர் கூட இல்லாமல் மணலை மட்டும் தன்னகத்தே கொண்டு அமைதியாகக் காணப்பட்டது.

ஆற்றுப் பள்ளத்தில் வண்டி இறங்கி ஏறும் போது எங்கள் விலா எலும்புகள் ஒரு வழியாகி விட்டன என்று தான் சொல்ல வேண்டும். இவ்வாற்றைக் கடந்ததும் பாதையின் மிகஅருகில் கரடுமுரடான பெரிய உடுண்டையான பாறை காணப்பட்டது. எல்லோரும் பெட்டியின் இடது பக்கம் வாருங்கள், வலது பக்கம் பாறை உள்ளது, கவனம், என்றார் சந்தன. எல்லோரும் கவனமாக இடது பக்கம் நகர்ந்தோம். சுமார் 10 அடி உயரமான பாறை பாதையின் ஓரத்திலே காணப்பட்டது. ட்ராக்டர் பெட்டியின் ஓரங்கள் பாறையில் உரசிச் சென்றன. கொஞ்சம் அசந்திரு ந்தால் பாறை எமது தலைகளைப் பதம் பார்த்திருக்கும்.

## வலஸ்தெல்ல கரடிக்காடும், கோங்கெட்டு ஆறும்

இவ்விடத்தைக் கடந்தவுடன் வலஸ்தெல்ல எனும் காடு அமைந் துள்ளது. இக்காடு கரடிகள் அதிகமாக வாழும் காடு. இக்காட்டில் உள்ள கோங்கெட்டு ஆற்றையும் கடந்தோம். இவ்வாற்றிலும் மணல் மட்டுமே காணப்பட்டது. சிறிது தூரம் சென்றதும் பாதையின் ஓரத்தில் சரசரவென்ற சத்தம் கேட்டது. நண்பர் சந்தன பார்த்து விட்டு அதோ சிறுத்தை ஓடுகிறது தெரிகிறதா என்று கேட்டார். அங்கு மரங்கள் சத்த மாக அசைந்தன. சிறுத்தை ஓடி விட்டது. இப்படித்தான் பாதைக்கு அருகில் சிறுத்தைகள் வருமாம். வண்டிகளின் சத்தம் கேட்டதும் ஓடி விடுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காட்டுப் பாதை ஓரத்தில் உருண்டைப் பாறை



மதில் சுவர் போன்ற வேர்களைக் கொண்ட மருத மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரதங்க ஆறு

இப்பகுதியில் கோட்டைச் மதில் சுவர் போன்ற ஆறு, ஏழு அடி உயரம் கொண்ட வேர்களை உடைய மருத மரங்கள் காணப்பட்டன. தொடர்ந்து காட்டுக்குள் எமது வண்டிகள் ஓடிக்கொண்டிருந்தன. இடையில் இன்னுமோர் ஆற்று மணலைக் கடந்தோம். அது கரதங்க ஆறு. இவ்விடத்தைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் காட்டுப்பாதை இரண்டாகப் பிரிந்தது. இடது பக்கம் சென்றால் கும்புக்கன் மடத்துறை அம்மன் கோயிலடிக்குச் செல்லலாம் என்றார் நண்பர். நாம் வலது பக்கம் திரும்பிச் சென்றோம். கபிலித்தையை நெருங்கி விட்டோம்.

பத்து நிமிட நேரத்தில் கந்தக் கடவுளின் கபிலித்தை வனத்தில் உள்ள கும்புக்கன் ஆற்றங்கரையை அடைந்தோம். நேரம் அப்போது சரியாக பிற்பகல் 3.20. சுமார் 5 மணி நேர சவாலான காட்டுப் பயணத்தின் பின் கந்தனின் கபில வனத்தை அடைந்துள்ளோம்.



*கும்புக்கன் மடத்துறை அம்மன் கோயிலடிக்குச் செல்லும் பாதை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் அரோகரா எனும் கோஷத்தோடு ட்ராக்டர் பெட்டி களில் இருந்து இறங்கினர். இடுப்பு பயங்கர வேதனையைக் கொடுத் தது. உடல் நன்றாக வலித்தது. பல மணி நேரம் கால்களை மடக்கிய நிலையில் அமர்ந்து இருந்ததால் முழங்கால்கள் வலித்தன. பின்னால் வந்த ட்ராக்டர் பெட்டியில் இருந்தவர்கள் தூசியில் குளித்து மஞ்சள் வர்ணத்துடன் இறங்கினர். சிலரைக் கைத்தாங்களாக இறக்கினோம். இத்தனை கஷ்டங்களும், வேதனைகளும் இருந்தாலும் எல்லோர் முகத் திலும் ஓர் ஆனந்தக் களிப்பு தெரிந்தது. அதுதான் கபிலித்தைக் கந்தப் பெருமானின் சந்நிதியை அடைந்து விட்டோம் எனும் மகிழ்ச்சி.

இந்தக் கபில வனத்தில் சில அற்புதங்கள் நடக்கும் என பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் எமக்கும் ஓர் அற்புதம் நடக் கக் காத்திருப்பது அப்போது எமக்குத் தெரியவில்லை. இங்கு நாம் பிரசாதங்கள் படைத்து பூஜைகள் செய்ய ஆயத்தமாக இருந்தோம். ஆனால் எம்மால் அவற்றை செய்ய முடியவில்லை. அங்கே திடீ ரெனத் தோன்றிய ஒருவர் எமக்காக பூஜைகள் செய்வார் என நாம் அப்போது அறிந்திருக்கவில்லை. யார் அவர்?

## கும்புக்கன் ஆற்றில் வேடர் சம்பிரதாய குளியல்

கபிலித்தையில் ஓடும் கும்புக்கன் ஆற்றின் இக்கரையில் நாம் சென்ற டிராக்டர் வண்டிகள் நிறுத்தப்பட்டன. ஏற்கனவே வந்திருந்த வண்டிகள் சிலவும் அங்கு காணப்பட்டன. இக்கரையில் வனத்துறை கூடாரம் ஒன்று காணப்பட்டது.

இது கோடை காலம் என்றபடியால் கும்புக்கன் ஆற்றில் நீர் மிக வும் குறைவாகவே ஓடியது. சுமார் 50 அடி அகலம் கொண்ட கும்பு க்கன் ஆற்றின் பெரும்பகுதி மணலாகவே காணப்பட்டது. ஆற்றின் இருபக்க ஓரங்களில் 15 அடி அகலமான பகுதியில் மட்டுமே நீர் ஓடியது. முழங்கால் அளவான நீரே காணப்பட்டது. ஆற்றின் இரு கரைகளிலும் மிகப் பெரிய மருத மரங்கள் வளர்ந்திருந்தன.

எமது பைகளை எடுத்துக் கொண்டு ஆற்றின் மத்தியில் உள்ள மணல் பகுதிக்குச் சென்றோம். அம்மணலில் இரவு தங்குவது என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு செய்தோம். கும்புக்கன் ஆற்றில் மாரி காலங்களில் நீர் கரை புரண்டு ஓடும். வெள்ள நீர் வேகமாகப் பாயும். அக்காலத்தில் இக் கரையில் இருந்து அக்கரையில் உள்ள கோயிலுக்குச் செல்வது இய லாத காரியமாகும். எனவே அப்போது ஆற்றைக் கடக்க பயன்படும் வகையில் இவ்விடத்தில் ஒரு தொங்கு பாலம் அமைக்கப்பட்டிருந்தது.



*ஆற்றின் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள தொங்கு பாலம்*


ஆற்று மணலில் சில இடங்களில் 7 பூவல் கிணறுகள் தோண்டப் பட்டிருந்தன. ஏற்கனவே இங்கு வந்திருந்த சிலர் வெள்ளை ஆடைகள் உடுத்து அக்கரையில் உள்ள கோயிலுக்கு போய், வந்து கொண்டிரு ந்தனர். நாமும் ஆற்றில் குளிக்க ஆயத்தமானோம். பண்டைய வேடர் கால மரபின்படி மணலில் 7 பூவல் கிணறுகள் தொண்டி, அதில் மஞ் சள் தூள் இட்டு கலக்கி, அதில் 7 பூக்கள் போட்டு, அப்பூவலில் நீர் அள்ளி, ஏழு ஏழு தடவை தலையில் ஊற்றி குளித்து விட்டு, ஆற்றில் இறங்கி நீராடினோம். சுமார் முக்கால் மணிநேர குளியலின் பின், புதிய காவி வேட்டிகள் உடுத்து கோயிலுக்குச் செல்ல ஆயத்தமானோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழு பூவல் கிணறுகள்




இக்கரையில் உள்ள கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இக்கரையில் திறந்தவெளிக் கோயில்

இக்கரையில் உள்ள ஒரு மேட்டு நிலத்தில் உள்ள மரத்தடியில் ஒரு திறந்தவெளி கோயில் காணப்பட்டது.இங்கு மரத்தை சுற்றி சதுர வடிவில் மேடை அமைக்கப்பட்டுள்ளது. முன்பக்கம் புத்தரின் சிலைகள் சில காணப்பட்டன. அருகில் மயில் மீது ஆறுமுகத்துடன் முருகன் அமர்ந்திருக்கும் படமும், அதன் கீழ் மூன்று சூலங்களும் நாட்டப் பட்டிருந்தன. அங்கு சென்று முருகனையும், புத்த பகவானையும் வண ங்கினோம்.




*இக்கரையில் முருகன் படமும், சூலங்களும்*

## அக்கரையில் முதலாம் கட்ட கோயில்

அதன் பின்பு அக்கரையில் உள்ள கோயிலுக்குச் சென்றோம். அக்கரையில் மூன்று கட்டமாக கோயில்கள் காணப்பட்டன. முதலாம் கட்டத்தில் புத்த பகவானின் கோயிலும், இரண்டாம் கட்டத்தில் முரு கன் கோயிலும், மூன்றாம் கட்டத்தில் முருகனின் புனித புளியமரக் கோயிலும் அமைந்திருந்தன. ஆற்றங்கரையில் இருந்து கோயிலுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரையில் முதலாம் கட்டத்தில் உள்ள புத்த கோயில்



இரண்டாம் கட்ட கோயிலுக்குச் செல்லும் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல 5 அடி அகலத்தில் சிறிய பாதை காணப்படுகிறது. இப்பாதை யில் சுமார் 100 மீற்றர் தூரத்தில் பாதையின் வலது பக்கத்தில் முத லாம் கட்ட கோயில் இருந்தது. இங்கு ஒரு அரச மரத்தின் கீழ் சில புத்தர் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. அங்கு சென்று அரசமரத்தை சுற்றி வந்து புத்த பகவானை வணங்கி விட்டு முருகன் கோயிலுக்கு முன்னேறினோம்.

## அக்கரையில் இரண்டாம் கட்ட கோயில்-பிரதான சந்நிதி

இங்கிருந்து மேலும் 150 மீற்றர் தூரத்தில் இரண்டாம் கட்ட கோயில் காணப்பட்டது. இது பாதையின் முடிவில் அமைந்துள்ளது. சுமார் 25 அடி விட்டம் கொண்ட ஒரு வட்டமான இடத்தின் மத்தியில் திறந்த வெளியில் இம்முருகன் கோயில் காணப்படுகிறது.

இங்கு முன்பக்கமாக உயரமான கல் விளக்கு ஒன்றும், அதன் இரு பக்கங்களிலும் நான்கு குட்டையான கல் விளக்குகளும், மேலும் சில சிறிய கல் விளக்குகளும் காணப்பட்டன. இவற்றை அடுத்து அலு மினியத் தகட்டில் ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. பக்தர்கள் கொண்டு செல்லும் பிரசாதங்கள், பூக்கள், பழங்கள் போன்றவை இதில் வைக்கப்பட்டு, சுவாமிக்கு படைக்கப்படுகின்றன.


மேடையை அடுத்து சுவாமி சிலைகள் காணப்படுகின்றன. ஒரு தூணின் மேல் சிறிய மேடை அமைக்கப்பட்டு அதன் மீது பிரதான கற் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அதில் முருகன் வள்ளி தெய்வானை யுடன் காட்சி தருகிறார். பின்பக்கம் பெரிய திருவாசி காணப்படுகிறது. இச்சிலைகளுக்கு மேலே சிறிய கூரையும் போடப்பட்டுள்ளது. இதன் இடது பக்கம் ஒரு தூணின் மேல் 3 அடி உயரமான பிள்ளையார் சிலையும், வலது பக்கம் 3 அடி உயரமான பாலமுருகன் சிலையும் காணப்படுகின்றன. இச் சிலைகளின் முன் பக்கம் உயரமான திரிசூலம் ஒன்றும் உள்ளது. சிலைகளின் முன்பு இரு பக்கங்களிலும் உயரமான குத்து விளக்குகள் நான்கு உள்ளன. சிலைகள் மற்றும் இங்குள்ள பொருட்கள் யாவும் வெவ்வேறு காலங்களில் இங்கு வந்த பக்தர்களால் நேர்த்தியாக வழங்கப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரையில் இரண்டாம் கட்டத்தில் உள்ள முருகன் கோயில்




பிரதான சந்நிதியில் வள்ளி தெய்வானையுடன் முருகனின் கற்சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான முருகன் சந்நிதியைச் சுற்றி சுமார் 8 அடி அகலத்தில் சுற்றுப்பாதை உள்ளது. அதை அடுத்து காணப்படும் மரங்களின் ஓரத்தில் பலகைக் கூண்டுகளிலும், கண்ணாடிக் கூண்டுகளிலும் புதிய மற்றும் பழமையான முருகன் சிலைகளும், படங்களும் காணப்படுகின்றன.

இடது பக்கத்தில் திறந்தவெளியில் உயரமான அழகிய முருகனின் சிலை வைக்கப்பட்டுள்ளது. 6 முகங்கள், 12 கைகளுடன், தோகை விரித்தாடும் மயில் மீது முருகன் அமர்ந்துள்ளார். இதை அடுத்து சிறிய கண்ணாடிக் கூண்டில் பித்தளையில் வார்க்கப்பட்ட முருகனின் சிலை உள்ளது. நின்ற நிலையில் காணப்படும் இச்சிலையும் 6 முகங்கள், 12 கைகளை உடையதாகும். இதை அடுத்து சிறிய பலகைக் கூண்டில் இரண்டு பழமைவாய்ந்த முருகன் சிலைகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று கல்லிலும் அடுத்தது மரத்திலும் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு சிலைகளும் 6 முகங்கள், 12 கைகளுடன் முருகன் மயில்மீது அமர்ந்திருப்பது போன்ற வடிவங்களாகும். இவற்றுடன் சுதையில் செய்யப்பட்ட பழைய முருகன் சிலைகளும், ஏராளமான முருகன் படங்களும் காணப்படுகின்றன.சந்நிதியைச் சுற்றியுள்ள விளக்குகள், கம்பங்கள், தூண்கள் எல்லாவற்றிலும் சிவப்பு மற்றும் வெள்ளைத் துணிகளில் நூற்றுக்கணக்கான காணிக்கை முடிச்சுகள் கட்டப்பட்டிருந்தன.




*திருவாசியுடன் பித்தளை முருகன் சிலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறு முகங்கள், பன்னிரெண்டு கைகளை உடைய முருகன் சிலை



மூன்று அடி உயரமான பிள்ளையார் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூன்று அடி உயரமான பாலமுருகன் சிலை



பித்தளையில் வார்க்கப்பட்ட முருகப்பெருமானின் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழமை வாய்ந்த முருகன் கற்சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழமை வாய்ந்த முருகன் மரச்சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரக்கூண்டில் முருகன் சிலைகளும், படங்களும்



பாலமுருகனின் வெள்ளைப் பளிங்குச் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான முருகன் சந்நிதியின் வலது பக்கம் மேலும் சில சிலைகள் காணப்படுகின்றன. முருகனின் பெரிய படத்தின் கீழ் திருவாசியுடன் கூடிய முருகப்பெருமானின் பித்தளை சிலை ஒன்றும் அவ்விடத்தில் உள்ளது. இதன் அருகில் வெள்ளைப் பளிங்குக் கல்லில் அமைக்கப்பட்ட 3 அடி உயரமான பாலமுருகன் சிலை காணப்படுகிறது. இச்சிலையின் கீழே பித்தளையில் வார்க்கப்பட்ட மிகப்பழைமை வாய்ந்த முருகனின் சிலை ஒன்று உள்ளது. இச்சிலை பளிங்குக் கல் சிலைக்குக் கட்டப்பட்ட பட்டுத் துணிகளால் மறைந்தும் மறையாமலும் காணப்பட்டது.

## *கபிலித்தையின் காவல் தெய்வம் கடவர சுவாமி*

பிரதான சந்நிதியின் வலது பின்பக்கம் காட்டை ஒட்டி, ஒதுக்குப் புறத்தில் ஒரு அகோரமான, புதுமையான வடிவம் கொண்ட ஒரு சிலை காணப்படுகிறது. வாயின் இரு பக்கங்களும் கோரப்பற்கள் இரண்டு நீண்டு கொண்டிருக்க, நீளமான நாக்கை தொங்கப்போட்ட வண்ணம் உள்ள இச்சிலை தான் கபிலித்தைக்கு காவல் தெய்வமாக விளங்கும் கடவர சுவாமியின் சிலையாகும். கபிலித்தை கோயிலுக்கு வரும் பக்தர்கள் இந்தக் கடவர சுவாமிக்கு விசேட பூஜைகள் செய்து வணங்கிச் செல்வர்.

கடவர சுவாமியின் பின்பக்கம் 50 அடி தூரத்தில் உள்ள காட்டில் பழுதான உணவுகள், காய்ந்த பூக்கள் மற்றும் வாழை இலைகள் போன்றவை குப்பைகளாகக் குவிந்து கிடந்தன. காட்டுப் பன்றிகள் சில அவற்றை உண்டு கொண்டிருந்தன.

இரண்டாம் கட்ட கோயிலுக்கு நாம் அனைவரும் சென்று பிரசாதங்கள் தயாரிக்கக் கொண்டு வந்த பொருட்கள் அடங்கிய எமது கைப்பைகள் அனைத்தையும் கோயிலின் முன்பக்கம் வைத்துவிட்டு பிரதான சந்நிதியில் உள்ள முருகனை பயபக்தியுடன் வணங்கினோம். புனித புளியமரத்தடிக்குச் சென்று வணங்கிவிட்டு வந்து பிரசாதங்களைத் தயாரித்து படைத்து வழிபட வேண்டும் எனத் திட்டமிட்டபடி அங்கிருந்து புனித புளியமரம் அமைந்துள்ள இடத்திற்குச் சென்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*கபிலித்தையின் காவல் தெய்வமான கடவர சுவாமியின் சிலை*

## அக்கரையில் அமைந்துள்ள மூன்றாம் கட்ட கோயிலும், புனித புளியமரமும்

இரண்டாம் கட்டக் கோயிலின் இடது பக்கம் காட்டு மரங்கள் ஊடாக 3 அடி அகலமான ஒரு பாதை செல்கிறது. சுமார் 100 மீற்றர் தூரம் வரை செல்லும் இப்பாதையின் முடிவில் தான் மூன்றாம் கட்ட கோயிலும், முருகப் பெருமான் நிஷ்டையில் அமர்ந்திருப்பதாக நம்பப் படும் புனிதமான புளிய மரமும் அமைந்துள்ளன. கபிலித்தைக்கு வரும் பக்தர்கள் பயபக்தியுடன் பார்க்கத் துடிக்கும் இடமும் இதுதான்.

இங்குள்ள புனித புளியமரம் சுமார் 15 அடி சுற்றளவுள்ளதாகும். இதைத்தான் சிங்கள மொழியில் "சியம்பலாவே தேவாலய" என அழைப்பர். இது ஒரு திறந்தவெளி மரக் கோயிலாகும். நில மட்டத்தில் இருந்து சுமார் 15 அடி வரை ஒரே சீராக வளர்ந்து அதற்கு மேல் கிளைகள் விட்டு பரந்த வடிவில் காணப்படும் இப்புனித மரம் ஏனைய மரங்களைப் போல இல்லாது மிகவும் வித்தியாசமாகக் காணப்பட்டது. அடியில் இருந்து உருளையான மரவேர்கள் பல முறுகிய வடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் முழுவதையும் மூடி, மேல் நோக்கிச் செல்வது போல மரத்தின் வடிவம் காணப்பட்டது.

மரத்தைச் சுற்றி சுமார் 10 முருகன் சிலைகள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை பித்தளை மற்றும் வெண்கல சிலைகளாகும். இவற்றில் சுதேச முறையில் அமைக்கப்பட்ட ஒரு புராதன கற்சிலையும் உள்ளது. இவ்விடத்தில் வேல், திரிசூலம் போன்றவையும் காணப்பட்டன. புனித மரத்தைச் சுற்றியுள்ள சூலங்கள், வேல், விளக்குகள், கம்பங்கள் மற்றும் உயரமான தடிகள் எல்லாவற்றிலும் சிவப்பு மற்றும் வெள்ளைத் துணிகளில் நூற்றுக்கணக்கான காணிக்கை முடிச்சுகள் கட்டப்பட்டிருந்தன.

## *மரத்தில் காணப்படும் ஆறு முகங்களும், காளியம்மனின் புனித சத்தியக் கல்லும்*


புனித புளிய மரத்தின் பின்பக்கம் ஆறு மரமுடிச்சுகள் காணப்படுகின்றன. இவை இயற்கையாகவே இம்மரத்தில் உருவாகியுள்ளன. இங்கு வரும் பக்தர்கள் இதை முருகனின் ஆறு முகங்களுக்கு ஒப்பாக நினைத்து பயபக்தியுடன் தொட்டு வணங்குவர்.

மரத்தின் கீழே மிகவும் புராதனமான ஒரு கல்லும், கரடு முரடான மண் மேடையும் காணப்படுகின்றன. இக்கல் தான் பண்டைய காலம் முதல் வேடர்கள் பயன்படுத்திய புனித சத்தியக் கல்லாகும். இந்த சத்திய கல்லில் காளியம்மன் குடிகொண்டிருப்பதாக வேடர் குலத்தவர்கள் நம்பினர். இம்மண் மேட்டில் தமது படையல்களைக் குவித்து, இக்கல்லின் மீது சத்தியம் செய்தே பண்டைய வேடர்கள் தமது குற்றம், குறைகளை காளி அம்மனிடம் இறக்கி வைத்தனர் எனக் கூறப்படுகிறது. சத்தியக் கல்லில் பொய்யாக யாரும் சத்தியம் செய்வதில்லை. தவறு செய்யாதவர்கள் எந்த தயக்கமும் இன்றி சத்தியம் செய்யும் அதேவேளை, தவறு செய்தவர்கள் அவ்விடத்திற்கு வந்ததும் தமது தவறை ஒப்புக் கொண்டு விடுவார்களாம். பொய்யாக சத்தியம் செய்தால் காளி அம்மனின் தண்டனை நிச்சயம் கிடைக்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித புளிய மரத்தைச் சுற்றி சுமார் 10 அடி அகலத்தில், 30 அடி சுற்றளவுக்கு புல், பூண்டுகள் எதுவும் இன்றி கூட்டித் துப்பரவு செய்தது போல தரை மிகவும் அழகாகக் காணப்பட்டது. இங்கு சூட்சுமமாக உலவும் சித்தார்களே இவ்விடத்தை எப்போதும் சுத்தமாக வைத்திருப்பதாகக் கூறுகின்றனர்.




*முருகப்பெருமான் நிஷ்டையில் அமர்ந்திருக்கும் புனித புளியமரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை சிறப்புமிக்க புனித மரத்தடிக்குச் சென்று பார்த்த எமது பக்தர்கள் அனைவரும் ஒரு கணம் பிரமித்துப் போய் விட்டனர். ஏனெனின் அந்த இடத்தில் அப்படி ஒரு நிசப்தம் நிலவியது. எல்லோரும் அமைதியாக புனித மரத்தைச் சுற்றி வணங்கினோம். நாம் கொண்டு வந்த முருகனின் வேலை மரத்தின் பின்பக்கம் காணப்பட்ட ஆறு முகங்களின் கீழே வைத்து வணங்கினோம்.

அதன் பின் எல்லோரும் புனித மரத்தைச் சுற்றி அமர்ந்து தியானத்தில் எடுபட்டனர். சுமார் 20 நிமிடங்கள் யாரும் அசையவில்லை. உண்மையில் தியானத்தில் இருந்து எழும்பவும் மனது இடம் கொடுக்கவில்லை. அத்தனை பரவசமாகவும், இனம் புரியான ஆனந்தமாகவும் இருந்தது. இந்த ஆனந்தத்தை உணர வேண்டுமானால் கபிலித்தைக் கந்தனின் புனித புளியமரத்தடிக்குச் சென்று அமர வேண்டும்.



புனித புளிய மரத்தில் உள்ள ஆறு முகங்கள் போன்ற மரமுடிச்சுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுதேச முறையில் அமைக்கப்பட்ட முருகனின் புராதன கற்சிலை



சத்தியக் கல்லும், மண் மேடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புனித மரத்தைச் சுற்றி தியானத்தில் ஈடுபட்டுள்ள பக்தர்கள்



புனித புளியமரத்தின் கீழ் முருகனின் வேலாயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*புனித புளியமரத்தடியில் உள்ள முருகனின் வெண்கலச் சிலை*

30 நிமிடங்களின் பின் ஆறு பேர் மட்டும் பிரசாதங்கள் தயாரிப் பதற்காக புனித மரத்தடிக் கோயிலில் இருந்து இரண்டாம் கட்டத்தில் உள்ள பிரதான சந்நிதிக்கு வந்தோம். அப்போது அங்குள்ள கடவர சுவாமியின் பின்பக்கம் ஏதோ மலை போல தெரிந்தது. சுமார் 12 அடி உயரமான ஒரு யானை அவ்விடத்தில் நின்று கொண்டிருந்தது. யானையைக் கண்டவுடன் சற்று கலவரமடைந்த நிலையில் மெதுவாக வந்து எமது கைப்பைகளை எடுக்கச் சென்றோம். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் அந்த யானை மிக வேகமாக எம்மை நோக்கி வந்தது. கைப்பைகளை அப்படியே விட்டுவிட்டு ஆற்றை நோக்கி எல்லோரும் ஓடினர். சுமார் நூறு அடி தூரத்தில் நின்று என்ன நடக் கிறது என அவதானித்தோம். அப்போது தான் எமது கண்களையே நம்ப முடியாத அந்த அபூர்வமான சம்பவம் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யானை செய்த பூஜை

வேகமாக வந்த யானை எமது கைப்பைகள் இருந்த இடத்தில் நின்று விட்டது. எமது கைப்பைகளில் அரிசி, பால் பாக்கெட், பழங் கள், பூக்கள் ஆகியவற்றுடன் சிலருடைய கைப்பேசிகள் இரண்டும் இருந்தன. சுமார் 100 அடி தூரத்தில் நின்று என்ன நடக்கிறது என் பதை அவதானித்தோம்.

அப்போது யானை திடீரென புனித புளியமரத்துப் பக்கம் வேக மாகச் சென்றது. புனித மரத்தியடியில் இருந்த ஏனையோரும் இரண் டாம் கட்ட கோயில் பகுதிக்கு வந்திருக்க வேண்டும். அதனால் அவர். களை வரவிடாது துரத்தியுள்ளது.

பின்பு எமது கைப்பைகள் இருக்கும் இடத்திற்கு மீண்டும் வந்து பைகளில் தன் தும்பிக்கையை விட்டுத் துலாவிய யானை முதலில் பையில் இருந்த பால் பாக்கெட் ஒன்றை எடுத்து துதிக்கையில் நசுக்கி தலைக்கு மேலே விசிறியது. பின் அடுத்த பாக்கெட்டை எடுத்து பாலைக் குடித்தது. அதன் பின் பைகளில் துலாவி அரிசி உள்ள பையை எடுத்து தலைக்கு மேலே சுழற்றி விசிறியது. அதன் பின் பைகளில் இருந்த பூமாலையையும், பூக்களையும் எடுத்துக் கொண்டு போய் பிரதான சந்நிதியில் உள்ள முருகன் சிலை மீது போட்டது. பின்பு பைகளில் இருந்த விழாம்பழம், பலாப்பழம் ஆகியவற்றை எடு த்து முன்னங்காலில் தட்டி உடைத்து அவற்றில் ஒவ்வொரு துண்டு களை எடுத்துக் கொண்டு போய் பிரதான சந்நிதியில் உள்ள முருகன் சிலைக்கு முன்பாக இருந்த மேடையில் வைத்தது. பின்பு வந்து மிகுதிப் பழங்களை எடுத்து உண்டது. அதன் பின் வெற்றுப் பைகளை எடுத்து வீசி எறிந்தது. பின்பு முருகன் சந்நிதிக்குச் சென்று அங்கு ஏற்கனவே வைத்த பழங்களை எடுத்து உண்டது. பின்பு சந்நிதியை ஒரு முறை சுற்றி வந்து காட்டுக்குள் சென்று விட்டது.

என்றும் காணக் கிடைக்காத, யானை செய்த இந்த அபூர்வமான பூஜையை எம்மோடு சேர்ந்து, முருகனைத் தரிசிக்க வந்த சிங்கள பக் தர்கள் சிலரும் மெய்சிலிர்த்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது புனித மரத்தடியில் நின்ற எமது ஏனைய பக்தர்கள் ஆற்றுப் பக்கம் இறங்கி நாம் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களில் ஒருவர் தனது கைப்பையை தோளில் தொங்கப் போட்டிருந்தார். அவரது பையில் அவர் கொண்டு வந்திருந்த அவலும், சர்க்கரையும் இருந்தன. அவலை ஒரு பிளாஸ்டிக் வாளியில் போட்டு ஆற்று நீரில் கழுவி எடுத்து வந்து, சர்க்கரை போட்டு பிசைந்து அப்பிரசாதத்தை சுவாமிக்குப் படைக்க மீண்டும் எல்லோரும் முருகன் சந்நிதிக்குச் சென்றோம். கோயில் அருகில் சென்றபோது அங்கே கடவர சுவாமியின் பின்பக்கம் அந்த யானை நின்று கொண்டிருப்பது தெரிந்தது. எம்மைக் கண்டவுடன் மீண்டும் வேகமாக எம்மை நோக்கி வந்தது. நாம் மீண்டும் வந்த வழியாக ஓடினோம்.


வேகமாக வந்த யானை கோயில் வளாகத்தையும் கடந்து எம்மைத் துரத்திக் கொண்டு வந்தது. அப்போது ஒரு பக்தர் அவல் வாளியை போட்டு விட்டு வாருங்கள் என்றார். உடனே அவல் உள்ள பிளாஸ்டிக் வாளியை கீழே வைத்து விட்டு ஓடினோம். வேகமாக வந்த யானை வாளியின் அருகில் நின்று விட்டது. வாளியை காலால் மிதித்தது. பிளாஸ்டிக் வாளி அதன் காலில் சிக்காமல் வழுக்கி உருண்டு ஓடியது. முன்னோக்கி வந்த யானை வாளியில் தும்பிக்கையை விட்டு அவலை வளித்து எடுத்து உண்டது. அதன் பின்பு மீண்டும் காட்டுப் பக்கம் சென்று விட்டது.

அதன் பின்பு நாமும், ஏனைய சிங்கள பக்தர்களும் முருகன் சந்நிதிக்குச் சென்றோம்.அங்கே கடவர சுவாமியின் பின்பக்கம் யானை மறைந்து நின்று கொண்டிருந்தது. எம்மைப் பார்த்தவுடன் முன்னோக்கி வந்தது. சந்நிதிக்கு யாரையும் செல்ல விடவில்லை. மீண்டும் எல்லோரும் ஆற்றங்கரைக்கு வந்தனர்.


அதன் பின்பு சில சிங்கள பக்தர்கள் சந்நிதிக்குச் சென்றுள்ளனர். அங்கு யானை நின்று கொண்டிருந்ததாகவும், ஒருவரையும் சந்நிதிக்கு போக விடவில்லை எனவும் கூறினார்கள். எல்லோரும் முதலாம் கட்டத்தில் உள்ள அரச மரத்தடி புத்தர் கோயிலுக்குச் சென்று விட்டு திரும்பி விட்டதாகவும் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யானை செய்த பூஜையின் தோற்றம்



அரிசிப் பையுடன் ஆனைமுகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அபூர்வமாகவே இப்படி எல்லாம் நடக்கும் எனவும், இதற் குரிய காரணம் என்ன என்பதையும் சிங்கள பக்தர்கள் சிலர் பேசிக் கொண்டனர். பலர் நல்ல விதமாகவும், சிலர் கெட்ட விதமாகவும் கார ணங்கள் கூறினர். நாம் மிகவும் பயபக்தியோடு காவி உடை தரித்து, உண்மையான பக்தி உணர்வோடு கபிலித்தை முருகனைத் தரிசிக்க வந்ததால் ஆனைமுகனே நேரில் தோன்றி ஆறுமுகனுக்கு நாம் செய்ய வேண்டிய பூஜைகளை முன் நின்று செய்ததாக பலர் பெருமை யோடு கூறினர்.

எம்மோடு வந்த யாரோ ஒருவர் சரியான முறையில் விரதத் தைக் கடைப்பிடிக்காமல் வந்துள்ளதாகவும், அதனால் தான் ஆனை முகன் எம்மைப் பூஜை செய்ய விடாமல் தடுத்து தானே அதைச் செய் ததாகவும் சிலர் கூறினர். ஆனால் அப்படி இருக்க முடியாது, ஏனெ னில் ஒருவர் அப்படிச் செய்ததால் அவரை மட்டுமே தெய்வம் தடுக் கும், மாறாக எல்லோரையும் பூஜை செய்ய விடாமல் தெய்வம் ஒரு நாளும் தடுக்காது எனவும் சிலர் பேசிக்கொண்டனர்.

அப்போதுதான் எம்மோடு வந்த நண்பர் சந்தன வேறு ஒரு முக் கிய காரணத்தைக் கூறினார். அன்றைய தினம் பெண்கள் சிலர் கபிலி த்தைக்கு வந்துள்ளதாகவும், பெண்கள் யாரும் வந்தால் முருகன் சந்நி திக்கும், புனித புளிய மரத்தடிக்கும் யானை யாரையும் வர விடுவ தில்லை எனவும் அவர் கூறினார். இதற்கு முன்பும் பல தடவைகள் பெண்கள் வந்திருந்த போது இப்படி நடந்துள்ளதாம். அவர் கூறியது போல பெண்கள் சிலர் அங்கு வந்திருப்பதை அப்போது தான் நாமும் அவதானித்தோம். தெய்வ சந்நிதானத்தில் எது நடந்தாலும் நடப்பவை எல்லாம் நன்மைக்கே என நாமும் நினைத்துக் கொண்டோம்.


அப்போது இருட்டிக் கொண்டு வந்தது. ஏற்கனவே ஆற்று மண லில் கொண்டு வந்து வைத்திருந்த எமது பைகள் மற்றும் உடமைக ளுக்கு அருகில் எல்லோரும் உட்கார்ந்து தேநீர் தயாரிந்து குடித்து விட்டு, கபிலித்தைக் கந்தனின் மகிமைகள் பற்றிய கதைகளைப் பேசிக் கொண்டிருந்தோம். சற்று இரவான பின்பு இரவு உணவைத் தயார் செய்து உண்டு விட்டு ஓய்வெடுத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவில் கும்புக்கன் ஆற்றில் பௌத்த மக்களின் வேடர் கால சம்பிரதாய பூஜை

கும்புக்கன் ஆற்றில் நீர் மிகவும் குறைவாக ஓடுவதால் ஆற்றின் நடுப்பகுதி மணல் நிறைந்து காணப்பட்டது. அதில் கொழும்புப் பகுதியில் இருந்து வந்த ஒரு பௌத்த பக்தர் குழு தங்கள் அழைத்து வந்த கப்பு மாத்தையாவுடன் சேர்ந்து ஒரு முக்கிய பூஜையை நடத்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர். அதுதான் இரவில் நடத்தும் காவல் தெய்வத்திற்கான வேடர் கால சம்பிரதாய பூஜை.



*ஆற்றில் வேடர் சம்பிரதாய பூஜைக்காக அமைக்கப்பட்ட தெப்பம்*

ஆற்றில் நீர் ஓடிக்கொண்டிருக்கும் பகுதியில் நீள் சதுர வடிவில் மணலைக் குவித்து, அதன் நடுவில் சற்று ஆழமாகத் தோண்டி ஒரு நீர்த்தொட்டி உருவாக்கப்பட்டிருந்தது. அதன் நடுவில் ஒரே அளவாக வெட்டிய வாழை மரங்களை ஒன்றிணைத்து ஒரு தெப்பத்தை அமைத்து, அதன் மேற்பகுதியில் நான்கு கம்புகள் நட்டு பந்தல் அமைத்து, அதை தென்னங்குருத்து மற்றும் பூச்சரங்கள் மூலம் அலங்காரம் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தனர். மிதந்து கொண்டிருந்த தெப்பத்திலும், அதைச் சுற்றியும் தீப ங்கள் எரிந்தன. இரவில் ஆற்றின் நடுப்பகுதி தீபஒளியில் பிரகாசித் தது. தெப்பத்தில் வாழை இலைகளைப் பரப்பி அதன் மேல் பல வகையான பழங்கள், கிழங்கு வகைகள், பொங்கல் மற்றும் பிரசாதங் களை வைத்திருந்தனர். இரவு எட்டு மணியளவில் சம்பிரதாய பூஜை ஆரம்பமானது.



*காவல் தெய்வத்திற்கு பூசை செய்த பௌத்த பக்தர்கள்*

எல்லோரும் வெள்ளை ஆடை அணிந்திருந்தனர். அவர்களில் எட்டுப் பேர் எட்டுத் திக்கிலும் நின்று கொண்டிருந்தனர். வெள்ளை முப்புரி நூல் கயிற்றை பூணூல் போல் அணிந்து, வேடர் கால சம்பிர தாய பூசை நடத்தினர். இப்பூஜையை வழிநடத்திய கப்பு மாத்தையா வேடர்களின் பாஷையில் ஏதோ மந்திரங்களை மூச்சு விடாமல் மிக வேகமாக ஓதினார். மந்திரத்தில் உச்சரிக்கப்பட்ட வார்த்தைகள் எதுவும் புரியவில்லை. இடையிடையே தமிழ்ச் சொற்களையும் உச்சரித்தார். சிறிது நேரத்தில் கப்புறாளை உருக்கொண்டு ஆடினார். சுற்றியிருந்த எட்டுப் பேரும் சேர்ந்து உருக்கொண்டு ஆடினர். இவ்வாறாக நள்ளிரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை அப்பூஜை நடந்தது. நாமும் பூஜையை அவதானித்துக் கொண்டி ருந்தோம். இருப்பினும் அன்று காலை முதல் டிராக்டர் வண்டியில் பயணம் செய்ததால் உண்டான உடல் வலியும், சோர்வும் எம்மையறி யாமலேயே நித்திரையை வரவழைத்தது. பதினொரு மணியளவில் எல் லோரும் உறங்கி விட்டோம்.

அடுத்த நாள் அதிகாலை 5 மணியளவில் அனைவரும் நித்திரை விட்டெழுந்து ஆற்றில் குளித்து, புதிய காவி உடை அணிந்து மீண்டும் அக்கரையில் உள்ள கோயில்களுக்குச் சென்றோம். அப்போது இரண் டாம் கட்டத்தில் உள்ள பிரதான முருகன் சந்நிதியில் ஒரு அழகிய காட்சியைக் காணக் கிடைத்தது. கபிலித்தைக் காட்டில் அப்படி ஒரு காட்சியைக் காண்பது அரிது. பிரதான முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோரின் கற்சிலைகளுக்கு முன்பக்கம் மிகவும் அழகாக அலங்கரி க்கப்பட்ட முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோரின் வெண்கலச் சிலைகளை சிங்கள பக்தர்கள் கொண்டு வந்து வைத்து, அவற்றிற்கு பூசை செய்து, பிரசாதங்கள் படைத்து வழிபட்டுக் கொண்டிருந்தனர்.



*கபிலித்தையில் முருகன், வள்ளி, தெய்வானை வெண்கலச் சிலைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் உள்ள பெரிய கோயில்களில் மட்டுமே இப்படி ஒரு காட்சியைக் காணலாம். ஆனால் ஒரு வனாந்தரக் காட்டில் இத்தனை அழகான சிலைகளா என வியப்புடன் அனைவரும் அச்சிலைகளைப் பார்த்து எம்மையறியாமலேயே கைகூப்பி வணங்கினோம். கொழும்புப் பகுதியில் இருந்து வந்து, இரவு முழுவதும் காவல் தெய்வத்துக்கு பூஜை செய்த அந்த சிங்கள பக்தர்கள் தான் இந்தச் சிலைகளைக் கொண்டு வந்துள்ளனர் என்பது பின்பு தெரிந்தது. சிங்கள, பௌத்த மக்களுக்கு முருகப் பெருமானின் மீது உள்ள உண்மையான பக்தியைப் பார்க்கும் போது உடல் சிலிர்த்தது.

அதன் பின்பு அங்கிருந்து மீண்டும் ஒரு தடவை புனித புளிய மரத்தடிக்குச் சென்று அனைவரும் தியான நிலையில் இருந்து முருகப் பெருமானை வணங்கி விட்டு, அங்கிருந்து செல்ல மனமில்லாமல் ஆற்றங்கரைக்கு வந்தோம். சரியாக காலை 8.30 மணிக்கு கபிலித்தைக் கந்தனின் கபிலவனத்தில் இருந்து கொட்டியாகல நோக்கிப் புறப்பட்டோம்.


## திவுலானகல எனும் வெகரகல மலை

கபிலித்தையில் இருந்து புறப்படும் போது கபிலித்தை அருகில் உள்ள தலைகுரு மலையைப் பார்க்க வேண்டும் என நண்பர் சந்தனவிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அவர் அம்மலையைக் காட்டுவதற்காக அருகில் உள்ள ஒரு மலைப்பாறைக்கு எம்மைக் கூட்டிச் சென்றார். திவுலானகல என அழைக்கப்படும் அம்மலைப்பாறை கபிலித்தையில் இருந்து கொட்டியாகலைக்குச் செல்லும் வழியில் 2 கி.மீ தூரத்தில் பாதையின் கிழக்குப்பக்கத்தில் அமைந்திருந்தது. அம்மலைப்பாறை உச்சியில் இருந்து பார்த்தபோது அகத்திய முனிவர் தங்கி இருந்து, சிவனை வழிபட்டுச் சென்ற தலைகுரு மலை அழகாகத் தெரிந்தது.

மேலும் அம்மலைப் பாறையில் உச்சிக்குச் செல்வதற்காக வெட்டப்பட்ட படிகளும் காணப்பட்டன. மலைச் சாரலில் ஒரு கற்குகையும், அதில் பிராமி எழுத்துக்கள் சிலவும் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகத்திய முனிவரின் தலைகுரு மலை



திவுலானகல மலைப்பாறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிலித்தையில் மீண்டும் எழுந்த கபிலேஸ்வர சிவலிங்கம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கபிலித்தைக் கந்தனைத் தரிசிக்க பல சித்தர்களும், முனிவர்களும் கபில வனத்திற்கு வந்து சென்றமை பற்றிய விபரங்களை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். இவர்கள் இங்கு சிவனின் ரூபமான லிங்கத்தை ஸ்தாபித்து வணங்கிச் சென்றிருப்பர் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு தடவையும் கபிலித்தைக்குச் செல்லும் போது பேரானந்தமாக இருக்கும். ஆனாலும் செல்லும் ஒவ்வொரு தடவையும் மனதில் ஒரே ஒரு விடயம் சற்று வேதனை தரும். அதுதான் எல்லா சுவாமி சிலையும் இருக்கும் இவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் இல்லையே என்பது.


கடந்த ஆண்டு 2020 ஆனி மாதம் "ஸ்ரீலங்கா காகபுஜண்டர் சித்தர் பீடம்" அமைப்பின் இளைய சுவாமி கோபிநாத் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டு என்னிடம் ஒரு மகிழ்ச்சியான தகவலை சொன்னார். போன வருடம் ஒரு இராணுவ உயர் அதிகாரி ஒருவரின் உதவியுடன் கபிலித்தையில் ஒரு சிவலிங்கத்தை தாம் ஸ்தாபித்ததாக அவர் கூறினார். கபிலித்தையில் பிரதான முருகன் சந்நிதியின் வலது பக்கம் அச்சிவலிங்கம் உள்ளதாகவும் அவர் கூறினார். அந்த செய்தியைக் கேட்டவுடன் பேரானந்தம் அடைந்தேன். என் மனதில் இருந்த அந்த மிகப்பெரும் குறை நீங்கியுள்ளதை எண்ணி அவருக்கு கோடி நன்றிகளைத் தெரிவித்து மகிழ்ந்தேன்.

கபில வனத்தில் பண்டைய காலத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக சித்தர்களால் பூஜிக்கப்பட்ட சிவனின் சொரூபத்தின் அடையாளம் மீண்டும் அங்கு நிலை நிறுத்தப்பட்டமை ஒரு வரலாற்று சிறப்புமிக்க விடயமாகும்.

அடுத்த தடவை கபில வனத்திற்கு எப்போது செல்வேன், அந்த சிவலிங்கத்தை எப்போது பார்ப்பேன் என ஆவலோடு இருந்தேன். அதற்கான சந்தர்ப்பமும் கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*கபிலித்தையில் 2019 ஆம் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாகலையில் இருந்து கபிலித்தைக்கு செல்லும் மேற்குப்பக்கப் பாதை

கபிலித்தை கந்தனைத் தரிசிக்க பல தடவைகள் பயணம் சென்றாலும் ஒரு சில பயணங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும். அப்படிப்பட்ட பயணம் ஒன்று கடந்த 2020 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நிகழ்ந்தது. காகபுஜண்டர் சித்தர் பீட சுவாமி களின் முக்கிய யாகம் ஒன்று கபிலவனத்தில் நடைபெறவிருப்பதால் அதில் கலந்து கொள்ளுமாறு சித்தர் பீடத்தின் இளைய சுவாமி அவர் கள் என்னை அழைத்ததினால் இப்பயணத்தை ஏற்பாடு செய்திருந் தேன். எனது இந்த முறை கபிலித்தை யாத்திரையின் முக்கிய நோக் கமே அவர் கடந்த வருடம் அங்கு ஸ்தாபித்த சிவலிங்கத்தை தரிசிக்க வேண்டும் என்பது தான். இப்பயணத்தில் இலங்கையின் பல பாகங்க ளில் இருந்தும் நண்பர்கள் பலர் என்னோடு இணைந்து கொண்டனர்.



*விலா ஓயா பாலத்தின் அருகில் உள்ள பிள்ளையார் கோயில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சியம்பலாண்டுவையில் இருந்து கொட்டியாகலைக்குச் செல்லும் வழியில் ஓடும் விலா ஓயா பாலத்தின் அருகில் தற்போது ஒரு சிறிய கோயில் கட்டப்பட்டுள்ளது. அங்கு உள்ளே கபிலித்தைக் காவல் தெய் வமான கடவர சுவாமியின் சிலையும், வெளியே விநாயகரின் சிலையும் காணப்பட்டன. வண்டியில் இருந்து இறங்கி எமது கபிலித்தை புனித யாத்திரை எந்தவித இடையூறும் இன்றி நல்லபடியாக நிறைவுற வேண் டும் என எல்லோரும் விநாயகரை வேண்டினோம். விநாயகருக்கு தேங்காய் உடைத்து வணங்கி விட்டு பயணத்தைத் தொடர்ந்தோம். காலை 10 மணியளவில் கொட்டியாகலையை அடைந்து அங்கிருந்து இரண்டு டிராக்டர் வண்டிகளில் கபிலித்தை நோக்கிப் புறப்பட்டோம்.

இந்தத் தடவை வழிகாட்டி நண்பர் எம்மைக் கூட்டிக் கொண்டு சென்ற பாதை கபிலித்தைக்குச் செல்லும் மேற்குப்பக்க பாதையாகும். இப்பாதையில் கற்பாறைகளும், வெளிகளும், பற்றைகளுமே அதிகள வில் காணப்பட்டன. வெட்டவெளி என்பதால் வெய்யில் சுட்டெரித்தது. நண்பர்கள் தொப்பிகள், வேட்டித் துண்டுகள் மூலம் தலையை போர் த்திக் கொண்டனர். இரண்டு மணிநேரம் வெய்யிலிலே பயணம் செய்த செய்த பின்பே அடர்ந்த காட்டுக்குள் வண்டிகள் புகுந்தன. அப்போது தான் முதல் நாள் காட்டில் மழை பெய்துள்ளமை தெரிய வந்தது. பல இடங்களில் பாதை சேற்றுக் குழிகளாகக் காணப்பட்டது.


சுமார் 10 நிமிட பயணத்தின் பின் வண்டிகள் நிறுத்தப்பட்டன. அது கபிலித்தைக்கு செல்பவர்கள் ஓய்வு எடுத்துச் செல்லும் இடம். அங்கு கபிலித்தையில் இருந்து வந்த ஓர் டிரக்டர் வண்டி காணப்பட் டது. ஒரு மரத்தின் முன்பக்கம் 6அடி உயரத்தில் ஒரு முருகன் சிலை வைக்கப்பட்டிருந்தது. எல்லோரும் இறங்கி முருகனுக்கு கற்பூரம் மற்றும் ஊதுபத்தி ஆகியவற்றைக் கொளுத்தி வணங்கினோம். அவ்விடத்தில் எல்லோரும் தேநீர் பருகிய பின் மீண்டும் பயணம் தொடர்ந்தது. சார திகள் பாதையில் காணப்பட்ட சேற்றுக் குழிகளுக்குள் மிகவும் லாவ கமாக வண்டிகளை செலுத்தினர். வண்டிகள் ஒரேயடியாக பள்ளத்தில் விழுந்து மேட்டில் ஏறின. சில இடங்களில் பெட்டிகள் கவிழ்ந்து விடுமோ என்று அஞ்சும் அளவுக்கு நூலளவில் வீழ்ந்து தப்பி எழும் பின. அப்போது ஒரு இடத்தில் எங்கள் வண்டி சேற்றுக்குழியில் இறுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேற்குப்பக்க பாதையில் காட்டில் உள்ள முருகன் கோயில்



சேற்றில் புதைந்த டிராக்டர் வண்டியை சங்கிலியால் கட்டி இழுத்தபோது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. உடனே அடுத்த வண்டியுடன் சங்கிலியால் கட்டி இழுத்து எடுத்தோம். ஓர் இடத்தில் எங்கள் இரண்டு வண்டிகளும், எதிரே வந்த இரண்டு வண்டிகளும் சேற்றுக் குழிகள் இருந்த இடத்தில் சந்தித்தன. வண்டிகளுக்கு செல்ல இடம் கொடுப்பதில் சங்கடங்கள் இருந்தன. அப்போதுதான் கண்ணிமைக்கும் நேரத்தில் எதிரே வந்த வண்டிகளில் ஒன்றின் பெட்டி திடீரென சேற்றுக் குழிக்குள் குடை சாய்ந்தது. உடனடியாக எல்லோரும் பாய்ந்து சில நொடிகளுக்குள் வண்டியை நிமிர்த்தி விட்டோம். அந்த வண்டியில் வந்த சிறுவனின் காலில் சிறு சிராய்ப்புக் காயம் ஏற்பட்டிருந்தது. சிறுவனின் காலுக்கு முதலுதவி செய்த பின் பயணம் தொடர்ந்தது.

இவ்வாறு பயணம் செய்து மாலை 4.20 மணியளவில் கபிலி த்தை, கும்புக்கன் ஆற்றங்கரையை அடைந்தோம். இன்றைய பயணத் திற்கு ஐந்தரை மணி நேரம் எடுத்துள்ளது. கும்புக்கன் ஆற்றின் மத்தியில் உள்ள மணல் பரப்பில் நவகோடி சித்தர் பீட சுவாமிகளின் யாகம் நடந்து கொண்டிருந்தது. இந்த சித்தர் பீடத்தின் இளைய சுவாமியின் அழைப்பின் பேரிலேயே இம்முறை கபிலித்தை பயணத்தை ஏற்பாடு செய்திருந்தேன். ஆற்றில் வேடர் கால சம்பிரதாய குளியலு க்குப் பின் அக்கரையில் உள்ள கோயில்களுக்குச் செல்ல ஆயத்த மானோம்.


இருள் சூழ்வதற்குள் சுவாமியையும், புனித புளிய மரத்தையும் தரிசிக்க வேண்டும். கபிலித்தைக்கு வரும் பலர் வந்தவுடன் சில மணி நேரம் ஆற்றில் குளிப்பர். பின்பு உணவு சமைத்து சாப்பிட்டு விட்டு, ஓய்வெடுப்பர். அடுத்த நாள் காலையில் தான் சுவாமி தரிசனம் செய் வர். ஆனால் நான் அழைத்துச் வருபவர்களை முதல் நாளே சுவாமி தரிசனம் செய்யக் கூட்டிச் செல்வேன். ஏனெனில் இப்படி ஓர் அற்பு தமான கோயிலுக்குச் சென்றவுடன் சுவாமியைப் பார்க்க வேண்டும் எனும் ஆவலோடு தான் எல்லோரும் வருவர். எனவே கோயிலையும், சுவாமியையும் பார்க்காமல் அவர்களுக்கு அந்த இரவில் நிம்மதியாக உறங்க முடியாது. எனவே தான் வந்த முதல் நாளே நண்பர்களை கோயிலுக்கு அழைத்துச் செல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றின் மத்தியில் நடந்த நவகோடி சித்தர் பீட யாகத்தில் கலந்து கொண்டோம். மாலை 6 மணிவரை அங்கு இருந்தோம். அதன்பின் சுவாமியை தரிசிக்க ஆற்றின் அக்கரைக்குச் சென்றோம். அக்கரையில் நின்று கொண்டிருந்த இராணுவ சிப்பாய் சற்று நேரத்தில் இருள் சூழ்ந்து விடும், காட்டு மிருகங்கள் வரும் நேரம், விரைவாக தரிசனம் செய்து விட்டு வாருங்கள் என்று எம்மை அனுப்பியதோடு எமக்குப் பாதுகாப்பாக எம்மோடு வந்தார். அவர் கையிலே 5 அடி நீளமான ஓர் குச்சி இருந்தது. அதுதான் அவருடைய ஆயுதம்.

கபிலித்தையில் மூன்று இடங்களில் வணக்கத் தலங்கள் உள்ளன. இவை பற்றி ஏற்கனவே விளக்கியுள்ளேன். இந்தத் தடவை பார்த்த போது பிரதான முருகன் சந்நிதியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டிரு ந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. இதற்கு முன்பு வந்த போது இங்கு நான் கண்ட சிலைகளில் பலவற்றைக் தற்போது காணவில்லை. அவற்றிற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. புதிதாக மயில் மீது முருகன் அமர்ந்திருக்கும் சுதை சிலையொன்று வண்ண நிறங்க ளுடன் காணப்பட்டது.



*மயில் மீது முருகன் அமர்ந்திருக்கும் சுதை சிலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித புளியமரத்தடியிலும் முன்பு பார்த்ததை விட முற்றிலும் வித்தியாசமாக அந்த இடம் காணப்பட்டது. முன்பு பல சிலைகள் காணப்பட்ட இப்புனித புளியமரத்தடியில் தற்போது மூன்று சிலைகள் மட்டுமே இருந்தன. அவை மரத்தின் முன்பக்கம் ஒன்றும், பின்பக்கம் ஒன்றும், மரத்தின் மத்தியில் ஒன்றுமாகக் காணப்பட்டன. புனித மரத்தின் கீழே உயரமான தடிகள் நட்டு, அவற்றில் சிவப்பு மற்றும் வெள்ளைத் துணிகளில் கட்டப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான காணிக்கை முடிச்சுகள் எதையும் காணவில்லை. மரத்தில் இருந்து சுமார் 20 அடி தூரத்தில் சுற்றிவர கம்பி கட்டப்பட்டு அதன் உள்ளே யாரும் சென்று புனித மரத்தை தொட்டு வணங்க முடியாத வண்ணம் தடை செய்யப்பட்டிருந்தது. மொத்தத்தில் அவ்விடம் வெறிச்சோடிக் காணப்பட்டது. ஆனால் முன்பை விட மிகவும் அமைதியான, மனதுக்குள் ஒருவித பயத்தை ஏற்படுத்தும் சூழ்நிலை அவ்விடத்தில் இருப்பதை உணரக் கூடியதாக இருந்தது.

நண்பர்கள் அனைவரும் நிசப்தமாக சென்று அந்த அதிசய மரத்தைப் பார்த்து கைகூப்பி வணங்கி மரத்தை சுற்றி வந்தனர். அப்போது இராணுவ சிப்பாய் நீண்ட குச்சியுடன் அங்கு வந்தார். என் அருகில் வந்தவர் மெல்லிய குரலில் பெரிய யானை வந்து விட்டது, எல்லோரும் சத்தம் போடாமல் போய் விடுவோம் என்றார். நாளை வந்து ஆறுதலாக தியானம் செய்யலாம், இப்போது அமைதியாக செல்வோம் என நண்பர்களுக்குக் கூறினேன். எல்லோரும் அங்கிருந்து மெதுவாக பிரதான சந்நிதி இருக்கும் இடத்திற்கு வந்தோம்.


அங்கு நண்பர்களை அதிர்ச்சி அடையச் செய்யும் அந்தக் காட்சியைக் கண்டனர். சுமார் 12 அடி உயரமான யானை அவ்விடத்தில் நின்று கொண்டிருந்தது. எம்மைப் பார்த்தவுடன் எமை நோக்கி வர முயன்றது. உடனே இராணுவ சிப்பாய் முன்னால் சென்று அவர் வைத்திருந்த நீளமான குச்சியை யானையின் முன்னே நீட்டினார். அது தானாக பின் வாங்கியது. அப்போது தான் அந்த சின்னக் குச்சியின் மகிமை தெரிந்தது. அந்த சாதாரண குச்சி அவ்விடத்தில் ஓர் அங்குசமாக பயன்படுத்தப்பட்டது. விரைவாக அனைவரும் ஆற்றங்கரைக்குத் திரும்பினோம். ஆற்றைக்கடந்து அடுத்த கரைக்கு வந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித புளியமரத்தடி



பிரதான சந்நிதியில் பெரிய ஆனைமுகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் காலை பொங்கல் வைக்க வேண்டும். பூஜை செய்ய வேண்டும். எனவே இரவே எல்லா பொருட்களையும் ஒழுங்கு படுத்தினோம். இரவு உணவாக பாணுடன் வாழைப்பழம், ஜேம் ஆகிய வற்றை உண்டு விட்டு, ட்ராக்டர் வண்டியில் சிலரும், நிலத்தில் சில ரும் உறங்க ஆயத்தமானார்கள்.

இரவில் நவகோடி சித்தர் பீட சித்தர் சுவாமிகள் கபிலித்தையின் காவல் தெய்வமான கடவர தெவியாவுக்கு பூசை நடத்த ஆயத்தமா னார்கள். நாமும் அதில் கலந்து கொள்ள உள்ளோம். அன்றைய இர வும், அடுத்த நாள் காலையும் சில முக்கிய சம்பவங்கள் நடைபெற இருந்ததை அந்த சமயம் நாம் யாரும் அறிந்திருக்கவில்லை.

நேரம் இரவு 10.30 மணி. கபிலித்தையில் கும்புக்கன் ஆற்றின் இக்கரையில் பக்தர்கள் அனைவரும் தங்கியுள்ளனர். இக்கரையில் உள்ள கபிலித்தை காவல் தெய்வம் கடவர சுவாமிக்கு நவகோடி சித்தர் பீட சுவாமிகள் விசேட பூசை நடத்திக் கொண்டிருந்தனர். நாமும் அப்பூசையில் கலந்து கொண்டோம். சிலர் நித்திரை கொண்டி ருந்தனர். சிலர் டிராக்டர் வண்டியில் உட்கார்ந்து பூசையைக் கவனி த்த வண்ணம் இருந்தனர்.

இந்த சமயத்தில் ஆற்றின் அடுத்த கரை ஓரத்தில் சலசப்பு ஏற் பட்டதை அனைவரும் அவதானித்தனர். அங்கு பெரிய யானை ஒன்று நீர் குடித்துக் கொண்டிருந்தது.அதன் அருகில் காட்டுப்பன்றி ஒன்றும் நீர் குடித்துக் கொண்டிருந்தது. நீர் குடித்த யானை ஆற்றில் இறங்கி இக்கரைக்கு வர முயற்சித்தது. பின்பு ஆற்றின் நடுப்பகுதிக்கு வந்தது. உடனே நித்திரையில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து விட்டனர்.

எல்லோரும் யானையை நோக்கி டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச் சினர். ஜீப் வண்டியின் மேலே பொருத்தப்பட்டிருந்த பெரிய விளக்குகள் ஆற்றை நோக்கி ஒளி வீசின. இக்கரையை நோக்கி வந்த யானை சிறிது நேரம் நின்றது. பின்பு ஆற்றிலே சுமார் 50 மீற்றர் தூரம் நடந்து சென்று இக்கரைக்கு ஏறியது.

அன்றைய இரவு இக்கரையில் கூடாரங்களிலும், டிராக்டர் வண் டிகளிலும், ஜீப் வண்டிகளிலும், தரையிலும் சுமார் 150 பேர் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்தனர். அனைவரும் எழுந்து நின்றனர். காவல் தெய்வத்துக்கு பூசை நடந்து கொண்டிருந்தது. கரையேறிய யானை காட்டின் ஓரமாக நாம் இருந்த இடத்தின் பின்பக்கமாக வந்தது. பக்தர்கள் உண்ட மதிய உணவின் மிச்சங்களை ஒரு மரத்தின் கீழ் கொட்டியிருந்தனர். அந்த இடத்திற்கு வந்த யானை அங்கிருந்த உணவை உண்டு விட்டு காட்டுக்குள் சென்றது.

அதன் பின் காவல் தெய்வத்துக்கு பூஜை முடிந்தது. இரவு 12.30 மணியளவில் அனைவரும் படுத்துக் கொண்டனர். எங்களை அழைத்து வந்த ட்ராக்டர் சாரதிகள் ஒன்று கூடி நாங்கள் விழித்திருக்கிறோம் நீங்கள் உறங்குங்கள், காட்டுக்கு சென்ற யானை மீண்டும் எந்த நேரத்திலும் வரலாம் என்று கூறிவிட்டு சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

சில மணிநேர உறக்கத்தின் பின் அதிகாலை நான்கு மணிக்கு எல்லோரும் விழித்தோம். சாரதிகள் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். எழுந்தவுடன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தோம். அப்போது அவர்கள் நள்ளிரவு 2 மணியளவில் மீண்டும் யானை வந்ததாகவும் கூடாரத்தில் இருந்த ஒரு அரிசிப் பையை தூக்கிக் கொண்டு அக்கரைக்கு சென்று விட்டதாகவும் கூறினர். நித்திரையில் இருந்த எமக்கு இவை எதுவும் தெரியவில்லை.

## கபிலித்தை முருகன் கோயில் மூலமூர்த்திக்கு கும்புக்கன் ஆற்றில் நடைபெற்ற சிறப்புமிக்க அபிஷேகம்

அதிகாலை எல்லோரும் கும்புக்கன் ஆற்றில் நீராடினோம். உடைகளை மாற்றிக் கொண்டு காவல் தெய்வத்தை வணங்கி, அடுத்த வேலைகளை ஆரம்பித்தோம். இன்று சுவாமிக்கு அபிஷேகம், பொங்கல் பழங்கள் படையல், பூசை ஆகியவை நடத்த திட்டமிட்டிருந்தோம். நேற்று மாலை கோயிலில் இருந்த பொறுப்பாளரிடம் நாம் சுவாமிக்கு அபிஷேகம் செய்ய உள்ளோம். சுவாமி சிலை ஒன்றை தர முடியுமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்டோம். எந்த மறுப்பும் தெரிவிக்காமல் காலையில் வாருங்கள் தருகிறேன் என்றார்.

அதிகாலையில் ஒருபக்கம் நண்பர்கள் சிலர் பொங்கல் தயார் செய்து கொண்டிருந்தனர். அடுத்த பக்கம் சிலர் அவல், பஞ்சாமிர்தம் ஆகியவற்றை தயார் படுத்திக் கொண்டிருந்தனர். சிலர் பூசைப் பொருட்களை வெவ்வேறாக ஒழுங்கு படுத்தினர். பழங்கள், இளநீர், ஆகியவற்றை சிலர் வெட்டி தனித்தனியாக வைத்துக் கொண்டிருதனர்.

பொழுது விடிந்தது. மெல்ல மெல்ல வெளிச்சம் தோன்றியது. தயார் படுத்திய பூஜை பொருட்கள், பழங்கள், பொங்கல் எல்லாவற்றையும் நண்பர்கள் ஆற்றின் மத்திக்குக் கொண்டு சென்றனர். சரியாக காலை 6 மணிக்கு மூன்று பேர் மட்டும் அக்கரையில் உள்ள கோயில் வளாகத்துக்குச் சென்றோம். ஏனெனில் அபிஷேகம் செய்ய சுவாமி சிலையைக் கொண்டுவர வேண்டும். கோயிலுக்குப் பொறுப்பாளர் இன்னும் அந்த இடத்துக்கு வரவில்லை. அவருக்காக காத்திருந்தோம். அந்த சமயத்தில் சட்டென்று ஓர் எண்ணம் மனதில் தோன்றியது.

நேற்று மாலை நவகோடி சித்தர் பீடத்தின் யாகம் முடிந்தவுடன் அவர்கள் இங்கு ஸ்தாபித்த சிவலிங்கம் பற்றிக் கேட்டேன். அப்போது ஒரு வேதனையான விடயத்தை அவர் கூறினார். சில மாதங்களுக்கு முன்பு இங்கு வந்த அதிகாரம் மிக்க சிலர் இங்கிருந்த பல சிலைகளை எடுத்துச் சென்று விட்டதாக இங்குள்ளவர்கள் கூறியதாக அவர் கூறினார்.சிவலிங்கத்தையும் காணவில்லை என்றும்,அதையும் கொண்டு சென்றிருப்பர் எனவும் கூறினார். ஆவலோடு பார்க்க வந்த சிவலிங்கத்தை அகற்றி விட்டார்களே என மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்நிலையில் தற்போது சுவாமி சிலைகள் உள்ள வளாகத்துக்கு வந்துள்ளேன். அப்போது சிவலிங்கம் பற்றி என் மனதிலே திடீரென அந்த எண்ணம் தோன்றியது. உண்மையில் சிவலிங்கத்தை கொண்டு சென்று விட்டார்களா? தேடித் பார்க்கலாமா? எனும் ஓர் நப்பாசை மனதிலே தோன்றியது. அங்கிருந்த பிள்ளையார் முருகன் உட்பட எல்லா சிலைகளையும் வணங்கிய வண்ணம் சிவலிங்கம் எங்கேயாவது உள்ளதா எனத் தேடினேன். எங்கும் சிவலிங்கத்தைக் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அந்த இடத்தின் மத்தியில் சிலைகள் உள்ளன. இவை தற்போது வேலியமைந்து யாரும் உள்ளே போகாத வகையில் பாதுகாக்கப் பட்டிருந்தன. வெளியே முன்பக்கம் பூஜைத் தட்டுகள் படைக்க மூன்று மேசைகள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றின் இடது பக்கம் பிள்ளையார் சிலை காணப்பட்டது. வலது பக்கம் 6 முகங்கள், 12 கைகளுடன் சுதையில் செய்யப்பட்ட புதிய முருகன் சிலையும், இவற்றின் முன்பக்கம் கற்பூரம் கொளுத்தும் கற்களும் இருந்தன. எல்லாவற்றிற்கும் முன் பக்கம் தேங்காய் உடைக்கும் இடம் காணப்பட்டது. சிலைகளைச் சுற்றி வட்டவடிவில் சுமார் 10 அடி அகலத்தில் சுற்றுவீதி அமைந்துள்ளது. அதை அடுத்து காட்டு மரங்கள் காணப்படுகின்றன. சிலைகள் உள்ள இடத்தில் சிவலிங்கத்தைக் காணவில்லை.சற்று உள்ளே சென்று காட்டு மரங்கள் உள்ள இடத்தில் தேடித் பார்க்கலாம் என நினைத்தேன்.

முன்பக்கத்தில் இருந்த மரங்களின் கீழே சிவலிங்கத்தைத் தேடிக் கொண்டே சென்றேன். சிறிது நேரத்தில் கோயிலின் பின்பக்கம் இருந்த ஒரு மரத்தின் கீழ் சருகுகளால் அரைவாசி மூடப்பட்ட நிலையில் கல் ஒன்றின் மேற்பகுதி தெரிந்தது. உடனே சருகுகளை விலக்கி விட்டு பார்த்தபோது அங்கே ஒரு பகுதி உடைந்த நிலையில் நான் தேடிவந்த சிவலிங்கம் காணப்பட்டது. லிங்கத்தின் கீழ் ஆவுடையாரின் நீர் வழியும் பகுதி உடைத்து நீக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் இருந்த சதுரமான பீடத்தையும் காணவில்லை. இருப்பினும் இல்லை என்று நினைத்து வேதனையடைந்த ஒரு பொருள் இருந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சிவலிங்கத்தை எடுத்து துடைத்து அதை மரத்தின் முன்பக்கமாக கீழே வைத்து வணங்கினேன்.

அப்போது பொறுப்பாளர் வந்தார். எங்களைப் பார்த்தவுடன் சிலைகள் உள்ள இடத்திற்குச் சென்று ஓர் சிலையை தூக்கிக் கொண்டு வந்து எமது கையில் தந்தார். அப்போது தான் பார்த்தோம். அது ஒன்றரை அடி உயரமான முருகனின் கற்சிலை. இக்கோயிலின் மூல மூர்த்தி. அவர் ஏதாவது சிறிய வெண்கலச் சிலையைத்தான் தருவார் என நினைத்தோம். ஆனால் மூலமூர்த்தியையே கொடுத்து விட்டார். இதை யாருக்கும் நான் கொடுப்பதில்லை. கவனமாகக் கொண்டு செல்லுங்கள் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*பீடத்தின் ஒரு பகுதி உடைந்த நிலையில் கபிலித்தை சிவலிங்கம்*

அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு, முருகனின் மூல மூர்த்தி கிடைத்த மகிழ்ச்சியில், சிலையுடன் ஆற்றிற்கு வந்தோம். சிலையைப் பார்த்ததும் நண்பர்கள் அனைவரின் முகத்திலும் அளவில்லா ஆனந்தம் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றில் முருகனுக்கு அபிஷகம் செய்வதற்கான அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. எங்களுடன் ஐயர்மார் இருவர் வந்திருந்தனர். ஆற்றின் மத்தியில் மேசை போட்டு அதன் மீது முருகனை வைத்து அபிஷேகம் செய்தனர். பால், பழங்கள், பஞ்சாமிர்தம், விபூதி, சந்தனம், குங்குமம், மஞ்சள் என்று முருகப் பெருமான் அபிஷேகத்தில் நீராடினார். நண்பர்கள் ஒவ்வொருவரும் தமது கையால் முருகனுக்கு இளநீர் அபிஷேகம் செய்தனர். அருகில் பூஜை ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த சிங்கள நண்பர்கள் அனைவரும் வரிசையாக வந்து முருகப் பெருமானுக்கு இளநீர் அபிஷேகம் செய்தனர். அபிஷேகம் ஆரம்பித்து சில நிமிடங்களில் அக்கரை பக்கம் இருந்து அந்தப் பெரிய ஆனைமுகன் வந்து ஆற்றில் இறங்கினார். இறங்கிய தும்பிக்கையான் அங்கே நின்று தம்பி ஆறுமுகனுக்கு நடந்த இந்த சிறப்பான அபிஷேகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.


பல மாதங்களாக கோயிலில் இருந்த மூலமூர்த்திக்கு சுமார் ஒரு மணிநேரம் அபிஷேகம் நடைபெற்றது. சுவாமியை புதிய பட்டாடை உடுத்தி அலங்கரிந்து ஆற்றிலிருந்து கோயிலுக்குக் கொண்டு சென்றோம். நண்பர்கள் மிகவும் பயபக்தியோடு இருவர் இருவராக மாறி மாறி மூலமூர்த்தியை தூக்கிச் சென்றனர். நம் ஊர்க் கோயில்களில் நடக்கும் திருவிழாவை நடுக்காட்டில் நடத்தியது போன்று இருந்தது. இப்படி ஓர் சிறப்பான நிகழ்வு நடக்கும் என்று யாரும் கனவிலும் நினைத்திருக்கவில்லை என நண்பர்கள் பெருமிதம் கொண்டனர்.

கோயிலின் பொறுப்பாளர் எம்மில் ஒருவரை மட்டும் வேலி அடைக்கப்பட்ட உள்பகுதிக்கு சென்று பூசை செய்யச் சொன்னார். நண்பர் ஒருவர் உள்ளே சென்று பூசை செய்தார். முன்பக்கம் பொங்கல், அவல், பஞ்சாமிர்தம், பழங்கள், தாமரைப்பூக்கள் ஆகியவை படைக்கப்பட்டன. மாலைகளை சிலைகளுக்கு சாத்தினோம். நண்பர்கள் எல்லோரும் தேங்காய் உடைத்தனர்.

அப்போது திடீரென அங்கு ஒரு யானை வந்தது. சிலைகள் இருக்கும் இடத்தை நோக்கி வந்தது. பொறுப்பாளர் கையில் ஓர் நீண்ட குச்சியை வைத்துக் கொண்டு யானையை கட்டுப்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கபிலித்தை மூல மூர்த்திக்கு நடைபெற்ற அபிஷேகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்புக்கன் ஆற்றில் கபிலித்தை மூல மூர்த்திக்கு நடைபெற்ற அபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கபிலித்தை மூல மூர்த்திக்கு நடைபெற்ற அபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிஷேகத்தின் பின் சுவாமியை சந்நிதிக்கு கொண்டுவரும் பக்தர்கள்



சன்னதியில் காணப்படும் முருகப் பெருமானின் இன்னுமோர் கற்சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அபிஷேகம் செய்யப்பட்ட மூலமூர்த்தியின் அழகுத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரசாதம் உண்ணும் யானைகள்



பிரசாதம் உண்ணும் யானைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தார். பெரியவர் அமைதியானவர். ஆனால் இவர் கொஞ்சம் குழப்பமானவர், எனவே யாரும் அருகில் வர வேண்டாம் என்றார். அது மண்ணை வாரி தன் தலையில் போட்டுக் கொண்டு ஆக்ரோஷமாக முன்னே வர எத்தனித்தது. "கொஞ்சம் பொறு, சுவாமிமார் பூஜை செய்து கொண்டிருக்கிறார்கள், பூசை முடிந்தவுடன் உனக்குத் தருவார்கள், அதற்குள் என்ன அவசரம்" என பொறுப்பாளர் அந்த யானையை பார்த்து கேட்டார்.

சிறிது நேரத்தில் பூசை முடிந்தது. அப்போது ஆற்றில் நின்று கொண்டிருந்த பெரிய ஆனைமுகனும் வந்தார். இருவரும் வந்து நாம் ஓரத்தில் வைத்திருந்த அவல்சட்டியில் தும்பிக் கைகளை விட்டு அவலை சாப்பிட்டனர். அது முடிந்ததும் சின்னவர் அவ்விடத்தில் நிற்க பெரியவர் முன்னோக்கி வந்தார். நாம் கொடுத்த பழங்களை கையில் வாங்கி உண்டார். அங்கு வந்த சிங்கள பக்தர்களுக்கும் பிர சாதங்கள் கொடுத்தோம்.

அதன்பின்பு அங்கிருந்து புனித புளிய மரத்தடிக்குச் சென்று மூன்று சிலைகளையும், மரத்தையும் வணங்கினோம். அங்கும் கம்பி வேலியின் உள்ளே செல்ல ஒருவரை மட்டும் அனுமதித்தனர். நான் மட்டும் உள்ளே சென்று மூன்று சுவாமி சிலைகளுக்கும் மாலை அணி வித்து வணங்கினேன். அனைவரும் உட்கார்ந்து தியானம் செய்தோம். சிறிது நேரத்தில் அங்கிருந்து செல்ல மனமில்லாமல் அவ்விடத்தை விட்டுச் சென்றோம்.

ஆற்றிற்கு வந்து எமது பொருட்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு, அவ்விடத்தை முன்பு இருந்தது போல் நன்றாக சுத்தம் செய்தோம். அக்கரைக்குச் சென்று எங்கள் பொருட்களை ட்ராக்டர் வண்டிகளில் ஏற்றி விட்டு, காவல் தெய்வம் கடவர சுவாமியை வணங்கி விட்டு, சரியாக 10.30 மணிக்கு கபிலித்தையில் இருந்து கிளம்பினோம்.

இடையில் காட்டில் இரண்டு இடங்களில் ஓய்வெடுத்து விட்டு சுமார் 5 மணி நேர பயணத்தின் பின் 3.45 மணியளவில் கொட்டி யாகலையை அடைந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பொலிவு பெற்ற சிவலிங்கம்

கபிலித்தை முருகன் சந்நிதிக்கு அருகில் காகபுஜண்டர் சித்தர் பீடம் ஸ்தாபித்த சிவலிங்கம் சிதைக்கப்பட்ட நிலையில் அதற்கு புத்துயிர் கொடுக்க அச்சித்தர் பீடத்தின் சுவாமிகள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். அதன் பயனாக சிதைக்கப்பட்ட சிவலிங்கம் உயர் அதிகாரிகள் சிலரின் உதவியுடன் 2021 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமி அன்று மீண்டும் புத்துயிரும், புதுப்பொலிவும் பெற்றுள்ளது.


அன்றைய தினம் முன்பு சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்ட அதே இடத்தில் ஒரு நீள்சதுர பீடம் அமைத்து, அதன் மேல் இன்னும் ஒரு சதுர பீடம் அமைத்து, அதன் மேல் புதுப்பொலிவு பெற்ற சிவலிங்கத்தை ஸ்தாபித்துள்ளனர். பீடத்தின் முன்பக்கம் திரிசூலம் ஒன்றும் நடப்பட்டுள்ளது. பீடத்திற்கு மஞ்சள் வர்ணமும், சிவலிங்கத்திற்கு கறுப்பு வர்ணமும் பூசப்பட்டுள்ளது. சிவலிங்கத்திற்கு பூக்கள் மற்றும் இலைகளினால் அலங்காரம் செய்து விசேட பூசையும் செய்யப்பட்டுள்ளது.



*புதுப்பொலிவு பெற்ற சிவலிங்கத்திற்கு பூசை செய்யும் காகபுஜண்டர் சித்தர் பீட சுவாமிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கபிலித்தை முருகன் சந்நிதியின் வலது பக்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள
கபிலேஷ்வரர் சிவலிங்கத்தின் முழுமையான தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

1. Kaththaragama Deviyange Adaviye Haaskam-Ajithlaal Santhaudaya-Lankadeepa News Paper

2. Chethihashika Raavana-Acharya Sooriya Gunasekara-Visindunu Prakashakayo-Boralesgamuwa-2012-Page.16, 56

3. Dakunu Budu Siripathula Pihiti Makkama Saha Ravana Rajuge Sellipi-Jayarathna Pathiraarachchi-Boralasgamuva-2005-Page. 65, 66

4. மட்டக்களப்பு மான்மியம்-F.X.C.நடராஜா (1962) மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை-மட்டக்களப்பு-1998-பக். 43, 44

5. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி-திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம்-மட்டக்களப்பு-1993-பக்.94, 95

6. பாரம்பரியமிக்க கதிர்காம யாத்திரையும், கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்- என்.கே.எஸ். திருச்செல்வம்-கொழும்பு-2013 -பக்.10, 11, 283-289

7. Inscriptions of Ceylon-Volume 1-Early Brahmi Inscriptions-S.Paranavitana-Colombo-1970-Page.32, 42, 43, 44

8. Navathama Seelalipi Gaveshana-Poojya Ellaavala Medananda Himi-Colombo-2008-Page. 38, 39, 129, 62

9. Helanka Siv hela Vanshaya-Danesh Kodippili Arachchi-Pannipitiya-2009-Page-169, 45, 46, 47, 48

10. Where Veddahs Cursed and Leopards Dispensed Justice-Article by Sam Wickramasinghe in Daily News Paper on 05.01.1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும் முனிவர்களும்- என்.கே.எஸ். திருச்செல்வம்- கொழும்பு- 2019- பக்.20-45

12. Inscriptions of Ceylon-Volume 1-Early Brahmi Inscriptions- S.Paranavitana-Colombo-1970-Page. 49, 54, 39, 10, 28, 50, 58, 78,

13. கதிர்காம கலம்பகம்-கந்தப்ப சுவாமிகள்-சென்னை-1897-பக்.3

14. Historic Matale- Dept.of Cultural Affairs- Cyril Gamage-Pandit Paranagama Sumanajothi Nayaka Thero- Colombo-1984-Page. 287

15. Siddha in Malaysia-Thavaththiru Rengaraja Desikar- Malaysia-2010-Page. 15-18

16. Polonnaruwa Kapila Thabasvinge Prathimava-D.M.Karunarathna-Colombo-2010-Page. 72, 74

17. Polonnaruwa Pothgul Vihara Prathimawa-Dr.Mahinda Somathilaka-Colombo-2006-Page. 76

18. Ancient Anuradapura-Dr.Anuradha Senevirathna-Colombo-1994-Page.202

19. Epigraphical Notes-No. 1-8-Malani Dias-Colombo-1991-Page. 24-No. 5 : 9

20. அபிதான சிந்தாமணி- ஆ.சிங்காரவேலு முதலியார்- சென்னை-2001-பக்.397

21. Kriya Babaji and the Ancient Katharagama Shrine- by C. Shanmuganayagam- Ceylon Daily News Paper- 3.5.1995

22. Katharagama Deviyange Adaviye Haskam-part 2-Ajithlaal Shanthaudaya- 2012 January 29th - Lankaadeepa News Paper- (Paragraph-15,16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. Katharagama Deviyange Adaviye Haskam-Part 2-Ajithlaal Shanthaudaya- 2012 January 29th -Lankaadeepa News Paper- (Paragraph. 18, 19)

24. Katharagama Deviyange Adaviye Haskam-Part 6-Ajithlaal Shanthaudaya- 2012 March 4th -Lankaadeepa News Paper

25. Kebiliththa Dewalaye Haskam Vihiluvata Gath Kaanthavata Katharagama Deviyan Dun Apuru Danduvam- December 2, 2020 https://dknewsnepal.com/archives/558?__cf_chl_jschl_tk

26. Kebiliththa Dewalaye Ithihasa Kathaava-Article by K.D.Dewapriya
https://www.divaina.com/2015/01/25/feature01.html

27. Kebiliththa Dewalaye Haskam-
https://www.divaina.com/2015/01/25/feature01.html



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிலித்தை கந்தசுவாமி கோயில் - வரலாறும், மரபுகளும்

**என்.கே.எஸ்.திருச்செல்வம்**



இலங்கையின் தென்பகுதியில் உள்ள யாள காட்டின் மத்தியில் ஓர் சக்தி வாய்ந்த கந்தசுவாமிக் கோயில் இருப்பது தமிழர்கள் பலருக்குத் தெரியாத விடயமாகும். சிங்கள மக்களால் போற்றி வழிபடப்படும் இத்திருத்தலமே முருகப் பெருமான் நிஷ்டையில் அமர்ந்திருக்கும் இடம் எனவும், பண்டைய காலம் முதல் இத்தலம் வேடர்களால் வழிபடப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. "கபிலித்தை கந்தசுவாமி கோயில்-வரலாறும், மரபுகளும்" எனும் இந்நூல் இக்கோயிலின் வரலாறு, வேடர்கால மரபுகள் மற்றும் இக்கோயிலுக்கு யாத்திரை செல்வதற்கான வழிமுறைகள் ஆகியவை பற்றிக் கூறும் அரிய நூலாகும்.

இந்நூலாசிரியர் தமிழ்மாமணி திருச்செல்வம் அவர்கள் கிழக்கிலங்கை அம்பாறையில் பிறந்தாலும் சுமார் 35 வருடங்களாக தலைநகர் கொழும்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். இவர் இந்தியாவில் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி கோட்டையூர் வெள்ளையத் தேவரின் கொள்ளுப் பேரனும், நல்லமுத்து தேவரின் பேரனுமாவார். இவரது பெற்றோரான கல்யாண சுந்தரம், இராமக்காள் தமிழ் நாட்டையும், இலங்கையில் திருகோணமலையையும் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் கலைமாணிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராகப் பணியாற்றும் ஆய்வாளர் திருச்செல்வம் வரலாற்றுத் துறையிலும், தமிழ்த் திரைப்படத் துறையிலும் கொண்ட ஈடுபாட்டால் 200க்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று பலராலும் பாராட்டப் பெற்றவர். இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருப்பதுடன் முன்னணியி லுள்ள சமூக, சமய அமைப்புகளிலும் பொறுப்பான பதவிகளை வகித்து வருகின்றார்.

தமிழ் சைவசமயம் தமிழ்க்கலைகள் தொடர்பான ஆழமான அறிவுத் தேடலும், அவற்றைத் தெளிவாக விளக்கும் ஆற்றலும் இருப்பதால் திருச்செல்வம் இலங்கையின் பல பாகங்களில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகள், கலந்துரையாடல்களிலும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விருப்புடன் அழைக்கப்பட்ட நம் நாட்டுப் பிரதிநிதியும் ஆவார். தமிழ்மாமணி விருது, நுழைபுலம் ஆய்வு விருது, தமிழியல் விருது, இலங்கை இலக்கிய பேரவை விருது, வரலாற்று ஆய்வு கேசரி விருது, வித்தகர் விருது ஆகிய விருதுகளைப் பெற்ற திருச்செல்வம் தொடர்ந்து தேடல் மற்றும் வரலாற்று ஆய்வுகள் மூலமான முடிவுகளைப் பதிவுகளாக்கி, அவற்றால் பயனுறு பணிகள் பல ஆற்றிட அவரைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**பேராசிரியர் சோ.சந்திரசேகரன்**
ஓய்வுநிலை பேராசிரியர்
கொழும்பு பல்கலைக்கழகம்

ISBN 978-955-3726-11-7

விலை ரூபா 390.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org